## (ஒ) வெளிநாட்டு வர்த்தகம்

### பொதுப்படையான போக்குகள்

1968ம் ஆண்டில் மொத்த உள்நாட்டு ஏற்றுமதி வருமானங்கள், சென்ற ஆண்டுடன் ஒப்புநோக்குகையில் ரூபா நியதிகளின்படி கூரிய அதிகரிப்பைப் பதிவுசெய்து, இதுவரை காலமும் பதிவுசெய்யப்பட்ட தொகையிலும்பார்க்க மிகக் கூடிய மட்டத்தையடைந்தன. வருமானங்களின் இவ்வதிகரிப்பு, 1965 தொடக்கம் காணப்பட்ட வீழ்ச்சிப் போக்கை மாற்றியமைக்க உதவியது. 1968ன் ஏற்றுமதி இறக்குமதிப் பெறுமானங்களை முந்திய வருடங்களுடன் ஒப்பிடும்போது, 1967 நவெம்பரில் ஏற்பட்ட நாணய மதிப்பிறக்கத்தினால் விளைவுற்ற உயர்ந்த வருமானங்களுக்கு இடம்விட்டு நோக்குதல் வேண்டும்.

1968ம் ஆண்டில், மீள ஏற்றுமதிகள் உட்பட ஏற்றுமதிகளின் பெறுமதி 20,350 இலட்சம் ரூபாய்களாகவும், இறக்குமதிகளின் பெறுமதி 21,730[1] இலட்சம் ரூபாய்களாகவும் அமைந்து 1,380 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வணிகப் பொருள் வர்த்தகக் குறையை விளைவித்தது.

1963ம் ஆண்டடைந்த குறைந்த மட்டங்களிலிருந்து தளராது திருத்த முற்றுக்கொண்டுவந்த ஏற்றுமதி வருமானங்கள் 1966, 1967ம் ஆண்டுகளில் வீழ்ச்சியுற்றன. 1968ல் இலங்கை ஏற்றுமதிகளின் பெறுமதி 20,350 இலட்சம் ரூபாய்களாக[2] அமைந்து, 1967ம் ஆண்டு பதிவுசெய்யப்பட்ட பெறுமதியிலும்பார்க்க 3,450 இலட்சம் ரூபாய்கள் அல்லது 20 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தது.

1966ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1967ல் ரூபா 2,900 இலட்சத்தால் அல்லது 14 சதவீதத்தாற் கூர்மையாக வீழ்ச்சியுற்ற இறக்குமதிப் பெறுமானம் 1968ல் மிகக் கூர்மையாக விரிவுற்று ரூபா 21,730 இலட்சமாக அமைந்து, 1967லும்பார்க்க ரூபா 4,350 இலட்சத்தால் அல்லது 25 சதவீதத்தால் உயர்வுற்றது.

ஏற்றுமதிகளின் ரூபாய்ப் பெறுமானம் கூடுதலாக அதிகரித்தபோதும், 1968ல் மொத்த வர்த்தக நிலை ரூபா 1,380 இலட்சம் கொண்ட வணிகப் பொருள் வர்த்தக நிலுவைக் குறைவைப் பதிவுசெய்தது. இதனை 1967இன் 480 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வர்த்தகக் குறையுடன் ஒப்புநோக்கலாம். அட்டவணை II (ஒ) 1 சுங்கப் புள்ளிவிவரங்களின்படி, இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக விவரங்களைத் தருகின்றது.

---

1. இறக்குமதிகளின் மொத்தத் தொகையைக் கவனத்துடன் விளங்கிக்கொள்ளுதல் வேண்டும். இறக்குமதிகளை வெளிக்கொணர்வதற்கும், தொடர்பான சுங்கப் பதிவேட்டிற் பதிவுசெய்வதற்கும் இடையிலே குறிப்பிடத்தக்க கால தாமதம் இருக்குமாயின், சென்ற ஆண்டறிக்கைகளிற் குறிப்பிட்டுள்ளபடி, சுங்கத்தில் எந்தவொரு காலப் பகுதியிலும் உண்மையாகப் பெறப்பட்டு வெளிக்கொணரப்பட்ட இறக்குமதிகளின் பெறுமானத்திற்கும், சுங்கத் தரவுகள் பெறப்படுகின்றதான, சுங்கப் பதிவுகளில் அவை பிரதிபலிக்கின்ற பெறுமானத்திற்குமிடையே கணிசமான அளவு வேறுபாடு இருத்தல்கூடும். இக்கூற்று முக்கியமாக அரசாங்க இறக்குமதிகளுக்கு மிகக் குறிப்பாக மொத்த இறக்குமதிகள் உயர்ந்த விகிதாச்சாரம் வகிக்கும் அரிசி, சீனி, கோதுமைமா இறக்குமதிகளுக்குப் பொருத்தமானதாகும். இம் மூன்று இறக்குமதிகளின் உண்மைத்தரவுகளுக்கும், அவை சம்பந்தமாகச் சுங்கப் புள்ளிவிவரங்களிற் பதிவுசெய்யப்பட்டுள்ள தரவுகளுக்குமிடையிலான வேற்றுமை ஓரளவு விரிவாகப் பின்னுள்ள பகுதிகளிற் கூறப்பட்டுள்ளது.

2. ஐக்கிய அமெரிக்க டொலர்களின் நியதியில், இலங்கையின் மொத்த ஏற்றுமதி வருமானங்கள் 1968இல், 3,420 இலட்சமாக அமைந்து 1967இன் வருமானங்களிலும்பார்க்க 130 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன.

அட்டவணை *II* (ஒ) 1

வெளிநாட்டு வர்த்தகம் 1964—68

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | குறிகாட்டிகள் ( 1958 = 100 ) | | | | வர்த்தக மாற்று வீதங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | அளவு | | விலை | | |
| | ஏற்றுமதிகள்* (க.ஏ.பெ.) | இறக்குமதிகள் (கொ. கா. க.) | வர்த்தக நிலுவை | முழு ஏற்றுமதிகள் | முழு இறக்குமதிகள் | முழு ஏற்றுமதிகள் | முழு இறக்குமதிகள் | |
| 1964 | 1,876 | 1,975 | — 99 | 119 | 105 | 93 | 107 | 86 |
| 1965 | 1,949 | 1,474 | +475 | 125 | 77 | 95 | 109 | 88 |
| 1966 | 1,700 | 2,028 | —328 | 114 | 107 | 90 | 119 | 76 |
| 1967 | 1,690 | 1,738 | — 48 | 119 | 85 | 85 | 132 | 69 |
| 1968 | 2,035 | 2,173 | —138 | 121 | 83 | 101 | 160 | 64 |

மூலம் : இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்; இலங்கை மத்திய வங்கி.

* திருப்பி ஏற்றுமதி செய்யப்பட்டவையும் அடங்கும்.

முந்திய ஆண்டிலும் மேலாக 1967ல் 4 சதவீதத்தால் அதிகரித்த ஏற்றுமதிகளின் மொத்த அளவு 1968ல் சிறிய அளவால் அதிகரித்தது. 1968ற்கான இலங்கை மத்திய வங்கியின் ஏற்றுமதி அளவுக் குறிகாட்டி 121 புள்ளிகளாக (1958=100) அமைந்து, முந்திய ஆண்டிலும்பார்க்க 2 சதவீதங்கொண்ட அதிகரிப்பைக் காட்டிற்று. 1965ல் 2 சதவீதத்தால் அதிகரித்த சகல ஏற்றுமதிகளினதும் சராசரி விலை 1966லும் 1967லும் வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தது. சராசரி விலைகளின் வீழ்ச்சிப்போக்கு 1968ல் மாற்றியமைக்கப்பட்டு, சகல ஏற்றுமதிகளினதும் சராசரி விலைக் குறிகாட்டி 101 புள்ளிகளாக அமைந்து (1958=100) 1967ன் மட்டத்திலும்பார்க்க 19 சதவீதத்தால் உயர்வுற்றது. ஏற்றுமதி விலைகளின் அதிகரிப்பு இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கத்தால் ஏற்பட்டதாகும். எனவே, 1968ன் ஏற்றுமதிப் பெறுமானத்திலேற்பட்ட கூரிய அதிகரிப்பிற்கு, ஏற்றுமதிகளினது சராசரி விலையின் குறிப்பிடத்தக்களவான உயர்ச்சியே பெரும் காரணமாக இருக்கையில், அதன் விளைவு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவிலேற்பட்ட சிறிய அதிகரிப்பினுல் வலுவாக்கப்பட்டது.

1966ல் இறக்குமதிகளின் அளவு (மத்திய வங்கி வர்த்தகக் குறிகாட்டிகளினுல் அளவிட்டபடி, 1958=100), முந்திய ஆண்டின் அளவுக் குறிகாட்டியுடன் ஒப்புநோக்குமிடத்து, ஓரளவு உயர்வாகவிருந்தது. 1966ம் ஆண்டு இறக்குமதிகளின் மொத்த அளவிற் பதிவுசெய்யப்பட்ட அதிகரிப்பு, 1967ல் மாற்றியமைக்கப்பட்டு, வங்கியின் குறிகாட்டி 85 புள்ளிகளுக்கு 21 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. 1968இல் மேலுமொரு வீழ்ச்சியேற்பட்டு மொத்த அளவுக் குறிகாட்டி 83 புள்ளிகளுக்கு 2 சதவீதத்தாற் குறைவுற்றது. 1963 முதல் தளராது அதிகரித்துவந்த சகல இறக்குமதிகளினதும் சராசரி விலை, மீளப்பார்வையிடும் ஆண்டிலும் தனது உயர்ச்சிப் போக்கைத் தொடர்ந்தது. சகல இறக்குமதிகளுக்குமான மத்திய வங்கியின் விலைக் குறிகாட்டி (1958=100) 160 புள்ளிகளாக அமைந்து, 1967ம் ஆண்டின் மட்டத்திலும்பார்க்க 30 சதவீதமான கூரிய அதிகரிப்பைப் பதிவுசெய்தது. எனவே, 1968ன் இறக்குமதிப் பெறுமானத்திலேற்பட்ட கூரிய அதிகரிப்பு சகல இறக்குமதிகளினதும் சராசரி விலையிலேற்பட்ட கூரிய உயர்ச்சியினுலாகும்; இதன் விளைவு, இறக்குமதியளவிலேற்பட்ட ஒரு சிறிய வீழ்ச்சியினுல் ஓரளவு தணிக்கப்பட்டது.

கடந்த ஈராண்டுகளிலும் 1966ல் 13 சதவீதத்தாலும் 1967ல் 9 சதவீதத்தாலும் சீர்கேடடைந்திருந்த வர்த்தக மாற்றுவிகிதம் (மத்திய வங்கியின் குறிகாட்டிகளினுல் அளவிட்டபடி) 1968இலும் சீர்கேடடைந்தது,

வர்த்தக மாற்றுவிகிதம்பற்றிய வங்கியின் குறிகாட்டி 1967ம் ஆண்டின் 69புள்ளிகலிருந்து 1968ல் 64 புள்ளிகளுக்கு அதாவது 7 சதவீதத்தால்குறைவுற்றது.

சுங்கத் தரவுகளிற் பதியப்பட்டபடியான மொத்த இறக்குமதி எண்தொகைகள் 1968ம் ஆண்டில் உண்மையாகப் பெறப்பட்ட இறக்குமதிகளின் பெறுமானத்தை மிகைத்துக் கூறியுள்ளன. 1967ல் இறக்குமதிகளின் சுங்கப் பதிவேடுகள் உணவு ஆணையாளராற் பெறப்பட்ட அரிசி, சீனி, கோதுமை மா இறக்குமதிகளின் உண்மைப் பெறுமானத்தை ரூபா 350 இலட்சத்தாற் குறைத்துக் கூறியிருக்கையில், 1968ல் அவை உணவு ஆணையாளரின் இவ்விறக்குமதிப் பொருட்களை ரூபா 340 இலட்சத்தால் மிகைப்படுத்திக் கூறியுள்ளன.

சுங்கத் தரவுகளிற் பதியப்பட்டுள்ளபடியான 1967, 1968ல் மொத்த இறக்குமதிகள் உணவு ஆணையாளரால் உண்மையாகப் பெறப்பட்ட அரிசி, சீனி, கோதுமை மா இறக்குமதிகளைப் பிரதிபலிப்பதற்காகச் சீராக்கம் செய்யப்படின், 1967ன் மொத்த இறக்குமதிப் பெறுமானம் ரூபா 17,380 இலட்சத்திலிருந்து ரூபா 17,730 இலட்சத்திற்கு உயர்த்தப்பட்டும், 1968 இன் இறக்குமதிப் பெறுமானம் ரூபா 21,730 இலட்சத்திலிருந்து ரூபா 21,390 இலட்சத்திற்குக் குறைக்கப்பட்டும் காணப்படும். இவ்வாறு சீராக்கம் செய்யப்பட்ட தரவுகளின் அடிப்படையில் 1968ன் இறக்குமதிப் பெறுமானம் முந்திய ஆண்டின் மட்டத்திலும்பார்க்க ரூபா 3,660 இலட்சம் அல்லது 21 சதவீதம் அதிகமானதாகும்.

சுங்கத் தரவுகளின்படி, வணிகப் பொருள் வர்த்தக நிலுவையில் முந்திய ஆண்டிலேற்பட்ட ரூபா 480 இலட்சம் கொண்ட குறைக்கெதிராக, 1968ல் ரூபா 1,380 இலட்சம் கொண்ட குறை பதிவுசெய்யப்பட்டது. உணவு ஆணையாளரின் உண்மை இறக்குமதிகளுக்குச் சீராக்கஞ் செய்யப்பட்ட தரவுகளின்படி, 1967ன் வர்த்தக நிலுவைக் குறை ரூபா 480 இலட்சத்திலிருந்து ரூபா 830 இலட்சத்திற்கு உயர்ந்ததாயும், 1968ன் குறை ரூபா 1,380 இலட்சத்திலிருந்து ரூபா 1,04 இலட்சத்திற்குக் குறைந்ததாயும் காணப்படும்.

### ஏற்றுமதிகள்

1968ல் ஏற்றுமதி வருவாய்களிலேற்பட்ட ரூபா 3,450 இலட்சம் கொண்ட பெரிய விரிவு, பெரும்பாலும் மூன்று பிரதான தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி வருமானங்களிலேற்பட்ட கூரிய அதிகரிப்பினாலாகும். தேயிலை, இரப்பர் ஏனைய உள்நாட்டுப் பொருட்களிலிருந்து கிடைத்த வருமானங்களும், குறைவாகவேனும் குறிப்பிடத்தக்க அளவுகளால் அதிகரித்திருக்கையில், மீள ஏற்றுமதிகளிலிருந்து கிடைத்த வருமானங்கள் மிக மட்டமான அளவால் அதிகரித்தன. அட்டவணை II (ஒ) 2, ஏற்றுமதிகளின் கூறுகளையும், மொத்த ஏற்றுமதி வருமானங்களில் அவற்றின் ஒப்பியல் விகிதாசாரப் பங்குகளையும் காட்டுகின்றது.

அட்டவணை II (ஒ) 2

ஏற்றுமதிகளின் அமைப்பு 1964—68

| பொருட்கள் | பெறுமானம் ப.இ. ரூபாய்களில்* | | | | | மொத்தஏற்றுமதிகளின்சதவீதமாக | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 |
| தேயிலை ... ... ... ... | 1,148 | 1,210 | 1,027 | 1,061 | 1,162 | 61 | 62 | 60 | 63 | 57 |
| இரப்பர் ... ... ... ... | 290 | 304 | 337 | 282 | 331 | 15 | 16 | 20 | 17 | 16 |
| 3 பிரதான தெங்குப் பொருட்கள் ... ... | 273 | 275 | 196 | 167 | 331 | 15 | 14 | 12 | 10 | 16 |
| இதன் பிரிவு: ... ... | | | | | | | | | | |
| (அ) கொப்பரா ... ... | 55 | 49 | 25 | 18 | 34 | 3 | 3 | 2 | 1 | 2 |
| (ஆ) தேங்காயெண்ணெய் | 154 | 144 | 108 | 88 | 133 | 8 | 7 | 6 | 5 | 7 |
| (இ) தேங்காய்த் துருவல் | 64 | 82 | 63 | 61 | 164 | 4 | 4 | 4 | 4 | 8 |
| ஏனைய உ. நாட்டுஏற்றுமதிகள் | 137 | 127 | 116 | 121 | 152 | 7 | 6 | 7 | 7 | 8 |
| மொத்த உ. நா. ஏற்றுமதிகள் | 1,842 | 1,916 | 1,676 | 1,631 | 1,976 | 98 | 98 | 99 | 97 | 97 |
| திருப்பி ஏற்றுமதிசெய்தவை | 34 | 33 | 24 | 59 | 60 | 2 | 2 | 1 | 33 | 3 |
| மொத்தம் | 1,876 | 1,949 | 1,700 | 1,690 | 2,035 | 100 | 100 | 100 | 100 | 100 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்.

* ஏற்றுமதி வருமானங்கள் கிட்டிய பத்து இலட்சம் ரூபாய்களுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

தேயிலையிலிருந்து பெற்ற ஏற்றுமதி வருமானங்கள், 1967 உடன் ஒப்பு நோக்குகையில், 1968ல் ரூபா 1,010 இலட்சத்தால் அல்லது 10 சத வீதத்தால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பு முழுவதும் சராசரிக் க.ஏ.பெ. ரூபா விலை அதிகரிப்பினால் ஏற்பட்டிருக்கையில் அதிலொரு பகுதியை எதிரீடுசெய்து ஏற்றுமதியளவு வீழ்ச்சியுற்றது. முந்தைய மூன்று ஆண்டு களிலும் வீழ்ச்சியுற்ற சராசரிக் க.ஏ.பெ. விலை இவ்வாண்டில் ஓர் அதிகரிப் பைப் பதிவுசெய்து. இருத்தலுக்கு ரூபா 2.52ஆக அமைந்து 1967இலும் பார்க்க இருத்தலுக்கு 30 சதங்களால் அல்லது 14 சதவீதத்தால் உயர் வுற்று விளங்கியது. 1968ல் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 4,600 இலட்சம் இருத்தல்களாக அமைந்து, முந்தைய ஆண்டிலும்பார்க்க 180 இருத்தல்கள் அல்லது 4 சதவீதம் குறைவாகவிருந்தது. மொத்த ஏற்றுமதி வருமானத்தில் தேயிலையின் பங்கு 57 சதவீதமாக அமைந்து, முந்தைய ஆண்டினத்திலும்பார்க்க 6 சதவீத வீழ்ச்சியைக் காட்டிற்று.

மறுபுறத்தில் இரப்பரின் ஏற்றுமதி வருவாய்கள் முந்தைய ஆண்டிலும் பார்க்க ரூபா 490 இலட்சத்தால் அல்லது 17 சதவீதத்தால் உயர்வுற்றன. இது இவ்வாண்டு ஏற்றுமதியளவிலும், சராசரிக் க.ஏ.பெ. விலையிலுமேற் பட்ட அதிகரிப்புக்களினாலாகும். ஏற்றுமதிகளின் அளவு முந்தைய ஆண்டிலும் பார்க்க 370 இலட்சம் இருத்தல்களால் அல்லது 13 சதவீதத்தால் உயர் வுற்றிருக்கையில், சராசரிக் க.ஏ.பெ. ரூபா விலை இருத்தலுக்கு ரூபா 1.01 ஆக இருத்தலுக்கு 4 சதத்தால் அதிகரித்தது. மொத்த ஏற்றுமதி வரு மானத்தில் இரப்பரின் பங்கு 16 சதவீதமாக அமைந்து, முந்தைய ஆண்டிலும் பார்க்க 1 சதவீதம் குறைவாகவிருந்தது.

மூன்று பிரதான தெங்குப்பொருட்களில் (கொப்பரா, தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல் ஆகியவற்றில்) இருந்து பெற்ற ஏற்றுமதி வருவாய்கள் கூர்மையாக அதிகரித்து, அதாவது முந்தைய ஆண்டிலும்பார்க்க ரூபா 1,640 இலட்சத்தால் அல்லது 98 சதவீதத்தால் உயர்வுற்று விளங்கின. இவ்வதிகரிப்பு அவற்றின் மொத்த ஏற்றுமதிகளிலேற்பட்ட 17 சதவீதம் கொண்ட கூரிய விரிவினாலும், அவற்றின் சராசரி விலையில் (மத்திய வங்கியின் வர்த்தகக் குறிகாட்டிகளினால் அளவிடப்பட்டபடி) ஏற்பட்ட மிகமேம்பட்ட 60 சதவீதம் கொண்ட அதிகரிப்பினாலுமாகும். மொத்த ஏற்றுமதி வருவாய் களில் இம்மூன்று பிரதான தெங்குப் பொருட்களினதும் பங்கு இவ்வாண்டில் 16 சதவீதமாகவிருந்தமை முந்தைய ஆண்டின் 10 சதவீதத்தோடு ஒப்பிடற் குரியது.

ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகளின் வருவாய்கள் 1967ல் ரூபா 50 இலட்சத்தால் அல்லது 4 சதவீதத்தால் அதிகரித்தமைக்கெதிராக 1968ல் ரூபா 310 இலட்சத்தால் அல்லது 26 சதவீதத்தால் உயர்வுற்றன. 1967ல் கணிசமான அதிகரிப்பைக் காட்டிய மீள ஏற்றுமதிகளின் பெறுமானம் 1968ல் மேலும் ரூபா 10 இலட்சத்தால் அதிகரித்தது.

குறித்த சில சிறு ஏற்றுமதிப் பொருட்களின் ஏற்றுமதி அளவுகள், விலை கள், பெறுமானங்கள்பற்றிய விபரமான ஆய்வு 297ஆம் பக்கத்திற் கொடுக்கப்பட்டுள்ளது.

தேயிலை

1968இலே தேயிலை உற்பத்தி 4,960 இலட்சம் இருத்தல்களாகும். இது முந் தைய ஆண்டின் உற்பத்தியிலும்பார்க்க 90 இலட்சம் இருத்தல்கள், அல்லது 2 சதவீதம் உயர்வானதாகும். எனினும், இது 1966ன் உற்பத்தியிலும் பார்க்க 60 இலட்சம் இருத்தல்களால், அல்லது 1 சதவீதத்தால் உயர்வாக வுள்ளது. 1966ன் உயர்ந்தமட்ட உற்பத்தி பெரும்பாலும் இவ்வாண்டின் இரண்டாம் கால், நாலாம் காற் பகுதிகளில் நிலவிய சாதகமான வானிலை களினால் ஏற்பட்டதாகும். மொத்த உற்பத்தியை உந்துவித்ததற்கு மேலு மொரு காரணி, சென்ற ஆண்டிலும்பார்க்கக் கூடுதலான உற்பத்தியாளர் விலைகளாயிருக்கவும் கூடும். இக்கூற்றுத் திடமாக நிலைநிறுத்த முடியாததா யினும், தொடர்ச்சியாக உயர்ச்சியுறும் விலைகளின் பயன் பெரும்பாலும்

உற்பத்தியை விரிவுறச் செய்வதற்குத் தூண்டுதலாய் இருந்திருக்கலாம்.1 அதிகரித்த உற்பத்தியாளர் விலைகள், 1967 நவெம்பரில் இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கத்தினுல் ஏற்பட்டதாகும். உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பில் சகல முப்பிரதேசங்களும் பங்குகொண்டிருந்தன. 1967ம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் உயர்ந்த, மத்திய, தாழ்ந்த பிரதேசங்களில் ஒப்பியல் உற்பத்திகள் முறையே 27 இலட்சம் இருத்தல்கள், 41 இலட்சம் இருத்தல்கள், 20 இலட்சம் இறத்தல்களால் அதிகரித்தன. உற்பத்தி, ஏற்றுமதிகள், கொழும்பு ஏலங்களுக்கு விற்பனைக்கு இடப்பட்ட அளவுகள், இலண்டன் ஏலங்களுக்கு நேரடியாகக் கப்பலேற்றப்பட்ட அளவு, தனிப்பட்ட உடன்படிக்கைகளின்கீழ் விற்கப்பட்ட அளவு ஆகியனபற்றிய விவரங்கள் அட்டவணை II (ஒ) 3ல் தரப்பட்டுள்ளன.

### அட்டவணை II (ஒ) 3

உற்பத்தியும், ஏற்றுமதிகளும், கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்ட அளவுகளும், இலண்டன் ஏலங்களுக்கென கப்பலிடப்பட்ட அளவுகளும்

பத்து இலட்சம் இருத்தல்களில்

| ஆண்டு | உற்பத்தி | ஏற்றுமதிகள் | | கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்ட அளவு | இலண்டன் ஏலங்களுக்கென நேரடியாகக் கப்பலிட்ட | தனிப்பட்ட விற்பனவுகள்* |
|---|---|---|---|---|---|---|
| | | சுங்கத் தரவு | உண்மையில் கப்பலிடப்பட்டவை | | | |
| 1965 ... | ... 503 | 495 | 474 | 368 | 125 | — |
| 1966 ... | ... 490 | 441 | 441 | 359 | 108 | — |
| 967 ... | ... 487 | 478 | 480 | 369 | 110 | 5 |
| 1968 ... | ... 496 | 460 | 446 | 369 | 111 | 5 |

மூலங்கள்: தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கைகள், இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள், கொழும்புத் தேயிலைத் தரகர் சங்கம்.

* தேயிலையின் தனிப்பட்ட விற்பனவுகள் 1958ம் ஆண்டு மாச்சு 1ம் திகதிமுதல் நடைபெற்று வருகின்றன. இவ்விற்பனவுகள் ஐக்கிய அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் மாத்திரமே.

1968ல் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் அளவு 1967லும் பார்க்க 180 இலட்சம் இருத்தல்களால் அல்லது 4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஏற்றுமதி அளவிலேற்பட்ட வீழ்ச்சி 1968 சனவரி ஏப்பிறல் காலப் பகுதியில் வர்த்தகத் துறையிலேற்பட்ட வேலைநிறுத்த நிலைமைகளினுலாகும். 1968ல் கொழும்பு ஏலங்களில் விற்பனையான தேயிலை 3,690 இலட்சம் இருத்தல்களாகவும் இலண் டன் ஏலங்களுக்கென நேரடியாகக் கப்பலிடப்பட்ட தேயிலை 1,110 இலட்சம் இருத்தல்களாகவும் இருந்தன. 1967ம்

1. 1968ன் முதலாம் காற்பகுதியில் தேயிலை உற்பத்தியானது தேயிலைவளர் பிரதேசங்களில் நிலவிய வரட்சியிற் பாதிக்கப்பட்டது.

பத்து இலட்சம் இருத்தல்கள்
முதலாம் கால்

| | 1968 | 1967 | 1966 |
|---|---|---|---|
| உயர்ந்த பிரதேசம் ... ... ... | 40.3 | 44.7 | 51.7 |
| நடுத்தரப் பிரதேசம் ... ... ... | 39.9 | 41.8 | 42.7 |
| தாழ்ந்த பிரதேசம் ... ... ... | 28.3 | 29.4 | 34.3 |
| சகல தேயிலைகளும் ... ... ... | 108.5 | 116.0 | 128.8 |

மூலம்: தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்.

ஆண்டிற்குரிய ஒப்பியல்பான தொகைகள் முறையே 3,690 இலட்சம் இருத்தல்களும் 1,100 இலட்சம் இருத்தல்களுமாகும். தனிப்பட்ட விற்பனைகளினூடாக விற்பனை செய்யப்பட்டவை 50 இலட்சம் இருத்தல்களாகும். 1967 இலும் இத்தொகை 50 இலட்சம் இருத்தல்களாகவேயிருந்தது. கிடைக்கக் கூடிய தரவுகளின்படி, தயாரிக்கப்பட்ட தேயிலைகளின் கையிருப்புக்கள், 1967 நவெம்பர் இறுதிக்குரிய 470 இலட்சம் இருத்தல்களிலிருந்து 1968 நவெம்பர் இறுதியில் 630 இலட்சம் இருத்தல்களுக்கு உயர்வுற்றன.[1]

சுங்கப் புள்ளிவிவரங்களின்படி ஐக்கிய இராச்சியமே இலங்கையின் மிகச் சிறந்த வாடிக்கைக்காரராகவிருந்தது. அதன் கொள்வனவுகள் 1967ற் குரிய 1,830 இலட்சம் இருத்தல்களுக்கெதிராக 968ல் 1,630 இலட்சம் இருத்தல்களாகவிருந்தன. மொத்தத் தேயிலை ஏற்றுமதிகளில் ஐக்கிய இராச்சியத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டவை 1967ல் 38 சதவீதமானவையாகவும், 1968ல் 35 சதவீதமானவையாகவும் இருந்தன. ஈராக்கின் கொள்வனவுகள், 1967ம் ஆண்டின் 290 இலட்சம் இருத்தல்களுக்கெதிராக, 1968ல் 420 இலட்சம் இருத்தல்களாக அமைந்து, இரண்டாவது பெரிய கொள்வனவுகளாக விளங்கின. மொத்தத் தேயிலை ஏற்றுமதிகளில் ஈராக்கின் பங்கும் 1967ற்குரிய 6 தவீதத்திற்கெதிராக 1968ல் 9 சதவீதமாக விளங்கிற்று. ஐக்கிய அமெரிக்க நாடுகள் மூன்றாவது இடத்தை வகித்து, அதன் கொள்வனவுகள் 1967ற்குரிய 460 இலட்சம் இருத்தல்களுக்கு (மொத்த ஏற்றுமதிகளிற் 10 சதவீதத்திற்கு) - திராக, 1968ல் 380 இலட்சம் இருத்தல்களாக (மொத்த ஏற்றுமதிகளில் 8 சதவீதமாக) விளங்கின. அவுஸ்திரேலியா நாலாவது இடத்தை வகித்து, அதன் கொள்வனவுகள் முந்திய ஆண்டின் 410 இலட்சம் இருத்தல்களுக்கு (அதாவது 9 சதவீதம்) எதிராக, 1968ல் 360 இலட்சம் இருத்தல்களாக (அதாவது 8 சதவீதமாக) அமைந்தன.

**கொழும்பு ஏலவிற்பனைகள்**

1967ம் ஆண்டு நாலாம் காற்பகுதியில் ஆரம்பித்த தேயிலைச் சந்தை விலைகளின் அதிகரிப்பு, 1968ம் ஆண்டின் மூன்றும் காற்பகுதிவரை தொடர்ச்சியுற்றது. எனினும், 4ம் காற்பகுதியில் சகல மூன்று ஏற்றப் பிரதேசங்களினதும் தேயிலை விலைகள் வீழ்ச்சியுற்றன. இவ்விலை வீழ்ச்சிக்கான காரணம் ஒரளவில் பருவகாலத் தரவீழ்ச்சியினாலும் மற்றோரளவில் இக் காலப் பகுதியில் அதிகரித்த அறுவடையினால் ஏற்பட்ட உயர்ந்த நிரம்பல்களினாலும் ஆகும்.[2] கொழும்புச் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட சகல தேயிலைகளினதும் சராசரித் தேறிய விலை, 1967ல் இருத்தலுக்கு 7 சதத்தால் அல்லது 4 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருக்கையில், 1968ல் கூர்மையாக இருத்தலுக்கு 25 சதத்தால் அல்லது 17 சதவீதத்தால் அதிகரித்து இருத்தலுக்கு ரூபா 1/75ஆக விளங்கிற்று. இவ்வதிகரிப்பு மூன்று உயரப் பிரதேசத் தேயிலைகளினாலும் பங்குபற்றப்பட்டது. மூன்று தேயிலைப் பிரதேசத் தேயிலைகளின் விலைகளும் அதிகரித்தனவெனினும், அவற்றின் ஒவ்வொரு தரங்களுக்குமிடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசமான அதிகரிப்புக்கள் காணப்பட்டன. உயர்ந்த பிரதேசத் தேயிலையின் தேறிய விலைகள் இருத்தலுக்கு 11 சதம் கொண்ட அல்லது 6 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்திருக்கையில், நடுத்தரப் பிரதேசத் தேயிலைகள், இருத்தலுக்கு 20 சதத்தால் அல்லது 14 சதவீதத்தால் உயர்வுற்றன. எனினும், மிகக் கூர்மையான அதிகரிப்பு தாழ்ந்த பிரதேசத் தேயிலைகளிலேயே ஏற்பட்டது. அவற்றின் தேறிய விலை இருத்தலுக்கு ரூபா 1/63ஆக அமைந்து, இருத்தலுக்கு 43 சதம் அல்லது 36 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவு செய்தது. அட்டவணை II ஒ (4), தேயிலையினது உற்பத்தி ஏற்றுமதிகள் விலைகள் ஆகிய தகவுகளைக் காட்டுகின்றது.

---

1. தேயிலைக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தாற் கொடுக்கப்பட்ட தரவுகள்.
2. வோப்ஸ் அன்ட் வாக்கர் லிமிற்றெட்,1968 திசெம்பர் 31இல் முடிவான காலாண்டுக்குரிய சந்தையறிக்கை, ப. 2உம் 5உம்.

## அட்டவணை II (ஒ) 4

### தேயிலை உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும் 1964—1968

| ஆண்டு | உற்பத்தி | ஏற்றுமதிகள் | | கொழும்பு ஏலச்சராசரி (தேறிய) விலைகள் இருத்தலுக்கு ரூபா | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | அளவு ப. இ. இருத் தல்கள் | அளவு ப. இ. இருத் தல்கள் | க.ஏ.பெ. விலை இருத்தலுக்கு ரூ. ச. | உயர்ந்த பிரதேசம் ரூ. ச. | மத்திய பிரதேசம் ரூ. ச. | தாழ்ந்த பிரதேசம் ரூ. ச. | சகல தேயிலைகளும் ரூ. ச. |
| 1964 ... ... | 482 | 456 | 2.51 | 1.93 | 1.58 | 1.49 | 1.68 |
| 1965 ... ... | 503 | 495 | 2.45 | 1.93 | 1.66 | 1.64 | 1.75 |
| 1966 ... ... | 490 | 441 | 2.33 | 1.84 | 1.46 | 1.37 | 1.57 |
| 1967 ... ... | 487 | 478 | 2.22 | 1 82 | 1.47 | 1.20 | 1.80 |
| 1968 ... ... | 496 | 460 | 2.52 | 1.93 | 1.67 | 1.63 | 1.75 |
| 1967 1ம் காலாண்டு ... | 116 | 121 | 2.31 | 1.89 | 1.46 | 1.10 | 1.48 |
| 2ம் காலாண்டு ... | 143 | 118 | 2.17 | 1.66 | 1.33 | 1.04 | 1.34 |
| 3ம் காலாண்டு ... | 104 | 137 | 2.10 | 1.80 | 1.44 | 1.20 | 1.48 |
| 4ம் காலாண்டு ... | 124 | 102 | 2.34 | 1.97 | 1.70 | 1.49 | 1.72 |
| 1968 1ம் காலாண்டு ... | 109 | 108 | 2.48 | 1.97 | 1.67 | 1.61 | 1.75 |
| 2ம் காலாண்டு ... | 157 | 89 | 2.51 | 1.92 | 1.67 | 1.69 | 1.76 |
| 3ம் காலாண்டு ... | 91 | 156 | 2.52 | 1.97 | 1.73 | 1.67 | 1.79 |
| 4ம் காலாண்டு ... | 139 | 107 | 2.58 | 1.86 | 1.60 | 1.58 | 1.68 |

மூலங்கள்: தேயிலைக் கட்டுப்பாட்டு அதிகாரியின் நிர்வாக அறிக்கைகள், இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள், கொழும்புத் தேயிலைத் தரகர் சங்கம்.

1968 முதலாம் காற்பகுதியில் உயர்ந்த பிரதேசத் தேயிலைகளின் தேறிய விலை, தொடர்பான 1967ன் முதற் காற்பகுதியுடன் ஒப்பிடுகையில், இருத்தலுக்கு 8 சதத்தால் அதிகரித்தது. டிம்புல்லை/டிக்கோயா பருவ காலம் முடிவடைந்ததும், இரண்டாம் காற்பகுதியின் சந்தை விலைகள் முந்திய காற் பகுதிகளிலும்பார்க்க இருத்தலுக்கு சராசரி 5 சதத்தாற் குறைந்து, இருத்தலுக்கு ரூபா 1.92ஆக விளங்கின. 1967ஆம் ஆண்டின் தொடர்பான காலாண்டுடன் ஒப்பிடுகையில், இவ்விலை இருத்தலுக்கு 26 சதம் உயர்வான தாகும். மூன்றும் காற்பகுதியில் உயர்ந்த பிரதேசத் தேயிலையின் சந்தை விலைகள் சீர்திருத்தமடைந்து, இருத்தலுக்கு ரூபா 1.97ஆக அமைந்து, முந்திய ஆண்டின் ஒப்பியல்பான காலப்பகுதியிலும்பார்க்க இருத்தலுக்கு 17 சதம் உயர்வாகக் காணப்பட்டன. ஆயினும், இவ்வாண்டின் கடைக்காற் பகுதியில் ஊவா தேயிலைகளின் காலபோகத் தரங்கள் வீழ்ச்சியுற்றமையாலும், இக்காலப் பகுதியில் அறுவடை உயர்ச்சியுற்றமையினாலேற்பட்ட அதிகரித்த நிரம்பல்களினாலும், சந்தை விலைகளில் ஓர் அமுக்கத்தை உண்டுபண்ணின. இதனால் இக்காலாண்டில் சராசரி விலை, இருத்தலுக்கு ரூபா 1.86 சதமாக அமைந்து, முந்திய காலாண்டுடனும் தொடர்பான 1967ம் ஆண்டின் காலாண்டுடனும் ஒப்பிடுகையில், இருத்தலுக்கு 11 சதத்தால் வீழ்ச்சியுற்றது.

நடுத்தரப் பிரதேசத் தேயிலைகளின் தேறிய சராசரி விலை, உயர்ந்த பிரதேசத்தவையினது விலைப் போக்கினைப் பின்பற்றி இவ்வாண்டில் முதல் மூன்று காற்பகுதிகளிலும் கூரிய அதிகரிப்பைப் பதிவுசெய்தது. 1968ல் முதற் காற்பகுதியின் சராசரி விலை தொடர்பான 1967ன் காலாண்டுடன் ஒப்பிடுகையில், இருத்தலுக்கு 21 சதத்தால் அதிகரித்திருக்கையில், அவை 2ம் 3ம் காற்பகுதிகளில் முறையே இருத்தலுக்கு 34 சதத்தாலும், 29 சதத்தாலும் அதிகரித்தன. எனினும், கடைக்காற்பகுதியில், அவை உயர்ந்த பிரதேசத் தேயிலைகளின் போக்கிற்கிணங்க இருத்தலுக்கு 10 சதத் தால் வீழ்ச்சியுற்றன.

இவ்வாண்டில் தாழ்ந்த பிரதேசத் தேயிலைகள் தொடர்ச்சியாகச் சீர்திருத்தமடைந்து, அவற்றின் ஒவ்வொரு காலாண்டுகளிலுமுள்ள சராசரி விலைகள் 1967ன் தொடர்பான காலாண்டுகளிலும்பார்க்கக் கூர்மையாக அதிகரித்துள்ளன. இந்நிகழ்ச்சி, பிரதானமாக மத்திய கிழக்கு வாங்குநர்

களின், குறிப்பாக இராக்கின் உயர்ந்த கேள்விகளினுலேற்பட்டதாகும். இராக்கிற்கான தேயிலை ஏற்றுமதி இவ்வாண்டில் மிகக் குறிப்பிடத்தக்களவு அதிகரித்து, 420 இலட்சம் இருத்தல்களாக விளங்கிற்று. இது, 1967இன் ஏற்றுமதியிலும்பார்க்க 130 இலட்சம் இருத்தல்கள் அல்லது 45 சதவீதம் கொண்ட அதிகரிப்பாகும். முதல் மூன்றும் காற்பகுதிகளுக்குமான தேறிய சராசரி விலைகள், தொடர்பான 1967ன் காலாண்டுகளுடன் ஒப்பிடுகையில், முறையே, இருத்தலுக்கு 51 சதத்தாலும், 65 சதத்தாலும், 47 சதத்தாலும் அதிகரித்தன. எனினும், மூன்றும் நாலாம் காலாண்டுகளின் விலைகள் முந்திய காலாண்டுகளின் விலைகளிலும்பார்க்கக் குறைவுற்று ஒரு குறைவான அதிகரிப்பு வீதத்தைக் காட்டின. கடைக்காலாண்டின் சராசரித் தேறிய விலையாகிய இருத்தலுக்கு ரூபா 1.58, 1967ன் ஒப்பியல்பான காலாண்டின் விலையிலும்பார்க்க இருத்தலுக்கு 9 சதம் கொண்ட அதிகரிப்பைத் தெரிவித்தது. 1968ன் 3ஆம் 4ஆம் காலாண்டுகளில் தாழ்ந்த பிரதேசத் தேயிலைகளின் சிறிய விலை அதிகரிப்புக்கள் பெரும்பாலும் மத்திய கிழக்கு நாடுகளின், குறிப்பாக செத்தெம்பரில் இராக்கின் கட்டுமட்டான கொள்வனவுகளாலும், நவெம்பர் 3 தொட்டு, மூன்று வார காலப் பகுதியில் இராக்கிய அரசாங்கக் கொள்வனவுச் சபை, கொழும்புச் சந்தையிலிருந்து நீங்கியமையினுலும் ஏற்பட்டதாகும்.1

1967 நவெம்பரில் இலங்கை ரூபா நாணய மதிப்பிறக்கம் செய்யப்பட்டமையைத் தொடர்ந்து, 1966 செத்தெம்பரிற் புகுத்தப்பட்ட ஏற்றுமதித் தீர்வைச் சலுகைத் திட்டம் நீக்கப்பட்டதுமன்றி, தேயிலை ஏற்றுமதித் தீர்வை இருத்தலுக்கு 39 சதத்திலிருந்து 40 சதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. நாணய மதிப்பிறக்கத்தின் பயனுக ஆக்கச் செலவுகள் அதிகரித்துள்ள தேயிலை உற்பத்தியாளருக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கமாக அரசாங்கம் 1968 சனவரி தொடக்கம் தேயிலை ஏற்றுமதித் தீர்வைச் சலுகைத் திட்டத்தை ஓரளவு திரிபுபடுத்திய முறையில் மீண்டும் புகுத்தியது. ஆரம்பத்திலிருந்து இத்திட்டம், கொழும்பு ஏலங்களினூடாக விற்பனை செய்யப்பட்ட சகல தாழ்ந்த பிரதேச, நடுத்தரப் பிரதேசத் தேயிலைகளுக்கும் இருத்தலுக்கு 5 சதம் கொண்ட சலுகை அளித்தலை இலக்காகக்கொண்டது. எனினும், 1968 ஒற்ரூேபர் 29ந் தேதியின் விற்பனை தொடக்கம், இத்திட்டம் கொழும்பு ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட உயர்ந்த பிரதேசத் தேயிலைகளுக்கும் அமைவாக்கப்பட்டது.

அட்டவணை II (ஒ) 5, 1968ல் சலுகை அளிக்கப்பட்ட தேயிலைகளின் அளவுகளையும், மொத்தச் சலுகைத் தொகைகளையும் காட்டுகின்றது.

அட்டவணை II (ஒ) 5

தேயிலை ஏற்றுமதித் தீர்வைச் சலுகைத் திட்டம், கொழும்பு ஏலங்கள்

| | சலுகை அளிக்கப்பட்ட தேயிலைகள் (இருத்தல்கள்) | அளிக்கப்பட்ட சலுகையின் பெறுமானம் (ரூபாய்கள்) |
|---|---|---|
| உயர்ந்த பிரதேச .. .. | 22,123,996 | 1,106,180 |
| நடுத்தரப் பிரதேச .. .. | 129,133,760 | 6,456,688 |
| தாழ்ந்த பிரதேச .. .. | 113,743,537 | 5,687,177 |
| சகல தேயிலைகளும் .. .. | 265,000,893 | 13,250,045 |

மூலம் : தேயிலைக் கட்டுப்பாடுத் திணைக்களம்.

1968ல் கொழும்பு ஏலங்களில் இடப்பட்ட 3,688 இலட்சம் இருத்தல்கள் கொண்ட சகல தேயிலைகளுள் 2,650 இலட்சம் இருத்தல்கள், 5 சதம் கொண்ட ஏற்றுமதித் தீர்வைச் சலுகையைப் பெற்றுள்ளனவென்பது கவனிக்கத்தக்கது. இத் திட்டத்தின்கீழான மொத்தச் சலுகைச் செலவு 1968ம்

1. வோப்ஸ் அன்ட் வாக்கர் லிமிற்றெட், 1968 செத்தெம்பரில் முடிவான காலாண்டுக்குரிய சந்தையறிக்கை—பக்கம் 4; 1968 திசெம்பர் முடிவான காலாண்டுச் சந்தையறிக்கை—பக்கம் 3.

ஆண்டில் ரூபா 133 இலட்சமாகும். இதில், நடுத்தரப் பிரதேசத்தவை ரூபா 65 இலட்சத்தை அல்லது 49 சதவீதமானவற்றையும், தாழ்ந்த பிரதேசத்தவை ரூபா 57 இலட்சத்தை அல்லது 43 சதவீதமானவற்றையும் பெற்றன. எனினும், உயர்ந்த பிரதேசத்தவை ஒற்ருேபர் 29லிருந்தே இத் திட்டத்தின்கீழ் கொண்டுவரப்பட்டமையால், 11 இலட்சம் ரூபாய்களை அல்லது 8 சதவீதமானவற்றை மாத்திரம் பெற்றன. சலுகையளிக்கப்பட்ட சராசரித் தொகை ஓர் ஏலத்திற்கு ரூபா 2,94,445ஆக உள்ளது.

இலண்டன் ஏலங்கள்[1]

இலண்டன் சந்தையின் ஏலவிலைகளில், 1967ல் தற்காலிகமாகத் தடைப்பட்டிருந்த வீழ்ச்சிப்போக்கு, 1968ல் தொடர்ந்து ஏற்பட்டது. அங்கு விற்கப்பட்ட சகல தேயிலைகளினதும் சராசரி விலையான இருத்தலுக்கு 3 சி. 11.63 பெ., முந்திய ஆண்டிலும்பார்க்க 2.18 பெ. கொண்ட வீழ்ச்சியைக் காட்டிற்று. இவ்வீழ்ச்சி, கடந்தவாண்டிற் பதிவுசெய்யப்பட்ட 0.95 பெ. கொண்ட அதிகரிப்பிற்கு எதிர்மாருனதாகும். இவ்வாண்டின் முன்னரைப் பகுதியில் இச்சந்தையின் ஏலவிலைகளிற் குறிப்பிடத்தக்க தளம்பல்கள் காணப்பட்டன. 1968ன் முன்னரைப் பகுதியில் இச்சந்தையில் விற்கப்பட்ட சகல தேயிலைகளினதும் சராசரி விலையான இருத்தலுக்கு 3சி. 11.51 பெ., முந்திய ஆண்டின் ஒப்பியல்பான காலப் பகுதியிலும்பார்க்க இருத்தலுக்கு 0.38 பெ. உயர்வானதாகும். யூலையில் ஆரம்பித்த விலை வீழ்ச்சி, 1968 பின்னரைப் பகுதி முழுவதும் தொடர்ச்சியுற்றது. பொதுவான மிகை உற்பத்தி உள்ள நிலைமையில் மட்டரகமான தேயிலைகள் அதிகரித்துக் கிடைக்கக் கூடியதாயிருந்தமை, உற்பத்தி நாடுகளின் வேலைநிறுத்தங்களினுல் தேயிலைகள் தாமதித்துவந்தமை, அத்தகைய தேயிலைகள் புதுநிலைத் தன்மை இழந்தமை, வட இந்தியத் தேயிலைகளின் மொத்த இரகம் கடந்த பருவ காலத்திலும் பார்க்கக் குறைவுற்றமை, இலண்டன் ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட தேயிலையின் அளவு அதிகரித்தமை, ஐக்கிய இராச்சியத்திலுள்ள கையிருப்புக்கள் 1967லும்பார்க்க உயர்ந்த மட்டத்திலிருந்தமை, தெரிந்தெடுத்துக் கொள்வனவு செய்தல் ஆகிய காரணிகள் இலண்டன் சந்தையிலேற்பட்ட விலை வீழ்ச்சிக்கு உடந்தையாயிருந்தன.

அட்டவணை II (ஒ) 6, இலண்டன் சந்தையில் விற்பனை செய்யப்பட்ட தேயிலைகளின் அளவுகளை மூலத் தேசங்களின்படி, சராசரி விலைகளின்படியும் காட்டுகின்றது.

அட்டவணை II (ஒ) 6

தேயிலை உற்பத்தி நாடுகளினுல் இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட தேயிலைகளின் அளவுகளும், அவைகளின் சராசரி விலைகளும்

| | இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட அளவுகள் (ப. இ. இருத்தல்கள்) | | | சராசரி விலைகள் (சி. பெ. இருத்தலுக்கு) | | |
|---|---|---|---|---|---|---|
| | 1966 | 1967 | 1968 | 1966 | 1967 | 1968 |
| 1. வட இந்தியா ... ... | 141.3 | 113.3 | 131.4 | 4–4.14 | 4–5.71 | 4–0.66 |
| 2. தென் இந்தியா ... ... | 20.0 | 12.1 | 15.5 | 3–5.04 | 3–6.48 | 3–6.26 |
| 3. இலங்கை முழுவதும் ... | 107.1 | 96.2 | 103.9 | 4–2.88 | 4–4.33 | 4–1.30 |
| 4. ஆபிரிக்கா முழுவதும் ... | 57.5 | 56.0 | 72.9 | 3–6.06 | 3–4.60 | 3–8.12 |
| 5. மொத்தம் ... ... | 337.0 | 284.3 | 328.4 | 4–0.86 | 4–1.81 | 3–11.63 |

மூலம்: இலண்டன் தேயிலைத் தரகர்கள் சங்கம்.

1. இப்பகுப்பாய்வு, இலண்டன் தேயிலைத் தரகர் சங்கத்தின் வாராந்த தேயிலைச் சந்தை அறிக்கைகள், இன்வெஸ்ரர்ஸ் கார்டியன், பப்ளிக் லெஜர் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

இவ்வாண்டில் இலண்டன் ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட சகல இலங்கைத் தேயிலைகளினதும் சராசரி விலை இருத்தலுக்கு 4 சி. 1.30 பெ. ஆக அமைந்து, முந்திய ஆண்டு விலையிலும்பார்க்க இருத்தலுக்கு 3.03 பெ. கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இலண்டன் ஏலங்களில் இலங்கைத் தேயிலைகளே மிகவுயர்ந்த ஆண்டுச் சராசரி விலையைப் பதிவுசெய்துள்ளதென்பது அட்டவணை II (ஓ) 6இலே தெரிகிறது. இவ்விலை வீழ்ச்சி உயர்ந்த பிரதேச நடுத்தரப் பிரதேசத் தேயிலைகளுக்கு மட்டும் ஏற்பட்டிருக்கையில், தாழ்ந்த பிரதேசத் தேயிலைகள் சிறிது அதிகரித்தன. 1967 உடன் ஒப்பிடுகையில் 1968ல் உயர்ந்த பிரதேச, நடுத்தரப் பிரதேசத் தேயிலைகளின் சராசரி விலைகள் முறையே, இருத்தலுக்கு 4 சி. 2.61 பெ. ஆகவும், 4 சி. 0.77 பெ. ஆகவும் அமைந்து, முறையே இருத்தலுக்கு 3.83 பெ. ஆலும் 2.36 பெ. ஆலும் வீழ்ச்சியுற்றிருக்கையில், தாழ்ந்த பிரதேசத்தவை இருத்தலுக்கு 0.51 பெ. ஆல் இருத்தலுக்கு 3 சி. 7.72 பெ. ஆக உயர்வுற்றன. வட இந்திய தேயிலைகள் குறைவாக இருந்த காலத்தில் விற்கக் கூடியனவாகவிருந்த இலங்கைத் தேயிலைகள், நாட்டின் வர்த்தகத் துறையிலேற்பட்ட வேலைநிறுத்தங்களால் அத்தேயிலைகளின் கிரமமான வருகை தடைப்பட்டமையாலும், காலதாமதமாக வந்த தேயிலைகள் தம் புதுநிலைத் தன்மையை இழக்க நேரிட்டமையாலுமே இச் சந்தையில் விக்கப்பட்ட இலங்கைத் தேயிலையின் சராசரி விலைகள் வீழ்ச்சியுற்றன. 1968ல் இலங்கைத் தேயிலையின் சராசரி விலையிலேற்பட்ட 3.03 பெ. கொண்ட வீழ்ச்சியைத் தொடர்ந்து, வட இந்திய, தென் இந்தியத் தேயிலைகளின் சராசரி விலைகளும் வீழ்ச்சியுற்றன. இருத்தலுக்கு 4 சி. 0.55 பெ. ஆகவுள்ள வட இந்தியத் தேயிலையின் சராசரி விலை, 1967லும்பார்க்க இருத்தலுக்கு 5.05 பெ. கொண்ட கூரிய வீழ்ச்சியைப்ப திவுசெய்திருக்கையில், தென்னிந்தியத் தேயிலையின் சராசரி விலை இருத்தலுக்கு 3 சி. 6.26 பெ. ஆக அமைந்து, இருத்தலுக்கு 0.22 பெ. கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. இலண்டன் சந்தையில் வட இந்தியத் தேயிலைகளின் விலையிலேற்பட்ட கூரிய வீழ்ச்சி இவற்றின் இரண்டாந் துளிர்காலத் தேயிலைகளின் பொதுவான தரம் நடைமுறைக் காலபோகத்திற் குறைவுற்றிருந்தமையினுலாகும்.[1] ஏனைய நாட்டுத் தேயிலைகளின் விலை சம்பந்தமாக, மலாவி, மொசாம்பிக், ஆச்சென்ரைனு, வியட்னும் ஆகியவற்றின் தேயிலைகளின் விலைகள் அதிகரித்திருக்கையில், கெனியா, உகண்டா, இரன்சனியா, மொறீசஸ், மலாயா தேயிலைகளின் விலைகள் வீழ்ச்சியுற்றன. கிழக்காபிரிக்கத் தேயிலைகளின் விலைகளிலேற்பட்ட வீழ்ச்சி இலண்டனிலிடப்பட்ட இத் தேயிலைகளின் தரம் முந்திய ஆண்டின் உற்பத்தியிலும்பார்க்க வெறுமையானவையாகவும், மட்டரகமானவையாகவும் இருந்தமையினுலாகும்.

1968ல் இலண்டன் ஏலங்களில் விற்பனை செய்யப்பட்ட தேயிலைகளின் மொத்த அளவு, 3,280 இலட்சம் இருத்தல்களாகும்.[2] இது 1967லும் பார்க்க 440 இலட்சம் இருத்தல்கள் அல்லது 15 சதவீதம் குறைவானதாகும். இவ்வதிகரிப்பு, சகல பிரதான தேயிலை உற்பத்தி நாடுகளினுலும் பங்கு கொள்ளப்பட்டது. இவ்வாண்டில் இலண்டன் ஏலங்களில் விற்கப்பட்ட வட இந்திய, தென் இந்தியத் தேயிலைகளின் அளவுகள் முறையே, 1,310, இலட்சம் இருத்தல்களாகவும், 150 இலட்சம் இருத்தல்களாகவும் அமைந்து, முறையே 180 இலட்சம் இருத்தல்களாலும், 30 இலட்சம் இருத்தல்களாலும் அதிகரித்திருக்கையில், இலங்கை, ஆபிரிக்காப் பிரதேசங்களிலிருந்துபெற்ற அளவுகள் முறையே, 1,040 இலட்சம் இருத்தல்களாகவும், 730 இலட்சம் இருத்தல்களாகவும் அமைந்து, முந்திய ஆண்டு மட்டங்களிலும்பார்க்க முறையே 80 இலட்சம் இருத்தல்களாலும், 170 இலட்சம் இருத்தல்களாலும் மிகைவுற்றிருந்தன.

---

1. இன்வெஸ்ரஸ் கார்டியன்—1968 செத்தெம்பர் 27.
2. இலண்டன் தேயிலைத் தரகர் சங்கத்தின் 1969 சனவரி 3ஆந் தேதிய தேயிலைச் சந்தை அறிக்கை, இல. 845.

1968 முழுவதும் ஐக்கிய இராச்சியத்திலிருந்த தேயிலைக் கையிருப்புக்களின் மட்டம் 1967ல் உள்ளதிலும்பார்க்க அதிகமாகவிருந்தது. 1968ன் முன்னரைப் பகுதியில், சராசரித் தேயிலைக் கையிருப்புக்கள் 1967ம் ஆண்டினத்திலும் பார்க்க ஏறக்குறைய 80 முதல் 100 இலட்சம் இறுத்தல்கள் அதிகமாகவிருந்தன. ஆண்டின் பின்னரைப்பகுதி முழுவதும் கையிருப்புக்களின் மட்டம் சென்ற ஆண்டின் தொடர்பான காலப்பகுதியினதிலும்பார்க்க குறிப்பிடத்தக்களவு அதிகமாகத் தொடர்ந்து காணப்பட்டது. ஆண்டினிறுதியில், இக்கையிருப்புக்கள், 1967ம் ஆண்டிறுதித் தொகையிலும்பார்க்க 1,960 இலட்சம் இறுத்தல்கள் அல்லது 610 இலட்சம் இறுத்தல்கள் கூடுதலாக விளங்கின.[1]

உலகத் தேயிலை உற்பத்திபற்றிக் கிடைக்கக்கூடிய தரவுகள், 1968ம் ஆண்டில் உற்பத்திசெய்யப்பட்ட 16,100 இலட்சம் இறுத்தல்கள்[2] 1967 இனதிலும்பார்க்க 630 இலட்சம் இறுத்தல்கள் உயர்வானவையென்பதைக் காட்டுகின்றன. இது, 1967ம் ஆண்டின் 70 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புடன் ஒப்புநோக்கற்பாலது. தேயிலை உற்பத்தி நாடுகளுள் பாகிஸ்தான் மட்டுமே உற்பத்தி வீழ்ச்சியைப் பதிவு செய்திருக்கையில், ஏனைய பிரதான நாடுகள் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

## இரப்பர்

1968ன் இரப்பர் உற்பத்தி 3,280 இலட்சம் இறுத்தல்களாக அமைந்து, 1967ஆம் ஆண்டின் உற்பத்தியிலும்பார்க்க 120 இலட்சம் இறுத்தல்கள் அல்லது 4 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டிற்று. இவ் வதிகரிப்பானது புனர்நடுகை செய்யப்பட்டு உற்பத்திக்குவந்த நிலங்களிலிருந்து பெற்ற உயர்ந்த விளைவுகளினலாகும். ஆயினும், சனவரி ஒற்றேபர் 1968ன் உற்பத்தி முந்தைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியினதிலும்பார்க்க 34 இலட்சம் இறுத்தல்களாற் சிறிது வீழ்ச்சியுற்றது.[3] இவ்வீழ்ச்சியானது, இவ்வாண்டின் பெரும் பகுதியான காலப்பகுதியிற் காணப்பட்ட பெருமழையினுற் பால்வடித்தற் தொழிற்பாடுகள் பாதிக்கப்பட்டமையோடு தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. தட்டை இரப்பரினதும் கிரேப் இரப்பரினதும் உற்பத்திகள் முறையே 74 இலட்சம் இறுத்தல்களாலும், 48 இலட்சம் இறுத்தல்களாலும் அதிகரித்தன. 1967ல் 10 இலட்சம் இறுத்தல்களால் உயர்வுற்ற உள்ளூர் நுகர்ச்சி 1968இல் மேலும் 13 இலட்சம் இறுத்தல்களால் 72 இலட்சம் இறுத்தல்களுக்கு உயர்வுற்றது. 1967ல் 70 இலட்சம் இறுத்தல்களால் அல்லது 2 சதவீதத்தால் அதிகரித்த இரப்பர் ஏற்றுமதிகள், 1968ல் 370 இலட்சம் இறுத்தல்களால் அல்லது 13 சதவீதத்தால் 3,280 இலட்சம் இறுத்தல்களுக்குக் கூர்மையாக அதிகரித்தன.[4] தட்டை இரப்பர், கிரேப் (சகல இரகங்களும்), இரப்பற்பால் ஆகியனவற்றின் ஏற்றுமதிகள் முறையே 264 இலட்சம் இறுத்தல்கள் (அல்லது 16.2 சதவீதம்), 104 இலட்சம் இறுத்தல்கள் (அல்லது 8.2 சதவீதம்), 5 இலட்சம் இறுத்தல்கள் கொண்ட அளவுகளால் அதிகரித்தன.

---

1. இலண்டன் தேயிலைத் தரகர் சங்கத்தின் 1969 சனவரி மாதம் 3ந் தேதிய 845ம் இலக்கத் தேயிலைச் சந்தை அறிக்கை.

2. ஜோன், கீல், தொம்ஸன், வைற் லிமிற்றெட், 1969ம் ஆண்டின் பெப்புருவரி மாதம் 27ந் தேதிய வாரத் தேயிலைச் சந்தை அறிக்கை.

3. 1968 நவம்பரின் இரப்பர் உற்பத்தி முந்தைய ஆண்டின் ஒப்பியல்பான மாதத்திலும்பார்க்க 167 இலட்சம் இறுத்தல்களாலும், முந்தைய மாதத்திலும்பார்க்க 135 இலட்சம் இறுத்தல்களாலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இதனுல் ஒற்ருேபர்வரை ஏற்பட்ட உற்பத்திக்குறை ஈடுசெய்யப்பட்டது.

4. 1968ல் ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பரின் மொத்த அளவாகிய 3,280 இலட்சம் இறுத்தல்கள் ஏற்றுமதிக்காக ஏற்கப்பட்ட பதிவுகளின் அடிப்படையிலாகும். சுங்கத்தரவுகள், ஒரு விளக்கம் தருவதான அடிக்குறிப்பில் 1968 சனவரி—டிசெம்பரில் உண்மையாகக் கப்பலிடப்பட்ட தொகை 3,140 இலட்சம் இறுதல்கள் எனவும் குறிப்பிட்டுள்ளன,

சுங்கப் பதிவுகளின்படி, மக்கள் சீனக் குடியரசே மறுபடியும் இலங்கையின் சிறந்த வாடிக்கைக்காரராக இருந்தது. அதன் மொத்தக் கொள்வனவுகள், 1967ம் ஆண்டின் 1,310 இலட்சம் இருத்தல்களுடன் (மொத்த இரப்பர் ஏற்றுமதியில் 45 சதவீதத்துடன்) ஒப்பிடுகையில், 1968ல் 1,830 இலட்சம் இருத்தல்களாக (மொத்த இரப்பர் ஏற்றுமதியில் 56 சதவீதமாக) விளங்கின. ஐக்கிய அமெரிக்க நாடுகள் 1967, 1968 ஆகிய இரு ஆண்டுகளிலும் 230 இலட்சம் இருத்தல்களைக் கொள்வனவு செய்து இரண்டாவது இடத்தைப் பெற்றது. சேர்மனிய சமஷ்டிக் குடியரசு, முந்தைய ஆண்டின் 170 இலட்சம் இருத்தல்களுடன் ஒப்பிடுகையில் 200 இலட்சம் இருத்தல்களைக் கொள்வனவு செய்து மூன்றுவது இடத்தை வகித்தது. ஐக்கிய சமத்துவ சோவியற் குடியரசு முந்தைய ஆண்டின் 270 இலட்சம் இருத்தல்களுக்கு எதிராக 180 இலட்சம் இருத்தல்களைக் கொள்வனவு செய்து, நான்காம் இடத்தைப் பெற்றது. யப்பானும், ரூமேனியாவும் முறையே 1967ன் 110 இலட்சம் இருத்தல்களுக்கும், 180 இலட்சம் இருத்தல்களுக்கும் எதிராக 1968ல் முறையே 110 இலட்சம் 100 இலட்சம் இருத்தல்களையும் கொள்வனவு செய்தன.

கொழும்புச் சந்தையில், 1967 திசெம்பரில் இருத்தலுக்கு 86 சதமாகச் சீர்திருத்தமடைந்திருந்த ஆர். எஸ். எஸ். 1ம் இரக இரப்பரின் சராசரி விலை, 1968 சனவரி, பெப்புருவரியில் முறையே இருத்தலுக்கு 81 சதத்திற்கும், 77 சதத்திற்கும் வீழ்ச்சியுற்றது. அதன்பின் சந்தை விலைகள், ஓகத்திற் பதிவு செய்யப்பட்ட இருத்தலுக்கு ஒரு சதமான சிறிய வீழ்ச்சியைத் தவிர, ஒரு மேற்போக்கான தன்மையைப் பின்பற்றின. ஆர். எஸ். எஸ். 1ம் இரகத்திற்கான ஆண்டுச் சராசரி விலை, 1967 உடன் ஒப்பிடுகையில், 1968ல் இருத்தலுக்கு 9 சதத்தால் அல்லது 11 சதவீதத்தால் இருத்தலுக்கு 88 சதத்திற்கு அதிகரித்தது. பால்கிரேப் IX இரகத்தின் விலைகளும் ஆர். எஸ். எஸ். 1ம் இரகத்தினது விலைப் போக்கினைப் போலவே இயங்கின. பால்கிரேப் IX இரகத்தின் ஆண்டுச் சராசரி விலை 1967 உடன் ஒப்பிடுகையில், இருத்தலுக்கு 23 சதங்களால் அல்லது 26 சதவீதத்தால் இருத்தலுக்கு ரூ. 1.11ற்கு உயர்வுற்றது.

அட்டவணை II (ஒ) 7, அண்மை ஆண்டுகளில் இரப்பரின் உற்பத்தி ஏற்றுமதிகள், விலைகள்பற்றிய தரவுகளைக் கொடுக்கின்றது.

### அட்டவணை II (ஒ) 7

### இரப்பர்: உற்பத்தியும், ஏற்றுமதிகளும், விலைகளும்

| ஆண்டு | உற்பத்தி ப. இ. இரு. | ஏற்றுமதிகள் ப. இ. இரு. | க. ஏ. பெ. விலை இருத்தலுக்கு ரூ. ச. | ஆர். எஸ். எஸ். 1க்கு கொழும்புச் சந்தை விலை இருத்தலுக்கு ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1963 | 231 | 209 | 1.23 | 0.93 |
| 1964 | 246 | 253 | 1.15 | 0.90 |
| 1965 | 261 | 267 | 1.14 | 0.91 |
| 1966 | 289 | 298 | 1.13 | 0.89 |
| 1967 | 316 | 291 | 0.97 | 0.79 |
| 1968 | 328 | 328 | 1.01 | 0.88 |

மூலங்கள் : இரப்பர்க் கட்டுப்பாட்டாளரின் நிர்வாக அறிக்கைகள்,
இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்,
கொழும்பு இரப்பர் வர்த்தகர்கள் சங்கம்.

இயற்கை இரப்பருக்கான பலநாட்டுச் சந்தை விலைகள், மீளப்பார்வை யிடும் ஆண்டின் முதல் இரண்டு மாதங்களிலும் 1967 திசெம்பர் மட்டத் திலிருந் வீழ்ச்சியுற்றதைத் தவிர, இவ்வாண்டில் நிதானமாக மேல்நோக்கிச் சென்றன. உலகச் சந்தைகளில் இயற்கை இரப்பரின் விலைகளில், இவ்வாண் டின் இரண்டாம் மாதத்தில் ஒரு வீழ்ச்சியேற்பட்டது. உற்பத்தியில் மதிப்பிட்ட அதிகரிப்பும், கீழ்த் தேசத்துக் கையிருப்புகளின் உயர்ந்த தொகை யும், கொள்வனவுகளில் விருப்பக்குறைவும் காணப்பட்டமையால், சிங்கப் பூர் விலை பெப்புருவரியின் முதல் வாரத்தில், 1949ம் ஆண்டின்பின் என்றும் இல்லாத மிகக்குறைந்த மட்டமான விலைக்கு (அதாவது இருத்தலுக்கு 43 டொலர்ச் சதங்களுக்கு) வீழ்ச்சியுற்றது. பின்னுள்ள காலப்பகுதிகளில் ஏற்பட்ட விலை உயர்ச்சிகள் தூர கிழக்கில் நிலவிய அரசியல் நிலைமை களினுலாகும். பிரதான நாணயச் சந்தைகளில் நிலவிய நம்பிக்கையீனங்களி னுலும் விலைகள் மேலும் சீர்திருத்தமடைந்தன. இலண்டன் சந்தையில் ஆர். எஸ். எஸ். 1ம் இரகத் தட்டை இரப்பருக்கான ஆண்டுச் சராசரி விலை இருத்தலுக்கு 1 15/32 பென்சுகளால் இருத்தலுக்கு 1 சிலி. 6 25/32 பெ. க்கு அதிகரித்தது. சிங்கப்பூர் சந்தையிற் தட்டை இரப்பருக்கான ஆண்டுச் சராச ரிக் க. ஏ. பெ. விலை இருத்தலுக்கு 53.12 ஸ்ரெயிற்ஸ் சதங்களாக அமைந்து, 1967ன் ஆண்டுச் சராசரியிலும்பார்க்க இருத்தலுக்கு 0.96 ஸ்ரெயிற்ஸ் சதங்கள் குறைவாக இருந்தது. பிரதான நுகர்ச்சி நாடுகளிலுள்ள அதிகரித்த கேள்விகளோடு சேர்ந்த பரபரப்பான உலக அரசியற் தன்மைகளும் விலை களின் மேன்நோக்கிய போக்கிற்கு உதவிபுரிந்த முக்கிய காரணிகளாகும்.

உற்பத்தியில் ஓர் அதிகரிப்பு இருந்ததெனினும், நுகர்ச்சியும் அதிகரித்து, கையிருப்புக்கள் பொதுவாகக் குறைவுற்றன. 1968 சனவரி1 ஒற்ருேபர் (மிக அண்மையான தரவுகள் கிடைக்கக்கூடியது) காலப்பகுதியில் இயற்கை இரப்பரின் உலக நிரம்பல், ஐக்கிய அமெரிக்காவின் கையிருப்புக் குவியல் களிலிருந்தான வெளியீடுகளும் உட்பட, 1967ன் அதே காலப்பகுதிக் குரிய 21,07,500 தொன்களுக்கு எதிராக, 21,72,500 தொன்களாக விளங் கிற்று. அதே காலப்பகுதியில் இயற்கை இரப்பரின் நுகர்ச்சி, 1967ன் 20,57,500 தொன்களுக்கு எதிராக, 1968ல் 22,67,500 தொன்களாக விளங்கிற்று. கையிருப்புக்கள் 1967 திசெம்பர் இறுதியிலிருந்த 980,000 தொன்களோடு ஒப்பிடுகையில், ஒற்ருேபர் இறுதியில் 937,500 தொன்களாக இருந்தன. இயற்கை இரப்பரின் உலக உற்பத்தி, 1967ன் அதே காலப் பகுதியின் 27,85,000 தொன்களுக்கெதிராக, 1968 சனவரி—ஒற்ருேபரில் 32,45,000 தொன்களாக இருக்கையில், இயற்கை இரப்பரின் நுகர்ச்சி 1967ன் அதே காலப்பகுதியின் 27,50,000 தொன்களுக்கெதிராக 1968 சனவரி— ஒற்ருேபரில் 32,12,000 தொன்களாக விளங்கிற்று.

### தெங்குப் பொருட்கள்

உலகச் சந்தையில், 1967 செத்தெம்பர் இறுதியிலிருந்து அதிகரித்துக் கொண்டுவந்த லோறிக் திரவக எண்ணெய்களின் விலைகள், 1968ன் முதல் அரைக்காலப்பகுதியிலும் தொடர்ந்து அதிகரித்திருந்தன. இந்த உயர்ச்சி பல காரணிகளாலேற்பட்டதாகும். அவையாவன ஐரோப்பிய நாடுகளிலிருந்து அதிகரித்த கேள்வியும், பிலிப்பைன் கொப்பரா உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி யும்2 அரசியல் அமைதியின்மை காரணமாக நைஜீரியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் புல்லின மரப் பருப்பும், புல்லின மர எண்ணெயும் குறைக்கப் பட்டமையுமாகும்.

இடைக்கிடை ஏற்பட்ட விலை வீழ்ச்சியைத் தவிர, 1968ல் கொப்பரா சந்தையின் அடிப்படைப்போக்கு நிலையான தன்மையைக் காட்டிற்று. இது, பிலிப்பைனிலிருந்து கிடைக்கத்தக்க நிரம்பலில் குறைவு ஏற்பட்டமையால், ஐக்கிய அமெரிக்க நாடுகள் சந்தையை ஆதரித்ததின் பயனுக ஏற்பட்டதாகும்.3 மே இறுதியில் பிலிப்பைன்சில் நிரம்பல்நிலையிற் சீர்திருத்தமேற்பட்டது. இதனுல் விலைகள் வீழ்ச்சியுற்றன. யூலையில் ஐரோப்பாவில் ஏற்பட்ட தட்டுப்

1. இரப்பர்ப் புள்ளிவிபரச் செய்தித் திரட்டு, 1969 சனவரி.
2. 1968இல் பிலிப்பீன்சிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட கொப்பராவின் அளவு 653,825 தொன்களாக இருந்தபோது 1967இன் அளவைவிட 99,748 தொன்கள் அல்லது 13 சதவீதத் தால் குறைவுற்றது.
3. 1968 திசெம்பர் 28இன் புப்ளிக் லெஜர், பக். II.

பாட்டினுல் விலைகளில் ஏற்பட்ட இவ்வீழ்ச்சி தற்காலிகமாகத் தடுக்கப்பட்டது. உற்பத்தி வாய்ப்புகள் திருந்தியதுடன், விலைகள் தொடர்ந்து வீழ்ச்சியுற்று, ஒற்றேபரில் ஆகக்குறைந்த மட்டத்தையடைந்தன. எனினும், 1967லும் பார்க்க விலைகள் கணிசமான அளவு அதிகமாக இருந்தன. ஆயினும், பிலிப்பைன்சில் சூருவளியினுலேற்பட்ட சேதங்களைப்பற்றிய அறிக்கையைத் தொடர்ந்து, நவெம்பரிலும் திசெம்பரிலும் விலைகள் அதிகரிப்பைக் காட்டின. கொப்பராவின் அதே வழியை தேங்காயெண்ணெய் விலைகளும் பின்பற்றின.

1968ன் முதல் அரைப்பகுதியில் கொழும்புச் சந்தையில் தெங்குப் பொருட்களின் விலைகள், சர்வதேசச் சந்தைகளின் அதே போக்கைப் பின்பற்றினுலும், ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் இந்த அமைப்பு மாற்றப்பட்டது. பொதுவாக 1968ன் முதல் நான்கு மாதங்களில் விலைகள் அதிகரித்தன. மேயிலும் யூனிலும் விலைகள் வீழ்ச்சியுற்று, யூலையிலும் ஒகத்திலும் மீண்டும் அதிகரித்து, பின் செத்தெம்பரிலும் ஒற்றேபரிலும் வீழ்ச்சியுற்றன. எனினும், ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களிலும் அவை அதிகரித்தன.

ஆயினும், தேங்காய்த் துருவல் விடயத்தில், செத்தெம்பரில் தொடங்கிய விலைவீழ்ச்சி திசெம்பர் வரையும் தொடர்ந்திருந்தது. இது பிலிப்பையின்சில் தேங்காய்த் துருவல் உற்பத்திக் குறைவின் காரணமாக விலைகள் அதி கூர்மையாக அதிகரித்தமையினுல் ஏற்பட்டதாகும். கொழும்புச் சந்தையிற் பெருந்தோட்ட முதலாம் இரகக் கொப்பராவின் 1968ற்கான ஆண்டுச் சராசரி விலை கண்டி ஒன்று 256.00 ரூபாவாகமைந்து, கண்டியொன்றுக்கு ரூபா 57.93 அல்லது 29 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்திருக்கையில், தேங்காயெண்ணெயின் விலை தொன்னென்றுக்கு ரூபா 1,513 ஆகவும், தேங்காய்த் துருவல் இருத்தலொன்று 79 சதமாகவும் அமைந்து, 1967ன் ஆண்டுச் சராசரி விலைகளிலும்பார்க்க முறையே 31 சதவீதத்தாலும் 61 சதவீதத்தாலும் அதிகரித்தன.

1968ல், மூன்று பிரதான தெங்குப் பொருட்களின் ஏற்றுமதிகளின் மொத்த அளவு (இலங்கை மத்திய வங்கியின் வர்த்தகக் குறிகாட்டிகளினுல் அளவிடப்பட்டபடி), 1967ன் மட்டத்தின் மேல், 17 சதவீதத்தால் அதிகரித்தது. இது 1967ற் பதிவுசெய்யப்பட்ட 8 சதவீதங்கொண்ட வீழ்ச்சிக்கு முரணுக இருந்தது. ஏற்றுமதி வருமானங்களின் உயர்ந்த மட்டம், தெங்கு ஏற்றுமதியளவின் விரிவினுலும், சர்வதேசச் சந்தையில் நிலவிய உயர்ந்த விலை மட்டத்தினுலும் ஏற்பட்டது. 1967 உடனெப்பிடுகையில், கொப்பராவினதும் தேங்காய்த் துருவலினதும் ஏற்றுமதி அளவுகள் அதிகரிப்புகளைப் பதிவுசெய்திருக்கையில், தேங்காயெண்ணெய் வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. 1967 உடன் ஒப்பிடுகையில், கொப்பராவினது ஏற்றுமதி அளவு 425 ஆயிரம் அந்தர்களாகவும், தேங்காய்த் துருவலின் அளவு 1,382 ஆயிரம் அந்தர்களாகவும் அமைந்து, முறையே 109 ஆயிரம் அந்தர்களால் அல்லது 34 சதவீதத்தாலும், 456 ஆயிரம் அந்தர்களால் அல்லது 49 சதவீதத்தாலும் விரிவடைந்திருக்கையில், தேங்காயெண்ணெயின் ஏற்றுமதி அளவு 1,261 ஆயிரம் அந்தர்களாக அமைந்து, 73 ஆயிரம் அந்தர்களால் அல்லது 5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. தேங்காயெண்ணெயின் ஏற்றுமதி அளவிலேற்பட்ட சுருக்கத்திற்கு, தேங்காய்த் துருவலின் விலையிலேற்பட்ட கூரிய அதிகரிப்பு, உற்பத்தியாளர்கள் தேங்காயெண்ணெயிலிருந்து தேங்காய்த் துருவல் தயாரிப்பதற்கு மாற்றுவதற்குத் தூண்டுதலாக அமைந்தது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில், 1968ல் சகல மூன்று பொருட்களினதும் ஆண்டுச் சராசரிக் க. ஏ. பெ. விலைகள் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன. கொப்பரா, தேங்காயெண்ணெய், தேங்காய்த் துருவல் ஆகியவற்றின் ஆண்டுச் சராசரிக் க. ஏ. பெ. விலைகள் முறையே கண்டி ஒன்று ரூபா 396, தொன்னென்று ரூபா 2,109, இருத்தலொன்று ரூபா 1.06 சதங்களாகவமைந்தது, 1967ன் மட்டத்திலும்பார்க்க முறையே கண்டியொன்று ரூபா 103ஆல் அல்லது 35 சதவீதத்தால், தொன்னென்று ரூபா 795 ஆல் அல்லது 60 சதவீதத்தால், இருத்தலொன்று 47 சதங்களால் அல்லது 80 சதவீதத்தால் அதிகரித்திருந்தன.

மூன்று முக்கிய தெங்குப் பொருட்களினதும், ஏற்றுமதி அளவுகளினதும் ஏற்றுமதி விலைகளினதும் தரவுகள் அட்டவணை II (ஓ) 8 இலே தரப்பட்டுள்ளன..

அட்டவணை II (ஓ) 8

பிரதான தெங்குப் பொருட்களின் ஏற்றுமதி அளவுகளும் விலைகளும் 1964—1968

| ஆண்டு | அளவு | | | க. ஏ. பெ. விலைகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தேங்காயெண்ணெய் ஆயிரம் அந்தர் | கொப்பரா ஆயிரம் அந்தர் | தேங்காய்த் துருவல் ஆயிரம் அந்தர் | மொத்தம் (சமமான தேங்காய்ச் சம நியதியின் படி) ப. இ. காய்கள் | தேங்காயெண்ணெய் தொன்னுக்கு ரூ. ச. | கொப்பரா ஒரு கண்டிக்கு ரூ. ச. | தேங்காய்த் துருவல் இறுத்தலுக்கு ரூ. ச. |
| 1964 | 2,351 | 1,162 | 1,080 | 1,618 | 1,308.40 | 237.20 | 0.53 |
| 1965 | 1,738 | 819 | 1,041 | 1,270 | 1,661.80 | 296.30 | 0.71 |
| 1966 | 1,457 | 417 | 930 | 1,017 | 1,489.00 | 294.60 | 0.60 |
| 1967 | 1,334 | 316 | 926 | 940 | 1,314.00 | 293.07 | 0.59 |
| 1968 | 1,261 | 425 | 1,382 | 1,096 | 2,108.80 | 396.25 | 1.06 |

மூலம் : இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்.

### கொப்பரா

ஏற்றுமதி செய்யப்பட்ட மொத்த அளவின் 239 ஆயிரம் அந்தர்களை அல்லது 56 சதவீதத்தை உட்கொண்டு, இந்தியா, கொப்பராவிற்கான மிகப் பெரிய தனிச் சந்தையாகத் தொடர்ந்து விளங்கியது. 102 ஆயிரம் அந்தர்களை அல்லது மொத்த ஏற்றுமதிகளில் 24 சதவீதத்தை இறக்குமதி செய்த ஐக்கிய சமத்துவ சோவியத் குடியரசும், 74 ஆயிரம் அந்தர்களை அல்லது மொத்த ஏற்றுமதிகளில் 17 சதவீதத்தை இறக்குமதி செய்த பாகிஸ்தானும் அடுத்த முக்கிய கொள்வனவு நாடுகளாக விளங்கின.

### தேங்காயெண்ணெய்

மொத்த ஏற்றுமதிகளின் கிட்டத்தட்ட 32 சதவீதமாகவுள்ள 406 ஆயிரம் அந்தர்கள் கொண்ட தேங்காயெண்ணெயை 1968ம் ஆண்டில் இறக்குமதி செய்த ஐக்கிய சமத்துவ சோவியத் குடியரசு இப்பண்டத்தின் மிகப் பெரிய தனிக் கொள்வனவு நாடாகவிருந்தது. பாகிஸ்தான், இத்தாலி, மக்கள் சீனக் குடியரசு ஆகிய நாடுகள் அடுத்த மிக முக்கிய கொள்வனவு நாடுகளாகும். 1968ஆம் ஆண்டில் இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்பட்ட தேங்காயெண்ணெயின் மொத்த அளவில் பாகிஸ்தான் 174 ஆயிரம் அந்தர்கள் அல்லது 14 சதவீதத்தையும், இத்தாலி 161 ஆயிரம் அந்தர்கள் அல்லது 13 சதவீதத்தையும், மக்கள் சீனக் குடியரசு 150 ஆயிரம் அந்தர்கள் அல்லது 12 சதவீதத்தையும் இறக்குமதி செய்திருந்தன.

### தேங்காய்த் துருவல்

மொத்த ஏற்றுமதிகளின் அளவில் 358 ஆயிரம் அந்தர்களை அல்லது 26 சதவீதத்தைக் கொள்வனவு செய்த ஐக்கிய இராச்சியம், தேங்காய்த் துருவலுக்கான முக்கிய சந்தையாகத் தொடர்ந்து விளங்கியது. சேர்மன் சமஷ்டிக் குடியரசு, கனடா, நெதர்லாந்து ஆகிய நாடுகள் தேங்காய்த் துருவலின் ஏற்றுமதிகளின் மொத்த அளவில் முறையே 182 ஆயிரம் அந்தர்கள் அல்லது 13 சதவீதம், 116 ஆயிரம் அந்தர்கள் அல்லது 8 சதவீதம்,

86 ஆயிரம் அந்தர்கள் அல்லது 6 சதவீதத்தை உட்கொண்டு, அடுத்த மிகப் பெரிய கொள்வனவு செய்யும் நாடுகளாக விளங்கின. ஆயினும், 1967ல் இப்பண்டத்தின் மொத்த ஏற்றுமதிகளிற் கனடாவின் பங்கு 18 ஆயிரம் அந்தர்கள் அல்லது 2 சதவீதமாக மாத்திரமே இருந்தது. கடந்த ஆண்டில் இலங்கையிலிருந்து தேங்காய்த் துருவலை இறக்குமதிசெய்யாத ஐக்கிய அமெரிக்க நாடுகள், 1968ல் 13 ஆயிரம் அந்தர்களைக் கொள்வனவு செய்தது.

ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகள்

1967 உடன் ஒப்பிடுகையில், 1968ல் சிறு ஏற்றுமதிப் பொருட்களிலிருந்து பெற்ற மொத்த ஏற்றுமதி வருவாய்கள் 310 இலட்சம் ரூபாய்களால் அல்லது 25.6 சதவீதத்தால் அதிகரித்தன. இது ஏற்றுமதி செய்யப்பட்ட அளவினுலேற்பட்ட 17 சதவீதங்கொண்ட விரிவினுலும், சராசரி எற்றுமதி விலையிலேற்பட்ட 11 சதவீதங்கொண்ட அதிகரிப்பினுலும் (இலங்கை மத்திய வங்கியின் வர்த்தகக் குறிகாட்டிகளினுல் அளவிடப்பட்டபடி) ஏற்பட்டதாகும். ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகளின் அதிகரித்த ஏற்றுமதி வருவாய்களுக்கு 1968 மே மாதத்திற் புகுத்தப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் தூண்டுதலாக அமைந்துள்ளது எனலாம். இத்திட்டத்தின்கீழ், சிறு ஏற்றுமதிப் பொருட்களை ஏற்றுமதி செய்வதனுற் பெறப்படும் வருவாய்கள், ரூபாய்ப் பெறுமதியிற் பெறப்பட்ட அந்நிய செலாவணியின் 44 சதவீத மேலதிகக் கொடுப்பனவுக்குத் தகுதியுடையனவாக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு ஏற்றுமதிப் பண்டங்களின் ஏற்றுமதி அளவுகள், ஏற்றுமதிப் பெறுமதிகள், சராசரிக் க. ஏ. பெ. விலைகள் ஆகியவற்றை அட்டவணை II (ஒ) 9 தருகின்றது.

1967, 1968ல் ஏனைய உள்நாட்டு ஏற்றுமதிகளின் தொகுதியிலுள்ள 92 சதவீதமானவற்றின் ஏற்றுமதிப் பெறுமானங்களை மேலுள்ள அட்டவணை அடக்கியுள்ளது. தெங்குப் பொருட்கள் தொகுதியில், கயிற்று நாரின் ஏற்றுமதிப் பெறுமதி, மீளப் பார்வையிடும் ஆண்டில், 510 இலட்சமாக வமைந்து, 100 இலட்சம் அல்லது 24 சதவீத அதிகரிப்பைக் காட்டிற்று. இது, ஏற்றுமதியளவிலேற்பட்ட 14 சதவீத அதிகரிப்பாலும், சராசரிக் க. ஏ. பெ. விலையிலேற்பட்ட 8 சதவீத அதிகரிப்பாலுமாகும். சிலிர்ப்பு நார்களினதும் மெத்தைத் தும்பினதும் ஏற்றுமதி வருமானங்கள் 1968ல் முறையே 260 இலட்சம் ரூபாய்கள், 250 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 1967ன் பெறுமானங்களிலும்பார்க்க முறையே 40 இலட்சம் ரூபாய்களும், 60 இலட்சம் ரூபாய்களும் கொண்ட அதிகரிப்புகளைப் பதிவுசெய்தன. சிலிப்பு நார், மெத்தைத் தும்பு ஆகிய ஏற்றுமதிகளின் அளவும் முறையே 564 ஆயிரம் அந்தர்களாகவும், 1,260 ஆயிரம் அந்தர்களாகவும் அமைந்து, முறையே 26 ஆயிரம் அந்தர்கள் அல்லது 5 சதவீதமும், 195 ஆயிரம் அந்தர்கள் அல்லது 18 சதவீதமும் கொண்ட அதிகரிப்புகளைப் பதிவுசெய்தன. தேங்காய்ச் சிரட்டைக் கரியின் ஏற்றுமதி வருமானங்களிலேற்பட்ட சிறிய அதிகரிப்பு முற்றிலும் ஏற்றுமதி அளவிலேற்பட்ட 17 சதவீத விரிவினுலாகும். எனினும், ஏற்றுமதி விலை முந்திய ஆண்டிலும்பார்க்க 9 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.

வாசனைச் சரக்குத் தொகுதியில் கறுவா (சுருள்கள், சுள்ளிகள்) ஏற்றுமதிப் பெறுமானம் 350 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 40 இலட்சம் ரூபாய்கள் அல்லது 13 சதவீத அதிகரிப்பைக் காட்டிற்று. இவ்வதிகரிப்புக்கான முழுக் காரணி ஏற்றுமதியளவிலேற்பட்ட 29 சதவீதங்கொண்ட கூரிய அதிகரிப்பாகும். ஆயினும், இதன் விளைவு சராசரிக் க. ஏ. பெ. விலையிலேற்பட்ட 12 சதவீத வீழ்ச்சியால் ஓரளவு ஈடுசெய்யப்பட்டது. கறுவாச் சுருள்கள், சுள்ளிகளின் ஏற்றுமதி வருவாய்கள் 1968ல் முறையே 330 இலட்சம் ரூபாய்களாகவும், 20 இலட்சம் ரூபாய்களாகவும் அமைந்து, 1967ன் வருவாய்களிலும்பார்க்க, முறையே 30 இலட்சம் ரூபாய்கள், 1 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புகளைப் பதிவுசெய்தன. கறுவாச் சுருள்கள், சுள்ளிகளின் ஏற்றுமதியளவுகள் 1968ல் 9 ஆயிரம் அந்தர்களால், முறையே 62 ஆயிரம் அந்தர்களுக்கும், 17 ஆயிரம் அந்தர்களுக்கும் அதிகரித்தன,

அட்டவணை II (ஒ) 9

தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு ஏற்றுமதிப் பொருட்களின் ஏற்றுமதி அளவுகள், ஏற்றுமதிப் பெறுமதிகள், சராசரி க. ஏ. பெ. விலைகள்

| | தொகைக் கூறு | அளவு | | | பெறுமதி (ப. இ. ரூபாய்களில்) | | | சராசரி க. ஏ. பெ. விலைகள் (கூறு ஒன்றிற்கு ரூபா) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1967 | 1968 | 1967ல்பார்க்க 1968ல் % மாற்றம் | 1967 | 1968 | 1967ல்பார்க்க 1968ல் % மாற்றம் | 1967 | 1968 | 1967ல்பார்க்க 1968 ல் % மாற்றம் |
| **தெங்குப் பொருட்களின் தொகுதி** | | | | | | | | | | |
| கயிற்று நார்—சிவிர்ப்பான ... ... | ஆயி. அந் | 538.0 | 563.9 | + 4.8 | 22.0 | 25.6 | + 16.4 | 40.94 | 43.35 | + 10.8 |
| கயிற்று நார்—மெத்தை ... ... | ,, | 1065.0 | 1260.3 | + 18.3 | 19.4 | 25.5 | — 31.4 | 18.24 | 20.23 | + 10.9 |
| தேங்காய்ச் சிரட்டைக் கரி ... ... | ,, | 273.0 | 319.1 | + 16.9 | 4.9 | 5.2 | + 6.1 | 18.02 | 16.34 | — 9.3 |
| தேங்காய்கள் * ... ... ... | ப. இ. காய் | 10.2 | 7.6 | — 25.5 | 3.1 | 3.3 | + 6.5 | 0.30 | 0.44 | + 46.7 |
| **வாசனைச் சரக்குத் தொகுதி** | | | | | | | | | | |
| கறுவாப்பட்டைச் சுருள் ... ... | ஆயி. அந். | 52.8 | 61.8 | + 17.0 | 29.8 | 32.9 | + 10.4 | 564.71 | 531.79 | — 5.8 |
| கறுவாப்பட்டைச் சுள்ளி ... ... | ,, | 7.9 | 16.6 | +110.1 | 1.2 | 2.3 | + 91.7 | 153.27 | 141.30 | — 7.8 |
| மிளகு ... ... ... ... | ,, | 2.0 | 16.2 | +710.0 | 0.4 | 2.4 | +500.0 | 215.21 | 146.53 | — 31.9 |
| ஏல அரிசி ... ... ... ... | ,, | 2.4 | 2.5 | + 4.2 | 3.3 | 4.1 | + 24.2 | 1,341.65 | 1639.22 | + 22.2 |
| **கனிப்பொருட்கள் தொகுதி** | | | | | | | | | | |
| இயற்கைக் காரியம் ... ... ... | ,, | 204.1 | 212.6 | + 4.2 | 6.7 | 7.8 | + 16.4 | 32.83 | 36.91 | + 12.4 |
| இலிமனைற் மணல் ... ... ... | ,, | 1764.4 | 1455.0 | — 17.5 | 1.5 | 2.6 | + 73.3 | 0.86 | 1.78 | +107.0 |
| **ஏனைய விவசாயப் பொருட்களின் தொகுதி** | | | | | | | | | | |
| கொக்கோ ... ... ... ... | ,, | 23.2 | 34.8 | + 50.0 | 4.1 | 7.3 | + 78.0 | 178.36 | 211.16 | + 18.4 |
| தயாரிக்கப்படாத புகையிலை ... ... | ப. இ. இரு. | 0.9 | 1.3 | + 44.4 | 2.8 | 5.1 | + 82.1 | 3.00 | 3.81 | + 27.0 |
| சிற்றனில்லா எண்ணெய் ... ... | ஆயி. இரு. | 337.7 | 297.8 | — 11.8 | 0.8 | 1.2 | + 50.0 | 2.44 | 3.99 | + 63.5 |
| **கொழுப்புத் திராவகத் தொகுதி** ... ... | | | | | | | | | | |
| கிளிசுரோல் ... ... ... | ஆயி. அந். | 21.8 | 24.8 | + 13.8 | 2.0 | 1.9 | — 5.0 | 89.65 | 78.61 | — 12.3 |
| கிளிசரீன் ... ... ... ... | ,, | — | 21.0 | — | — | 2.0 | — | — | 93.16 | — |
| **தயாரிக்கப்பட்ட பொருட்கள் தொகுதி** | | | | | | | | | | |
| மெருகூட்டப்பட்ட தோல் ... ... | ,, | 7.7 | 10.1 | + 31.2 | 1.6 | 1.8 | + 12.5 | 202.65 | 180.02 | — 11.2 |
| ஆட்டுத் தோல் ... ... ... | ,, | 2.5 | 3.3 | + 32.0 | 0.9 | 1.1 | + 22.2 | 344.52 | 338 23 | — 1.8 |
| குறைந்த, அதிக பெறுமதியுள்ள அருங்கற்கள் | ஆயி. கரெட் | 24.9 | 196.0 | +687.1 | 3.4 | 2.0 | — 14.2 | — | — | — |
| ஆபரணங்களும் தட்டானின் பொருட்களும் | ,, | — | — | — | 2.3 | 1.2 | — 47.8 | — | — | — |
| உடைகளும் ஆடைவகைகளும் ... ... | ஆயி. டசி. | 3.7 | 32.3 | +773.0 | ... | 4.2 | — | — | — | — |
| மேற்காணும் விடயங்களின் மொ. பெறுமதி | | | | | 110.2 | 139.5 | + 26.6 | | | |
| சகல சிறு ஏற்றுமதிப் பொருட்களினதும் மொத்தப் பெறுமதி ... ... | | | | | 121.2 | 152.2 | + 26.3 | | | |
| உள்ளடக்கத்தின் சதவீதம் ... ... | | | | | 90.9 | 91.7 | | | | |

* அ. செ. உ. சா. விற்கு உரிமையற்றவை.

மூலம் : இலங்கைச் சுங்கத் தரவுப்புள்ளிகள்.

அவற்றின் சராசரி க. ஏ. பெ. விலைகள் 6 சதவீதத்தாலும், 8 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்தன. மிளகு ஏற்றுமதி வருமானங்கள் 20 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. இது முழுவதும் ஏற்றுமதியளவானது 14 ஆயிரம் அந்தர்களால் அதிகரித்தமையால் ஏற்பட்டிருக்க, சராசரி ஏற்றுமதி விலையிலேற்பட்ட 32 சதவீத வீழ்ச்சி அதை ஓரளவு எதிரீடுசெய்தது.

கனிப்பொருட்கள் தொகுதியில் காரீயத்தின் ஏற்றுமதி வருவாய்கள் 80 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 1967இனதிலும்பார்க்க 10 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தன. காரீயத்தின் ஏற்றுமதி வருமானவதிகரிப்பு ஏற்றுமதி செய்யப்பட்ட அளவின் 4 சதவீத விரிவினாலும், சராசரிக் க. ஏ. பெ. விலையின் 12 சதவீத உயர்ச்சியினாலும் ஏற்பட்டதாகும்.

ஏனைய விவசாயப் பொருட்களின் தொகுதியிற் கொக்கோவினது ஏற்றுமதி வருமானங்கள் 70 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, முந்திய ஆண்டிலும் பார்க்க 30 இலட்சம் ரூபாய்கள் அல்லது 75 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இவ்வதிகரிப்பிற்கு, ஏற்றுமதி செய்யப்பட்ட அளவின் 50 சதவீதங்கொண்ட விரிவும் (அதாவது 23 ஆயிரம் அந்தர்களிலிருந்து 35 ஆயிரம் அந்தர்களுக்கு), ஏற்றுமதிச் சராசரி விலையின் 18 சதவீத அதிகரிப்பும் வகைதந்தன. தயாரிக்கப்படாத புகையிலையினது ஏற்றுமதி வருமானம், 1967ன் ரூபா 30 இலட்சங்களிலிருந்து, 1968ல் ரூபா 50 இலட்சங்களுக்கு அதிகரித்தது. இது ஏற்றுமதி செய்யப்பட்ட அளவின் 44 சதவீதங்கொண்ட அதிகரிப்பினாலும், சராசரி ஏற்றுமதி விலையின் 27 சதவீதங் கொண்ட உயர்ச்சியினாலுமாகும்.

**இறக்குமதிகள்**

சுங்கப் புள்ளிவிவரத்தின்படி 1968ன் இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதி ரூபாய் 4,350 இலட்சத்தாற் கூரிய அதிகரிப்பைக் காட்டியதென்று பக்கம் 284இல் தெரிவிக்கப்பட்டிருப்பதை முழு மனதுடன் ஏற்காத நிலையிற்றான் தெளிவுபடுத்த வேண்டும். இலங்கை நாணயம் குறைத்து மதிப்பிடப்பட்டிருப்பதும், இத்தகைய அதிகரிப்பிற்கு ஒரு காரணம் என்று கூறப்படினும், உண்மையாக இறக்குமதி செய்யப்பட்டவற்றின் பெறுமதியை மிகுதிப்படுத்திச் சுங்கத் தரவுகள் கூறியமையும் மற்றொரு காரணமாகும். இவ்வாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பெறுமதிகளின் மாற்றங்களை மொத்த இறக்குமதிகளின் தொகை மிகைப்படுத்திக் கூறுவதுடன் சென்ற ஆண்டின் இறக்குமதியின் பெறுமதியைக் குறைத்தும் கூறுகிறது. எடுத்துக் காட்டாக நுகர்ச்சிப் பொருட்களின் இறக்குமதியின் உட்குழுவாகிய 'உணவு-குடிவகை' சார்ந்த அரிசி, மா, சீனி ஆகியவற்றின் 1968ன் இறக்குமதி ரூபாய் 6,880 இலட்சம் என்று சுங்க எண் காட்டும் தொகை உணவு ஆணையாளரால் உண்மையாக இறக்குமதி செய்யப்பட்ட பெறுமதியிலும்பார்க்க ரூபாய் 340 இலட்சத்தால் கூடியிருந்தது. சுங்கத் தரவுகள், சென்ற ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட இப்பொருட்களின் பெறுமதியை ரூபாய் 350 இலட்சத்தால் குறைத்துக் கூறியுள்ளன. இந்த வேறுபாடுகளுக்காகச் சீராக்கப்பட்டபடியான இறக்குமதிகளின் மதிப்பிடப்பட்ட பெறுமதி சென்ற ஆண்டிலும் பார்க்க ரூபாய் 3,660 இலட்சம் கூடுதலாக விளங்கியது. நாணய மதிப்பிறக்கத்தால் ரூபாய் விலைகளிலேற்பட்ட அதிகரிப்பே இந்நிலைக்குக் காரணமாகும். அரிசியின் இறக்குமதிப் பெறுமானமான ரூ. 3,450 இலட்சத்திலுள்ள 41 சதவீதமான அதிகரிப்புக்கு அரிசியின் கொ. க. விலையில் ஏற்பட்ட தொன்னுக்கு ரூபா 363 அல்லது 57 சதவீதமான அதிகரிப்பே முழுக் காரணமாகுமென்பது கவனிக்கத்தக்கதாகும். அரிசி இறக்குமதிகளின் அளவு முந்தைய ஆண்டிலும் பார்க்க 10 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன.

உணவு ஆணையாளரால் உண்மையாக இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா, சீனி ஆகியவை சுங்கத் தரவுடன் சீராக்கப்பட்டபின்னேற்பட்ட உண்மை நிலையை அட்டவணை II (ஒ) 10 தருகிறது.

அட்டவணை II (ஒ) 10

உணவு ஆணையாளரின் இறக்குமதிகளுக்காகத் திருத்தியமைக்கப்பட்ட சுங்கத் தரவுகள்

| | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் 1967 | 1968 |
|---|---|---|
| 1. நுகர்ச்சிப் பொருட்கள் ... ... | 966 | 1,113 |
| இவற்றுள் | | |
| (அ) உணவும் குடிவகையும் ... ... | 818 | 955 |
| (1) அரிசி ... ... ... | 244 | 345 |
| (2) மா ... ... ... | 234 | 218 |
| (3) துப்பரவு செய்யப்பட்ட சீனி ... | 71 | 91 |
| (ஆ) ஆடைவகைகள் ... ... | 73 | 77 |
| (இ) மற்றைய நுகர்ச்சிப் பொருட்கள் ... | 75 | 81 |
| 2. நடுத்தரப் பொருட்கள் ... ... | 441 | 629 |
| 3. முதலீட்டப் பொருட்கள் ... ... | 330 | 383 |
| 4. வகுக்கப்படாத இறக்குமதிகள் ... ... | 36 | 14 |
| 5. மொத்த இறக்குமதிகள் ... ... | 1,773 | 2,139 |

உணவு ஆணையாளரின் உண்மையான இறக்குமதிகளான அரிசி, மா, சீனி ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் முறையிற் சீராக்கம் செய்யப்பட்ட தரவின் அடிப்படையிற் பார்க்கையில் 1968ல் இறக்குமதி செய்யப்பட்ட மொத்தப் பெறுமதி ரூபாய் 3,660 இலட்சத்தால் அல்லது 21 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இறக்குமதிகளின் பெறுமதியின் இவ்வதிகரிப்பு மூன்று பிரதான வகுப்புகளாலும் பங்கிடப்பட்டுள்ளது. சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில், '' நுகர்ச்சிப் பொருட்கள் '' இறக்குமதி ரூபாய் 1,470 இலட்சம் அல்லது 15 சதவீதத்தால் அதிகரித்ததெனினும், மொத்த இறக்குமதிகளில் அவற்றின் பங்கு 52 சதவீதமாக அமைந்து, 2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. '' நடுத்தரப் பொருட்களின் '' இறக்குமதிகள் ரூபாய் 1,880 இலட்சம் அல்லது 43 சதவீதமான விரிவைக் காட்டியுள்ளது. அத்துடன் மொத்த இறக்குமதிகளில் அவற்றின் பங்கு 4 சதவீதத்தால் அதிகரித்து 29 சதவீதமாக விளங்கியது. அதே வேளையில் '' முதலீட்டுப் பொருட்கள் '' ரூபாய் 530 இலட்சத்தால் அல்லது 16 சதவீதத்தால் அதிகரித்தன. எனினும், மீளப் பார்வையிடும் இவ்வாண்டில் மொத்த இறக்குமதிகளில் '' முதலீட்டுப் பொருட்களின் '' பங்கு 1 சதவீதத்தால் இறங்கி 18 சதவீதமாகவிருந்தது.

'' நுகர்வுப் பொருட்கள் '' வகுப்பில் இறக்குமதிகளின் பெறுமதியில் அதிகரிப்பு மூன்று துணை வகுப்புகளாலும் பங்கிடப்பட்டுள்ளது. அவையாவன '' உணவும் குடிவகையும் '' '' உடைகள் '' மற்றும் '' ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள் ''.

1967, 1968ம் ஆண்டுகளுக்கான அரிசி, சீனி, மா பற்றிய இறக்குமதிகள் தொடர்பான அளவுகள், பெறுமதிகள், சராசரி கொ. க. விலைகளை உணவு ஆணையாளரின் தரவுகளின்படியும், சுங்கத் தரவுகளின்படியும் அட்டவணை II (ஒ) 11 காட்டுகின்றது.

## அட்டவணை II (ஒ) 11

### அரிசி, மா, சீனி ஆயவற்றின் சுங்கப் பதிவுகளும் உண்மையான இறக்குமதிகளும்

| | உணவு ஆணையாளரின் தரவுகள் | | | | சுங்கத் தரவுகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | மாற்றம் | | | | மாற்றம் | |
| | 1967 | 1968 | முழுவதும் | % | 1967 | 1968 | முழுவதும் | % |
| அரிசி | | | | | | | | |
| அளவு: ஆயிரம் தொன்கள் | 381 | 344 | — 37 | — 9.7 | 349 | 364 | + 15 | + 4.3 |
| பெறுமதி: ப.இ.ரூ. .. | 244 | 345 | +101 | +41.4 | 211 | 341 | +130 | +61.6 |
| கொ.க.விலை: தொன்னுக்கு ரூபாய்கள் .. .. | 640.80 | 1003.44 | +362.64 | +56.6 | 603.01 | 936.84 | +333.83 | +55.4 |
| மா | | | | | | | | |
| அளவு: ஆயிரம் தொன்கள் | 517 | 359 | —158 | —30.6 | 505 | 422 | — 83 | —16.4 |
| பெறுமதி: ப.இ.ரூ. .. | 234 | 218 | — 16 | — 6.8 | 229 | 250 | + 21 | + 9.2 |
| கொ.க.விலை: தொன்னுக்கு ரூபாய்கள் .. .. | 453.26 | 607.90 | +154.64 | +34.1 | 452.74 | 592.52 | +139.78 | +30.9 |
| சீனி | | | | | | | | |
| அளவு: ஆயிரம் தொன்கள் | 226 | 220 | — 6 | — 2.7 | 243 | 242 | — 1 | — 0.4 |
| பெறுமதி: ப.இ.ரூ. .. | 71 | 91 | + 20 | +28.2 | 74 | 97 | + 23 | +31.1 |
| கொ.க.வி: தொன்னுக்கு ரூபாய்கள் .. .. | 313.70 | 413.25 | + 99.55 | +31.7 | 302.53 | 401.82 | + 99.29 | +32.8 |
| அரிசி, மா, சீனி ஆகியவற்றின் மொத்தப் பெறுமதி ப.இ.ரூ. .. | 549 | 654 | +105 | +19.1 | 514 | 688 | +174 | +33.9 |

மூலங்கள் : உணவு ஆணையாளரின் திணைக்களம், இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்.

மேலே குறித்த தரவுகள் 1968ல் உணவு ஆணையாளரால் உண்மையாக இறக்குமதி செய்யப்பட்ட அரிசி, மா, சீனியின் மொத்தத் தொகை 6,540 இலட்சம் ரூபாய்களாக விளங்கியதைக் காட்டுகின்றன. இது 1967லும் பார்க்க ரூபாய் 1,050 இலட்சம் அல்லது 19 சதவீத அதிகரிப்பை உணர்த்து கின்றது. அதே வேளையில் உணவு ஆணையாளரால் இறக்குமதி செய்யப்பட்ட அரிசியினதும், சீனியினதும் பெறுமதி முறையே ரூபாய் 3,450 இலட்சமாகவும், ரூபா 910 இலட்சமாகவும் விளங்கி, சென்ற ஆண்டு செய்யப்பட்ட இறக்குமதி களிலும்பார்க்க ரூபாய் 1,010 இலட்சத்தால் அல்லது 28 சதவீதத்தாலும், ரூபாய் 200 இலட்சத்தால் அல்லது 14 சதவீதத்தாலும் முறையே உயர்ந் திருந்தது. மா இறக்குமதியின் பெறுமதி வீழ்ச்சியுற்று, ரூபாய் 2,180 இலட்சமாக விளங்கியது. இது 1967 உடன் ஒப்பிடுகையில், ரூபாய் 160 இலட்சத்தால் அல்லது 7 சதவீதத்தாற் குறைவுற்றிருந்தது.

மீளப்பார்வையிடும் இவ்வாண்டில் அரிசி இறக்குமதிகளின் சராசரி கொ. க. விலை 57 சதவீதத்தால் அல்லது தொன்னுக்கு ரூபாய் 363ஆல் அதிகரித்தமை அரிசி இறக்குமதிகளின் பெறுமதியை உயர்த்தியதற்கு முழுக் காரணமாகும். இதன் விளைவால் இப்பண்டத்தின் இறக்குமதியின் அளவு 37 ஆயிரம் தொன்களால் அல்லது 10 சதவீதத்தாற் குறைந்திருந்தமை மேலதிகமாக எதிரீடு செய்யப்பட்டுள்ளது. அரிசியின் சராசரி கொ. க. விலையின் கூரிய அதிகரிப்பு உலகச் சந்தைகளின் விலைகளின் போக்கிற்கு அமையவே விளங்கியது. இது வெளிநாடுகளில் அறுவடையின் வீழ்ச்சியினுலேற்பட்ட தட்டுப்பாடுகளினுலும், இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கத்தினுலேற்பட்ட ரூபாய் விலைகளின் ஏற்றத்தினுலும் ஏற்பட்டதாகும்.

இறக்குமதி செய்யப்பட்ட மா 31 சதவீதமாக அல்லது 158 ஆயிரம் தொன்களால் கூரிய முறையிற் சுருங்கியதன் விளைவாக, மா இறக்குமதிகளின் பெறுமதி ரூபாய் 160 இலட்சமாக அல்லது 7 சதவீதமாக வீழ்ச்சியுற்றது. இதனின் விளைவு சராசரி கொ. க. விலை 34 சதவீதத்தால் அல்லது தொன்னென்றிற்கு ரூபாய் 155/-ஆல் உரிய முறையில் உயர்ந்ததால், பெருமளவு எதிரீடுசெய்யப்பட்டது. இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கம் ரூபாய் விலையின் அதிகரிப்பிற்குப் பெருங் காரணமாகும். சென்ற ஆண்டிற் சேர்த்து வைக்கப்பட்ட கையிருப்பின் பெருந்தொகை மீளப் பார்வையிடும் இவ்வாண்டின் குறைந்தளவு மாவின் இறக்குமதிக்குக் காரணமாகும். அத்துடன் 1967ல் இறக்குமதி செய்யப்பட்ட மாவின் அளவு புறநடையாக உயர்ந்திருந்தது.1

சராசரி கொ. க. விலை 32 சதவீதத்தால் அல்லது ஒரு தொன்னுக்கு ரூபாய் 100ஆல் அதிகரித்ததே, 1967 உடன் 1968ம் ஆண்டை ஒப்பிடுகையில், சீனியின் இறக்குமதிகளின் பெறுமதி ரூபாய் 200 இலட்சத்தால் அதிகரித்ததற்கு முழுக்காரணமாகும். எனினும் சென்ற ஆண்டிலும்பார்க்க 3 சதவீதத்தால் அல்லது 6,000 தொன்களால் இறக்குமதிகளின் அளவு சுருங்கியது. சீனியின் சராசரி கொ. க. விலையின் உயர்விற்குப் பல்நாட்டு அங்காடிகளில் (சந்தைகளில்) நிலவிய உயர்ந்த விலைகளும் ஒரு காரணமாவதுடன்,2 இலங்கை ரூபாவின் நாணய மதிப்பிறக்கமும் ஒரு ஏதுவாய் அமைகிறது.

சுங்கப் பதிவேடுகளின் படியான இறக்குமதிகளைப் பிரதான தொகுதிகளின் படியும், பண்டங்களின் அல்லது பண்டத் தொகுதியின்படியும் வகுத்து அட்டவணை II (ஒ) 12 காட்டுகின்றது.

1968ம் ஆண்டின் சுங்கப்பதிவேட்டிற் பதிவுசெய்யப்பட்ட இறக்குமதிகளிலேற்பட்ட ரூபாய் 4,350 இலட்சமான அதிகரிப்பு மூன்று பிரதான தொகுதிகளாலும் பங்கிடப்பட்டுள்ளது. " நுகர்வுப் பொருட்கள் " வகுப்பிற்குன் இந்த அதிகரிப்பு பெரிதும் காணப்பட்டது. சென்ற ஆண்டிலும் பார்க்க இந்த இறக்குமதிகளின் பெறுமதி ரூபாய் 2,160 இலட்சத்தால் அல்லது 23 சதவீதத்தால் விரிவடைந்தது. மொத்த இறக்குமதிகளில் இந்த தொகுதியின் பங்கு 1967ல் 54 சதவீதமாயிருந்து, மீளப் பார்வையிடும் இவ்வாண்டில் 1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்று, 53 சதவீதமாகவிருந்தது.

பெறுமதி அடிப்படையில் " உணவும் குடிவகையும் " என்ற பொருட்கள் அதிகரித்த நிலையில் இறக்குமதி செய்யப்பட்டதே, " நுகர்வுப் பொருட்களின் " கூரிய அதிகரித்த இறக்குமதிக்குப் பெரும் காரணமாகும். 1968ல் இறக்குமதி செய்யப்பட்டவற்றின் பெறுமதி ரூபாய் 9,890 இலட்சமாக விளங்கி, ரூபாய் 2,060 இலட்சம் அல்லது 26 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இது ரூபாய் 1,740 இலட்சத்தால் அல்லது 34 சதவீதத்தால் அரசாங்கத்தின் அரிசி, மா, சீனி ஆகியவற்றின் மொத்த இறக்குமதிகள் சுங்கப் பதிவேடுகளின்படி அதிகரித்தமையினுலேற்பட்டதாகும். ஆயினும், முந்திய ஒரு

---

1. 1967ம் ஆண்டு மத்திய வங்கி ஆண்டறிக்கை அட்டவணை II (ஐ) 9, பக்கம் 198.
2. பீ. 96 சீனி கும்பலாக, தொன்னென்றுக்கு, ஐக்கிய இராச்சியத்தில், கொ. கா. க. என்ற அடிப்படையிலான நாளாந்த இலண்டன் விலைகளின் ஆண்டுச் சராசரி 1067ல் £. 19.41 ஆகவும் 1968 £. 21.85 ஆகவும் உள்ளன. மூலம் : சாணிகோங் சீனி மீளாய்வுகள்.

அட்டவணை

பிரதான தொகுதிகளின்படியும் பண்டங்களின்படியும்

| | பத்து இலட்சம் ரூபாய்கள் | | |
|---|---|---|---|
| | 1964 | 1965 | 1966 |
| 1. நுகர்ச்சிப் பொருட்கள் | 1,263 | 779 | 1,161 |
| இவற்றில் | | | |
| (அ) உணவும் குடிவகையும் | 1,008 | 604 | 956 |
| (1) அரிசி | 326 | 144 | 367 |
| (2) மா | 137 | 98 | 113 |
| (3) (அ) தூய்மையாக்கப்பட்ட சீனி | 185 | 71 | 103 |
| (ஆ) ஏனைய சீனி வகைகள் (சர்க்கரை, பனங்கட்டி, கற்கண்டு) | 2 | 1 | 2 |
| (4) பாலும் பாற்பொருட்களும் | 94 | 77 | 77 |
| (5) இறைச்சி, மீன், முட்டைகள் | 74 | 61 | 101 |
| இவற்றில் | | | |
| (அ) கருவாடு (மாலதீவு மீனைத் தவிர்த்து இறால் கருவாடு உட்பட) | 52 | 43 | 75 |
| (ஆ) ஏனைய மீன்கள் | 17 | 13 | 19 |
| (இ) இறைச்சியும் இறைச்சித் தயாரிப்புகளும் | 5 | 5 | 4 |
| (ஈ) முட்டைகள் | — | .. | — |
| (6) ஏனைய உணவுகள் | 164 | 124 | 170 |
| இவற்றில் | | | |
| (அ) உருளைக்கிழங்குகள் | 25 | 18 | 24 |
| (ஆ) கடலைவகைகள், பருப்பு வகைகள் | 51 | 39 | 64 |
| (இ) வெங்காயம் | 26 | 21 | 20 |
| (ஈ) மிளகாய் | 46 | 30 | 43 |
| (7) குடிவகைகளும் தயாரிக்கப்பட்ட புகையிலையும் | 3 | 2 | 2 |
| (ஆ) ஆடை வகைகள் (உடைகள் உட்பட) | 165 | 107 | 119 |
| (இ) ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள் | 90 | 68 | 86 |
| இவற்றில் | | | |
| (1) மோட்டோர் கார்கள் | 3 | 3 | 3 |
| (2) கடிகாரங்களும், மணிக்கூடுகளும் | .. | .. | .. |
| (3) வானொலிப் பெட்டிகள் | .. | .. | .. |
| (4) இரப்பர் ரயர்களும் ரியூப்புக்களும் | 4 | 7 | 5 |
| (5) மருந்துகளும் மருந்துப் பொருட்களும் | 26 | 21 | 35 |
| 2. நடுத்தரமான பொருட்கள் | 397 | 414 | 470 |
| இவற்றில் | | | |
| (1) உரம் | 78 | 88 | 91 |
| (2) நில எரி எண்ணெய்ப் பொருட்கள் | 93 | 109 | 130 |
| (3) நிலக் கரி | 12 | 10 | 3 |
| (4) இரசாயனப் பொருட்களும் கலவைகளும் | 37 | 30 | 36 |
| (5) சாயப் பொருட்களும் தோற்பதனீட்டுப் பொருட்களும் வர்ணப் பொருட்களும் | 12 | 9 | 13 |
| (6) தேயிலையும் ஏனைய பெட்டிகளும் | 15 | 12 | 18 |
| (7) காகிதமும் காகித மட்டையும் | 35 | 28 | 50 |
| (8) நெசவு நூலும் தையல் நூலும் | 22 | 41 | 42 |
| (9) தயாரிக்கப்படாத புகையிலை | 7 | 9 | 8 |
| 3. முதலீட்டுப் பொருட்கள் | 305 | 261 | 361 |
| இவற்றில் | | | |
| (1) கட்டட ஆக்கப் பொருட்கள் | 93 | 54 | 70 |
| இவற்றில் | | | |
| (அ) சீமெந்து | 15 | 17 | 20 |
| (2) போக்குவரத்துச் சாதனங்கள் | 58 | 96 | 116 |
| (3) இயந்திரங்களும் உபகரணங்களும் | 145 | 100 | 162 |
| 4. மொத்தம் (விடயங்கள் 1,2,3) | 1,965 | 1,454 | 1,992 |
| 5. பகுக்கப்படாத இறக்குமதிகள் | 10 | 20 | 36 |
| 6. சகல இறக்குமதிகளினதும் மொத்தம் | 1,975 | 1,474 | 2,028 |

அல்லது பண்டத் தொகுதிகளின்படியுமான இறக்குமதிகள் 1964-68

மொத்த இறக்குமதிகளின் சதவீதமாக

| 1967 | 1968 | 1964 | 1965 | 1966 | 1967 | 1968 |
|---|---|---|---|---|---|---|
| 931 | 1,147 | 63.9 | 52.8 | 57.2 | 53.6 | 52.8 |
| 783 | 989 | 51.0 | 41.0 | 47.1 | 45.1 | 45.5 |
| 211 | 341 | 16.5 | 9.8 | 18.1 | 12.1 | 15.7 |
| 229 | 250 | 6.9 | 6.6 | 5.6 | 13.2 | 11.5 |
| 74 | 97 | 9.4 | 4.8 | 5.1 | 4.3 | 4.5 |
| .. | .. | 0.1 | 0.1 | 0.1 | .. | .. |
| 66 | 74 | 4.8 | 5.2 | 3.8 | 3.8 | 3.4 |
| 56 | 70 | 3.7 | 4.1 | 5.0 | 3.2 | 3.2 |
| 44 | 58 | 2.6 | 2.9 | 3.7 | 2.5 | 2.7 |
| 9 | 11 | 0.9 | 0.9 | 0.9 | 0.5 | 0.5 |
| 9 | 1 | 0.3 | 0.3 | 0.2 | 0.2 | .. |
| — | — | .. | .. | — | — | — |
| 126 | 125 | 8.3 | 8.4 | 8.4 | 7.2 | 5.8 |
| 7 | .. | 1.3 | 1.2 | 1.2 | 0.4 | .. |
| 53 | 56 | 2.6 | 2.6 | 3.1 | 3.0 | 2.6 |
| 19 | 17 | 1.3 | 1.4 | 1.0 | 1.1 | 0.8 |
| 29 | 34 | 2.3 | 2.0 | 2.0 | 1.7 | 1.6 |
| 2 | 2 | 0.2 | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| 73 | 77 | 8.4 | 7.3 | 5.9 | 4.2 | 3.5 |
| 75 | 81 | 4.6 | 4.6 | 4.2 | 4.3 | 3.7 |
| 10 | 7 | 0.2 | 0.2 | 0.1 | 0.6 | 0.3 |
| .. | .. | .. | .. | .. | .. | .. |
| .. | 3 | .. | 0.1 | 1 | .. | 0.1 |
| 4 | 3 | 0.2 | 0.5 | 0.2 | 0.2 | 0.1 |
| 22 | 23 | 1.3 | 1.4 | 1.7 | 1.3 | 1.1 |
| 441 | 629 | 20.1 | 28.1 | 23.2 | 25.4 | 29.0 |
| 80 | 110 | 3.9 | 6.0 | 4.5 | 4.6 | 5.1 |
| 112 | 196 | 4.7 | 7.4 | 6.4 | 6.4 | 9.0 |
| 9 | 4 | 0.6 | 0.7 | 0.1 | 0.5 | 0.2 |
| 38 | 45 | 1.9 | 2.0 | 1.8 | 2.2 | 2.1 |
| 10 | 15 | 0.6 | 0.6 | 0.6 | 0.6 | 0.7 |
| 9 | 10 | 0.8 | 0.8 | 0.9 | 0.6 | 0.5 |
| 41 | 37 | 1.8 | 1.9 | 2.5 | 2.4 | 1.7 |
| 45 | 71 | 1.1 | 2.8 | 2.1 | 2.6 | 0.5 |
| 6 | 10 | 0.4 | 0.6 | 0.4 | 0.3 | |
| 330 | 383 | 15.4 | 17.7 | 17.8 | 19.0 | 17.6 |
| 48 | 95 | 4.7 | 3.3 | 3.4 | 2.8 | 4.5 |
| 9 | 17 | 0.8 | 1.2 | 1.0 | 0.5 | 0.8 |
| 89 | 80 | 2.9 | 6.5 | 5.7 | 5.1 | 3.7 |
| 175 | 195 | 7.3 | 6.8 | 8.0 | 10.1 | 9.0 |
| 1,702 | 2,159 | 99.5 | 98.6 | 98.2 | 97.9 | 99.4 |
| 36 | 14 | 0.5 | 1.4 | 1.8 | 2.1 | 0.6 |
| 1,738 | 2,173 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 | 100.0 |

மூலம்: இலங்கைச் சுங்கப் புள்ளிவிபரங்கள்.

பிரிவிற் காட்டப்பட்டதற்கமைய, உண்மையாக இறக்குமதி செய்யப்பட்ட இப் பண்டங்களின் மாற்றங்கள் சுங்கப் பதிவேடுகளுடன் வேறுபடுகின்றன. 1967ம் ஆண்டின் மட்டங்களுடன் ஒப்பிடுகையில், '' பாலும், பால் உற்பத்திப் பொருட்களும் '' 740 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 80 இலட்ச ரூபாய் அல்லது 12 சதவீதம் கொண்ட அதிகரிப்பையும், '' இறைச்சி, மீன் '' இறக்குமதிகள் 700 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, ரூபாய் 140 இலட்சம் அல்லது 24 சதவீதம் கொண்ட அதிகரிப்பையும் காட்டின. பின் கூறப்பட்ட தொகுதியிற் பெரும்பகுதியான அதிகரிப்பு கருவாட்டின் இறக்குமதி அதிகரிப்பினலேற்பட்டதாகும். '' ஏனைய உணவுகளின் '' (கடலைகள், பருப்பு வகைகள், கறிச்சரக்கு வகைகள் உட்படுவன) இறக்குமதிப் பெறுமானம் 1968ல் ரூபாய் 10 இலட்சத்தால் அல்லது 1 சதவீதத்தால் ரூபாய் 1,250 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது. இவ்வுபதொகுதிகளிற் கடலைகள், பருப்புக்கள், செத்தல் மிளகாய் ஆகிய இறக்குமதிகள் அதிகரித்து இருக்கையில், வெங்காயத்தின் இறக்குமதி வீழ்ச்சியுற்றது.

மீளப்பார்வையிடும் ஆண்டில் நுகர்ச்சிப் பொருட்களின் ஏனைய இரு உப தொகுதிகளான '' ஆடை வகைகள் '','' ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள் '' ஆகியன முறையே ரூபாய் 40 இலட்சத்தாலும், ரூபாய் 60 இலட்சத்தாலும், ரூபாய் 770 இலட்சத்திற்கும், ரூபாய் 810 இலட்சத்திற்கும் அதிகரித்தன. மொத்த இறக்குமதிகளில் '' ஆடைகள் '' ஏனைய இறக்குமதிகள், ஆகியவற்றின் பங்கு 4 சதவீதமாகவே மாற்றமுருது இருந்தன. '' ஏனைய நுகர்ச்சிப் பொருட்கள் '' என்ற உப தொகுதியில் '' மருந்தும், மருந்துப் பொருட்களும் '' முந்திய ஆண்டிலும்பார்க்க ரூபாய் 10 இலட்சத்தால் அல்லது 5 சதவீதத்தால் அதிகரித்தன. முந்திய இரு ஆண்டுகளிலும் புறக்கணிக்கத்தக்க அளவில் இருந்த '' வானெலிப் பெட்டிகளின் '' இறக்குமதி 1968ல் 30 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன. ஆயினும், இவ்வாண்டில் உந்து வண்டிகளின் (மோட்டார் கார்களின்) இறக்குமதிகள் ரூபாய் 30 இலட்சத்தால் ரூபாய் 70 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றன.

'' நடுத்தரப் பொருட்கள் '' என்ற தொகுதியில் '' பெற்ருேலியப் பொருட்களின் '' இறக்குமதிப் பெறுமதி ரூபாய் 1,960 இலட்சமாகும். இது முந்திய ஆண்டிலும்பார்க்க ரூபாய் 840 இலட்சம் உயர்வானது. இப்பொருளின் இறக்குமதிப் பெறுமதியிலேற்பட்ட கூரிய அதிகரிப்பானது, இறக்குமதி அளவுகள் 990 இலட்சம் கலன்களால் அல்லது 37 சதவீதத்தால் அதிகரித்தமையினலும், சராசரி கொ. கா. க. விலை கலனுக்கு பத்து சதத்தால் அல்லது 24 சதவீதத்தால் உயர்வுற்றமையாலும் ஏற்பட்டதாகும். 1968ல் இறக்குமதி செய்யப்பட்ட பெற்ருேலியப் பொருட்கள் 3,650 கலன்களாகும். சராசரிக் கொ. கா. க. விலை கலனுக்கு 52 சதமாகவுள்ளது. சுயஸ் கால்வாய் மூடப்பட்டதைத் தொடர்ந்து நன்னம்பிக்கை முனை வழிப்பாதையின் நீடித்த தூரத்தாலும், ஸ்டேலிங் பவுணின் நாணய மதிப்பிறக்கத்தினலும் மேலதிகக் கேழ்வுக் கட்டணங்கள் கப்பற் சங்கங்களால் விதிக்கப்பட்டன. இதன் பயனக ஐ. ச. சோ. கு. வில் இருந்து பெறும் பெற்ருேலியப் பொருட்களின் சராசரி கொ. கா. க. விலை 1968ல் கலனுக்கு 26 சதத்தால் கலனுக்கு 65 சதத்திற்கு உயர்வுற்றது. சென்ற ஆண்டிலும்பார்க்க, மொத்த இறக்குமதியில் பெற்ருேலிய இறக்குமதியின் பங்கு 3 சதவீதத்தால் அதிகரித்து, 9 சதவீதமாக விளங்கியது. 1967ம் ஆண்டு இறக்குமதி மட்டங்களுடன் ஒப்பிடுகையில், 1968ல் இறக்குமதி செய்யப்பட்ட உரம் ரூபாய் 300 இலட்சத்தால் அல்லது 38 சதவீதத்தால் அதிகரித்து, ரூபாய் 1,100 இலட்சமாக விளங்கியது. 1968ல் 338 ஆயிரம் தொன்களாக விளங்கிய உரத்தின் இறக்குமதி அளவு, 61 ஆயிரம் தொன்கள் அல்லது 22 சதவீத அதிகரிப்பைக் காட்டுகிறது. அதே வேளையில் ஒரு தொன்னுக்கு ரூபாய் 326 விளங்கிய சராசரி கொ. கா. க. விலை, ஒரு தொன்னுக்கு ரூபாய் 34ஆல் அல்லது 12 சதவீதத்தால் உயர்ந்தது. 1968ல் இறக்குமதி செய்யப்பட்ட '' நூலும், இழையும் '' ரூபாய் 260 இலட்சத்தால் அல்லது 58 சதவீதத்தால் உயர்ந்து, ரூபாய் 710 இலட்சமாக விளங்கியது. நடுத்தரப் பொருட்கள் வகுப்பைச் சார்ந்தவையையொட்டி ஏற்பட்ட குறிப்பிடத்தக்க ஏனைய மாற்றல்களாவன '' இரசாயன தனிமங்கள், பல்சினைப் பொருட்கள் ', ரூபாய் 70 இலட்சத்தால் அல்லது, 8 சதவீதத்

தாலும், " சாயம் பூசல், மெருகூட்டல், நிறப்பூச்சுப் பொருட்கள்" ரூபாய் 50 இலட்சத்தால் அல்லது 50 சதவீதத்தாலும், தயாரிக்கப்பட புகையிலை ரூபாய் 40 இலட்சத்தால் அல்லது 67 சதவீதத்தாலும் அதிகரித் தமையேயாகும். எனினும், " நிலக்கரி ", " தாள் தாள்மட்டை " ஆகியவற் றின் இறக்குமதிகள் வீழ்ச்சியைப் பதிவுசெய்தன.

" முதலீட்டப் பொருட்கள்" வகையைச் சார்ந்த "கட்டடப் பொருட்கள்" " இயந்திரங்கள் துணைக்கருவிகள் முறையே ரூபாய் 950 இலட்சமாகவும், ரூபாய் 1,950 இலட்சமாகவும் விளங்கி, முறையே ரூபாய் 470 இலட்சத்தால் அல்லது 98 சதவீதத்தாலும், ரூபாய் 200 இலட்சத்தால் அல்லது 11 சத வீதத்தாலும் உயர்ந்தன. மறுபுறம் சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில், "போக்குவரத்துச் சாதனங்களின்" இறக்குமதிப் பெறுமதி ரூபாய் 90 இலட் சம் அல்லது 10 சதவீதம் கொண்ட சுருத்தைக் காட்டியது. "கட்டடப் பொருட்கள்" என்றும் துணைக் குழுவைச்சார்ந்த சீமெந்து இறக்குமதியின் பெறுமதி ரூபாய் 170 இலட்சமாக அமைந்து, 1967ல் இறக்குமதி செய்யப் பட்டதிலும்பார்க்க ரூபாய் 80 இலட்சம் அல்லது 89 சதவீத கூரிய அதி கரிப்பைப் பதிவுசெய்தது. இறக்குமதி செய்யப்பட்ட சீமெந்தின் அளவில் ஏற்பட்ட கூரிய விரிவே சீமெந்து இறக்குமதிகளின் பெறுமதியிலேற்பட்ட அதிகரிப்பிற்குப் பெருமளவு காரணமாகும். இது 1967ல் 99 ஆயிரம் தொன்களாக இருந்து மீளப்பார்வையிடும் ஆண்டில் 180 ஆயிரம் தொன் களாகக் கூடியுள்ளது. சராசரிக் கொ. கா. க. விலை தொன்ஞென்றிற்கு ரூபாய் 2/- கூடியதால், இதன் விளைவு வலிவுபடுத்தப்பட்டுள்ளது. 1968ல் சீமெந்தின் சராசரி கொ. கா. க. விலை தொன்ஞென்றிற்கு ரூபாய் 92/- ஆக விளங்கியது.

சுங்கத் தரவுகளின்படியும், மத்திய வங்கியின் குறிகாட்டியால் அளவிடப் பட்டபடியும் சென்ற ஆண்டில் கூரிய முறையில் வீழ்ச்சியடைந்த மொத்த இறக்குமதியின் அளவு மீளப்பார்வையிடும் இவ்வாண்டில் மேலும் 2 சத வீதத்தால் வீழ்ச்சியுற்று, 83 புள்ளிகளாக (அடியாண்டு 1958=100) விளங் கியது. பிரதான வகுப்புகளைச்சார்ந்த இறக்குமதிகளின் முறையான குறி காட்டிகள் "நுகர்வுப் பொருட்களினதும்", "முதலீட்டுப் பொருட்" குழுக் களினதும், அளவுகளிலேயே இச்சுருக்கம் ஏற்பட்டதென்பதைக் காட்டுகின் றன. மறுபக்கத்தில் இறக்குமதி செய்யப்பட்ட நடுத்தரப் பொருட்களின் அளவு ஒரு விரிவைப் பதிவுசெய்துள்ளது. அதே வேளையில் முறையே 75 புள்ளிகளாகவும், 55 புள்ளிகளாகவும் உள்ள "நுகர்வு", "முதலீட்டுப்" பொருட்களின் அளவுக் குறிகாட்டிகள் முறையே 5 சதவீத, 15 சதவீத வீழ்ச்சிகளைப் பிரதிபலித்தன. மற்றும் "நடுத்தரப் பொருட்கள்" 141 புள்ளி களாக அமைந்து 10 சதவீத அதிகரிப்பைக் காட்டின. சென்ற ஆண்டோடு ஒப்பிடுகையில், "நுகர்வுப் பொருட்கள்" பகுப்பில் இறக்குமதி அளவின் வீழ்ச்சி எல்லா மூன்று துணைக் குழுக்களையும் பாதித்தது ; அவையாவன "உணவும் குடிவகையும்", "உடைகள்", "அத்துடன்" "ஏனைய நுகர்வுப் பொருட்கள்". இவற்றின் குறிகாட்டிகள் முறையே 100 புள்ளிகள், 34 புள்ளிகள், 31 புள்ளிகளாக அமைந்து, முறையே 3 சதவீத, 13 சதவீத, 12 சதவீத வீழ்ச்சிகளைக் காட்டின.

1968லும், அண்மை ஆண்டுகளிற் காணப்பட்ட மேல் நோக்கும் போக்கினை சகல இறக்குமதிகளினதும் சராசரி விலை காட்டியது. 1968ன் மத்திய வங்கியின் குறிகாட்டியின்படி இறக்குமதி விலைகள் (அடி வருடம் 1958=100) சராசரி 160 புள்ளிகளாக விளங்கி, 1967 உடன் ஒப்பிடுகையில், 30 சத வீதத்தால் உயர்ந்திருந்தது. பிரதான வகுப்பைச்சார்ந்த இறக்குமதிகள் பற்றிய விலைக் குறிகாட்கள் "நுகர்வு" "நடுத்தரப் பொருட்கள்" முறையே 36 சதவீதத்தாலும் 22 சதவீதத்தாலும் உயர்ந்து, முறையே புள்ளிகள் 155 புள்ளிகள் ஆகவும், 105 புள்ளிகள் ஆகவும் இருக்கையில், "முதலீட்டப் பொருட்கள்" குறைந்த கூரிய முறையிற்ருன், அதாவது 18 சதவீதத்தால் உயர்ந்து, 241 புள்ளிகளாக உயர்வுற்றன என்பதைக் காட்டுகின்றன. "நுகர் வுப் பொருட்கள்" வகுப்பைச் சார்ந்தவற்றிற்கூட எல்லா மூன்று துணைக் குழுக்களும் அதிகரித்த விலைகளைப் பதிவுசெய்தன. "உணவும் குடிவகையும்",

…ந்தும் பெற்ற இறக்குமதிகளின் பெறுமதி, ஐரோப்பியப் பொரு… சமூகத்திலிருந்து பெற்றவையைத் தவிர்த்து, அதிகரித்தது. ஐரோப்… பொருளாதாரச் சமூகத்திலிருந்து பெற்ற இறக்குமதிகள் ஒரு வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. அட்டவணை II (ஒ) 14ல் உள்ள தரவுகள், பிரதான நாணயப் பகுதிகளின்படியும், பிரதேசங்களின்படியுமான வர்த்தக அமைப்பைத் தருகின்றன.

1968ல் ஸ்ரேர்லிங் பிரதேசத்துக்கான ஏற்றுமதிகளின் பெறுமதி 8,640 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, முந்திய ஆண்டினுக்குரியதைவிட 690 இலட்சம் ரூபாய்கள் அல்லது 9 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்தது. எனினும், இலங்கையின் மொத்த ஏற்றுமதிகளில் இப் பிரதேசத்தின் பங்கு 42 சதவீதமாகவமைந்து, 5 சதவீத வீழ்ச்சியைப் பதிவுசெய்தது. ஸ்ரேர்லிங் பிரதேசத்திலிருந்து பெற்ற இறக்குமதிகள் 7,610 இலட்சம் ரூபாய்களாக வமைந்து, 1,450 இலட்சம் ரூபாய்களால் அல்லது 24 சதவீதத்தாற் கூர்மையாக அதிகரித்திருந்தன. இலங்கையின் மொத்த இறக்குமதிகளில் ஸ்ரேர்லிங் பிரதேசத்தின் பங்கு 35 சதவீதமாகவமைந்து, 1967 உடன் ஒப்பிடும்போது, எதுவிதமாற்றமுமில்லாதிருந்தது. 1968ல் இப்பிரதேசத்தினதுடனான வணிக வர்த்தக நிலுவை 1,030 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மிகையைக் காட்டிற்று. ஒப்பீடு செய்யும்பொழுது 1967ல் இம் மிகை 1,790 இலட்சம் ரூபாய்களாகவிருந்தது.

மீளப்பார்வையிடும் ஆண்டில் டொலர் பிரதேசத்துக்கான ஏற்றுமதிகள் 2,190 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, முந்திய ஆண்டிற்குரியதைவிட 130 இலட்சம் ரூபாய்கள் அல்லது 6 சதவீத அதிகரிப்பைக் காட்டின. மறுபக்கத்தில், இப்பிரதேசத்திலிருந்து பெற்ற இறக்குமதிகள் 2,360 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 1,120 இலட்சம் ரூபாய்களால் அல்லது 90 சதவீதத்தால் அதிகரித்தன.[1] 1967 உடன் ஒப்பிடும்போது, மொத்த ஏற்றுமதிகளில் டொலர்ப் பிரதேசத்தின் பங்கு 11 சதவீதமாகவிருந்து, 1 சதவீத வீழ்ச்சியைக் காட்டியிருக்க, இவ்வாண்டில் மொத்த இறக்குமதிகளில் அதன் பங்கு 11 சதவீதமாக அமைந்து, 4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 1968ல் டொலர் பிரதேசத்தினுடனான வணிகப்பொருள் வர்த்தக நிலுவை 170 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறையைப் பதிவுசெய்தது; இது, முந்திய ஆண்டிற் பதிவுசெய்யப்பட்ட 820 இலட்சம் ரூபாய்கள் கொண்ட மிகைக்கு முரண்பாடாகவமைந்தது.

1968ல் பொதுநலவமைப்பு நாடுகளுக்கான ஏற்றுமதிகளின் பெறுமதி 8,140 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, முந்திய ஆண்டினுக்குரியதைவிட 630 இலட்சம் ரூபாய்களால் அல்லது 8 சதவீதத்தால் அதிகமாகவிருந்தது. பொதுநலவமைப்பு நாடுகளிலிருந்து பெற்ற இறக்குமதிகள் 7,890 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 1,660 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அல்லது 27 சதவீத அதிகரிப்பைக் காட்டின. மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் மொத்த ஏற்றுமதிகளில் பொதுநலவமைப்பு நாடுகளின் பங்கு 4 சதவீதத்தால் 40 சதவீதத்துக்கு வீழ்ச்சியுற்றிருக்க, மொத்த இறக்குமதிகளில் அதன் பங்கு 36 சதவீதமாக அமைந்து, 1967ற்குரியதைவிட எதுவித மாற்றமும் காட்டாதிருந்தது. பொதுநலவமைப்பு நாடுகளுடனான இலங்கையின் வணிகப் பொருள் வர்த்தக நிலுவை 250 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 1967ம் ஆண்டுக்குரியதைவிட 1,030 இலட்சம் ரூபாய்களாற் குறைவுற்றிருந்தது.

---

1. டொலர் பிரதேசத்திலிருந்து பெற்ற ரூபா 2,360 இலட்சம் கொண்ட மொத்த இறக்குமதிப் பெறுமானத்தில் ரூபாய் 1,370 இலட்சம் அல்லது 63 சதவீதமானவை பண்டவுதவிகளின்கீழ்ப் பெறப்பட்டவையாகும்.

1968ல் ஐரோப்பிய பொருளாதார சமூகத்துக்கான ஏற்றுமதிகள் 1,950 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, முந்திய ஆண்டிற்குரியதைவிட 550 இலட்சம் ரூபாய்களால் அல்லது 39 சதவீதத்தால் அதிகரித்திருக்க, அச்சமூகத்திலிருந்து பெற்ற இறக்குமதிகள் 2,600 இலட்சம் ரூபாய்களாகவமைந்து' 90 இலட்சம் ரூபாய்களால் அல்லது 3 சதவீதத்தால் குறைவுற்றிருந்தன. மொத்த ஏற்றுமதிகளில் சமூகத்தின் பங்கு 10 சதவீதமாக அமைந்து, 2 சதவீத அதிகரிப்பைப் பதிவுசெய்திருக்க, மொத்த இறக்குமதிகளில் அதன் பங்கு 12 சதவீதமாக அமைந்து, 3 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. 1968ல் சமூகத்தினுடனான வர்த்தக நிலுவை 650 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறையைப் பதிவுசெய்தது; இது, 1967இற்குரியதைவிட 640 இலட்சம் ரூபாய்கள் கொண்ட சீர்திருத்தமாகும்.

1968ல் ஐரோப்பிய கட்டில்லா வர்த்தகச் சங்கத்துக்கான ஏற்றுமதிகள், முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில், 5,050 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 210 இலட்சம் ரூபாய்களால் அல்லது 4 சதவீதத்தால் அதிகரித்தன. இந்நாடுகளிலிருந்து பெற்ற இறக்குமதிகளும் 3,550 இலட்சம் ரூபாய்களாக அமைந்து, 420 இலட்சம் ரூபாய்களால் அல்லது 13 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. மொத்த ஏற்றுமதிகளிலும் இறக்குமதிகளிலும் இச்சங்கத்தின் பங்கு முறையே 25 சதவீதமாகவும் 16 சதவீதமாகவும் அமைந்து, முறையே 4 சதவீதத்தாலும் 2 சதவீதத்தாலும் வீழ்ச்சியுற்றது. 1967ல் இச்சங்க நாடுகளுடனான வணிகப்பொருள் வர்த்தக மிகை 1,710 இலட்சம் ரூபாய்களாகவிருந்து, மீளப்பார்வையிடும் ஆண்டில் 1,500 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது.

தூரகிழக்கு ஆசியப் பொருளாதார ஆணைக் குழுப் பிரதேசங்களின் நாடுகளுக்கான ஏற்றுமதிகளின் பெறுமதி 4,920 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 930 இலட்சம் ரூபாய்கள் அல்லது 23 சதவீத விரிவைக் காட்டிற்று. மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் இப் பிரதேசத்திலிருந்து பெற்ற இறக்குமதிகளின் பெறுமதியும் 2,170 இலட்சம் ரூபாய்களால் அல்லது 29 சதவீதத்தால் 9,530 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தது. மொத்த ஏற்றுமதிகளில் இப்பிரதேசத்தின் பங்கு 24 சதவீதமாகவிருந்து முந்திய ஆண்டிற்குரியதைவிட எதுவித மாற்றமும் அற்றிருக்க, மொத்த இறக்குமதிகளில் அதன் பங்கு 44 சதவீதமாகவமைந்து, 2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 1967ல் 3,370 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறையைக் காட்டிய இப்பிரதேசத்தினதுடனான வர்த்தக நிலுவை, 1968ல் 1,240 இலட்சம் ரூபாய்களால் 4,610 இலட்சம் ரூபாய்களுக்குச் சீர்கேடடைந்தது.

### மக்கள் சீனக் குடியரசுடனான வர்த்தகம்

1968ல் மக்கள் சீனக் குடியரசுடனான இலங்கை வர்த்தகத்தின் மொத்தத் தொகை, முந்திய ஆண்டிற்குரியதுடன் ஒப்பிடும்போது, கூடிய அதிகரிப்பைக் காட்டிற்று. மீளப்பார்வையிடும் ஆண்டில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1,950 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 1967இனதிலும்பார்க்க 420 இலட்சம் ரூபாய்களால் அல்லது 27 சதவீதத்தால் அதிகரித்திருக்க, இறக்குமதிகளின் பெறுமதி 1968ல் 600 இலட்சம் ரூபாய்களால் அல்லது 32 சதவீதத்தால் 2,450 இலட்சம் ரூபாய்களுக்கு குறிப்பிடத்தக்கவளவில் அதிகரித்தது. 1967ல் ஏற்பட்ட 320 இலட்சம் ரூபாய்கள்கொண்ட வர்த்தக நிலுவைக்கெதிராக 1968ல் வர்த்தக நிலுவைக்குறை 500 இலட்சம் ரூபாய்களாகவிருந்தது.

இரப்பரே மக்கள் சீனக் குடியரசுக்கான பிரதான ஏற்றுமதி விடயமாகவமைந்தது. ஏற்றுமதிப் பெறுமானங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, பெரும்பாலும் இரப்பர் ஏற்றுமதியிலிருந்து கிடைத்த அதிகரித்த வருவாய்களின் விளைவினாலாகும். 1968ல் இரப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி 1,797 இலட்சம்

ரூபாய்களாகவமைந்து, முந்திய ஆண்டினத்திலும்பார்க்க 399 இலட்சம் ரூபாய்களால் அல்லது 29 சதவீதத்தால் அதிகமாகவிருந்தது. ஏற்றுமதி செய்யப்பட்ட இரப்பரின் அளவு 1967ன் 1,309 இலட்சம் இருத்தல்களுக்கெதிராக (59,376 மெற்றிக் தொன்), 1968ல் 1,827 இலட்சம் இருத்தல்களாக (82,872 மெற்றிக் தொன்) விளங்கிற்று. மீளப்பார்வையிடும் காலப் பகுதியில் தேங்காயெண்ணெயின் ஏற்றுமதிப் பெறுமதி 12 இலட்சம் ரூபாய்களால் அல்லது 9 சதவீதத்தால் 149 இலட்சம் ரூபாய்களுக்கு வீழ்ச்சியுற்றது.

மக்கள் சீனக் குடியரசிடமிருந்து இலங்கை இறக்குமதிசெய்த பிரதான பண்டம் அரிசியாகவேயிருந்தது. 1968ல் சுங்கப் பதிவேடுகளிற் பதிவுசெய்யப்பட்டபடியான அரிசி இறக்குமதிகளின் பெறுமதி 1,819 இலட்சம் ரூபாய்களாகவிருக்கையில், இது முந்திய ஆண்டிற்குரியதைவிட 758 இலட்சம் ரூபாய்கள் அல்லது 71 சதவீத அதிகரிப்பைக் காட்டிற்று.

மக்கள் சீனக் குடியரசுடனுன வர்த்தகக் கொடுப்பனவு ஒப்பந்தத்தின்கீழ் 1967 நவெம்பர் 6ந் தேதியிற் கைச்சாத்திடப்பட்ட 1968ம் ஆண்டுக்கான தாயேடு இலங்கையிலிருந்து 75,000 மெற்றிக் தொன் இரப்பர் ஏற்றுமதிகளுக்கெதிராக அவ்வாண்டில் 2,00,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு வழிவகை செய்தது.

இந்நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் மற்றுமொரு பிரதான இறக்குமதி விடயமாக விளங்கும் ஆடைவகைகளின் இறக்குமதிகள் 1968ல் 41 இலட்சம் ரூபாய்களால் அல்லது 18 சதவீதத்தால் 267 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. செத்தல் மிளகாயின் இறக்குமதிகள் 120 இலட்சம் ரூபாய்களுக்கு வகைகூறி 1967ற்குரியவையைவிட 54 இலட்சம் ரூபாய்கள் அதிகமாகவிருந்தன.[1] ஏனைய இறக்குமதிகள், சுத்தி கரிக்கப்பட்ட சீனி (50 இலட்சம் ரூபாய்கள்), பயறு (30 இலட்சம் ரூபாய்கள்), நூலும் முறுக்குநூலும் (17 இலட்சம் ரூபாய்கள்), உள்ளி (12 இலட்சம் ரூபாய்கள்) ஆகியவற்றைக் கொண்டிருந்தன.

### ஐ. ச. சோ. கு. உடனும், கிழக்கைரோப்பாவுடனுமான வர்த்தகம்

ஐ. ச. சோ. கு. உடனும், கிழக்கைரோப்பாவுடனுமான இலங்கையின் வர்த்தகம் 1968ல் 1967 உடன் ஒப்பிடும்போது, குறிப்பிடத்தக்க விரிவைக் காட்டியது ; ஏற்றுமதிகளானது 586 இலட்சம் ரூபாய்களால் அல்லது 56 சதவீதத்தால் 1,626 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. இப்பிரதேசத்திலிருந்து பெற்ற இறக்குமதிகளும், இக்காலப் பகுதியில், 156 இலட்சம் ரூபாய்களால் அல்லது 10 சதவீதத்தால் 1,797 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. இப்பிரதேசத்தினுடனுன வர்த்தக நிலுவை 171 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறையைக் காட்டிற்று. எனினும் இது 1967ல் பதிவுசெய்த 601 இலட்சம் ரூபாய்கள் கொண்ட குறைவிலும்பார்க்க முன்னேற்றமானதாக விளங்கிற்று. இப்பிரதேசத்தினுடனுன இலங்கை வர்த்தகத்தின் பெறுமதி மொத்த அந்நிய வர்த்தகத்தில் 8 சதவீதத்துக்கு வகைகூறிற்று.

முந்திய ஆண்டுகளைப் போலவே ஐ. ச. சோ. கு. தனது நிலைமையை முன்னேற்றி, இப்பிரதேசத்தினிலிருந்து தோன்றும் இலங்கையின் பிரதான வாடிக்கைக்காரராக விளங்கிற்று. இது, 1968ல் இப்பிரதேசத்திற்கு ஏற்றுமதிசெய்த மொத்தத்தில் 943 இலட்சம் ரூபாய்களுக்கு அல்லது 58

1. 1967இல் இறக்குமதி செய்யப்பட்ட 290.2 ஆயிரம் தொன்கள் செத்தல் மிளகாய்களுக்கெதிராக 1968இல் 351.8 ஆயிரம் தொன்கள் இறக்குமதிசெய்யப்பட்டன. இது உள்ளூர் உற்பத்தி 68 சதவீதத்தால் அதிகரித்தபோதும் ஏற்படுவதாயிற்று.

சதவீதத்துக்கு வகைகூறிற்று. 1968ல் ஐ. ச. சோ. கு. உக்கான ஏற்றுமதிகள். 1967 இனதுடன் ஒப்பிடும்போது, 372 இலட்சம் ரூபாய்களால் அல்லது 65 சதவீதத்தால் விரிவடைந்தன. ஐ. ச. சோ. கு. உக்கான ஏற்றுமதிகளின் விரிவு 432 இலட்சம் ரூபாய்கள் பெறுமதி கொண்ட தேங்காயெண்ணெயை ஏற்றுமதி செய்ததனுலேயாகும். 1967ல் இப்பெறுமதி 148 இலட்சம் ரூபாய்களாகும். தேங்காயெண்ணெய், முந்திய ஆண்டுகளில் பிரதான ஏற்றுமதி விடயமாக விளங்கிய இரப்பரைப் பதிலீடுசெய்து, ஐ. ச. சோ. கு. உக்கான பிரதான ஏற்றுமதி விடயமாக அமைந்தது. ஐ. ச. சோ. கு. உக்கான தேங்காயெண்ணெய் ஏற்றுமதிகளின் அளவு 1967ல் இருந்த 209 ஆ. அந்தர்களிலிருந்து 1968ல் 406 ஆ. அந்தர்களுக்குக் கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பு 94 சதவீதமாகும். 1968ல் இரப்பரின் ஏற்றுமதிகள் 29 இலட்சம் ரூபாய்களால் 205 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்தன. மீளப்பார்வையிடும் ஆண்டில் தேயிலை ஏற்றுமதிகளும் 1 இலட்சம் ரூபாய்களால் 141 இலட்சம் ரூபாய்களுக்குச் சிறிதளவால் வீழ்ச்சியுற்றன. கொப்பராவினது ஏற்றுமதிகள் 81 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, முந்திய ஆண்டினதைவிட 51 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்தன.

இப்பிரதேசத்துக்கான மொத்த ஏற்றுமதிகளில் 274 இலட்சம் ரூபாய்களாக அல்லது 17 சதவீதமாக விளங்கிய போலாந்து மக்கட் குடியரசுக்கான ஏற்றுமதிகள், 149 இலட்சம் ரூபாய்களால் அல்லது 119 சதவீதத்தால் கணிசமானவளவில் அதிகரித்தன. முந்திய ஆண்டுகளைப்போலவே இரப்பர் பிரதான ஏற்றுமதி விடயமாகி விளங்கி 113 இலட்சம் ரூபாய்களுக்கு வகைகூறிற்று. இது, 1967ம் ஆண்டுக்குரியதைவிட 45 இலட்சம் ரூபாய்களால் அல்லது 66 சதவீதத்தால் அதிகமாகவிருந்தது. தேங்காய்த் துருவலினது ஏற்றுமதிகள் 26 இலட்சம் ரூபாய்களாகவும், தேங்காயெண்ணெயினது ஏற்றுமதிகள் 44 இலட்சம் ரூபாய்களாகவும், தேயிலையினது ஏற்றுமதிகள் 83 இலட்சம் ரூபாய்களாகவும் அமைந்து, முறையே 18 இலட்சம், 31 இலட்சம் 52 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.

கிழக்கைரோப்பிய பிரதேசத்துக்கான மொத்த ஏற்றுமதிகளில் 139 இலட்சம் ரூபாய்கள் அல்லது 9 சதவீதமாக விளங்கிய ரூமேனியா சமத்துவக் குடியரசுக்கான ஏற்றுமதிகள் 1967ன் மட்டத்திலும்பார்க்க 48 இலட்சம் ரூபாய்கள் அல்லது 26 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. ரூமேனியாவுக்கான இரப்பர் ஏற்றுமதிகள் 101 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 58 இலட்சம் ரூபாய்களால் அல்லது 36 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன.

சேர்மன் சனநாயகக் குடியரசுக்கான ஏற்றுமதிகள், 42 இலட்சம் ரூபாய்களால் அல்லது 53 சதவீதத்தால் 121 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்து, இப்பிரதேசத்துக்கான மொத்த ஏற்றுமதிகளில் 7 சதவீதத்துக்கு வகைகூறின. தேங்காய்த் துருவலின் ஏற்றுமதிகள் 51 இலட்சம் ரூபாய்களால் 60 இலட்சம் ரூபாய்களுக்கு அதிகரித்திருக்க, தேங்காயெண்ணெயின் ஏற்றுமதிகள் 61 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, முந்திய ஆண்டினதைவிட 8 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தன. 1968ம் ஆண்டில் தேங்காய்த் துருவலும், தேங்காயெண்ணெயுமே சேர்மன் சனநாயகக் குடியரசுக்கான ஏற்றுமதி விடயங்களாக அமைந்தன. செக்கோசிலாவாக்கியாக் குடியரசுக்கான ஏற்றுமதிகள் 39 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 14 இலட்சம் ரூபாய்களால் அல்லது 56 சதவீதத்தால் அதிகரித்தன. பிரதான ஏற்றுமதி விடயமாகிய தேங்காய்த் துருவலின் ஏற்றுமதி 21 இலட்சம் ரூபாய்களாக விளங்கி, இலங்கையிலிருந்து அந்நாட்டுக்கான ஏற்றுமதிகளில் 54 சதவீதத்துக்கு வகைகூறிற்று. யூகோசிலேவிய சமத்துவ சமஷ்டிக் குடியரசுக்கான ஏற்றுமதிகள் 86 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 1967ம் ஆண்டுக்குரியதைவிட 54 இலட்சம் ரூபாய்கள் அதிகமாகவிருந்தன. யூகோசிலேவியாவுக்கான பிரதான ஏற்றுமதி விடயங்கள் 20 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய தேங்காயெண்ணெயும், 27 இலட்சம் ரூபாய்களாக விளங்கிய இரப்பருமாகும். ஹங்கேரி மக்கட் குடியரசுக்கான ஏற்றுமதிகள் 24 இலட்சம் ரூபாய்களாக அமைந்து 1967ம் ஆண்டுக்குரியதைவிட 14 இலட்சம்

ரூபாய்களாலதிகரித்தன. தேங்காயெண்ணெயின் ஏற்றுமதிகள் 11 இலட்சம் ரூபாய்களாக விளங்கி, அந்நாட்டுக்கான மொத்த ஏற்றுமதிகளில் 46 சத வீதத்துக்கு வகைகூறின. 1967ம் ஆண்டில் 11 இலட்சம் ரூபாய்களுக்கு வகைகூறிய பல்கேரிய மக்கட் குடியரசுக்கான ஏற்றுமதிகள், 1968ல் 10 இலட்சம் ரூபாய்களுக்குக்கீழ் வீழ்ச்சியுற்றன. மீளப்பார்வையிடும் ஆண்டில், இப்பிரதேசம் கொக்கோ ஏற்றுமதிகளில் 78 சதவீதப் பங்கைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும். இதனில், ஐ. ச. சோ. கு., இலங்கையிலிருந்தான மொத்த ஏற்றுமதிகளில் 59 சதவீதத்துக்கு வகை கூறியது. இதேபோன்று இப்பிரதேசம் 1968ன் கொப்பரா ஏற்றுமதிகளில் 24 சதவீதத்தை உட்கொண்டது.

1968ம் ஆண்டில் ஐ. ச. சோ. கு., போலாந்து, ரூமேனியா ஆகிய நாடுகள் பிரதான இறக்குமதிப் பொருட்கள் வழங்குபவர்களாக விளங்கின; இப்பிரதேசத்திலிருந்து பெற்ற மொத்த இறக்குமதிகளில் மேற்கூறிய நாடுகள் முறையே, 969 இலட்சம் ரூபாய்கள் அல்லது 54 சதவீதத்துக்கும், 340 இலட்சம் ரூபாய்கள் அல்லது 19 சதவீதத்துக்கும் 283 இலட்சம் ரூபாய்கள் அல்லது 16 சதவீதத்துக்கும் வகைகூறின. இப்பிரதேசத்திலிருந்து பெற்ற மொத்த இறக்குமதிகளின் பெறுமதி 1,797 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 156 இலட்சம் ரூபாய்களால் அல்லது 10 சதவீதத்தால் அதிகமாகவிருந்தது. ஐ. ச. சோ. கு. இலிருந்து பெற்ற பிரதான இறக்குமதி விடயமாகிய சீனி 341 இலட்சம் ரூபாய்களுக்கு வகைகூறிற்று ; இது, 1967ம் ஆண்டினதைவிட 31 இலட்சம் ரூபாய்களால் அல்லது 8 சதவீதத்தால் குறைவாகவிருந்தது. ஐ. ச. சோ. கு. இலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் பிரதான விடயங்களான தேயிலைப் பெட்டிகள் 37 இலட்சம் ரூபாய்களால் 86 இலட்சம் ரூபாய்களுக்கும், சீமெந்து 33 இலட்சம் ரூபாய்களால் 64 இலட்சம் ரூபாய்களுக்கும் அதிகரித்தன. பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள் 364 இலட்சம் ரூபாய்களிலும், ஆடைவகைகள் 33 இலட்சம் ரூபாய்களிலும், இரும்பும் உருக்கும் 24 இலட்சம் ரூபாய்களிலும் அமைந்து, முறையே 107 இலட்சம் ரூபாய்கள், 8 இலட்சம் ரூபாய்கள், 46 இலட்சம் ரூபாய்கள் கொண்ட வீழ்ச்சிகளைப் பதிவுசெய்தன. போலாந்து மக்கட் குடியரசிலிருந்து பெற்ற பிரதான இறக்குமதி விடயமாகிய சீனி 214 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, அந்நாட்டிலிருந்து செய்த மொத்த இறக்குமதிகளில் 63 சதவீதத்துக்கு வகைகூறிற்று. போலாந்துக் குடியரசிலிருந்து பெற்ற ஆடைவகைகள் 72 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 55 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. பல்கேரிய மக்கட் குடியரசிலிருந்து பெற்ற இறக்குமதிகள் 52 இலட்சம் ரூபாய்களாகவிருந்து, 1967ஐவிட 14 இலட்சம் ரூபாய்கள் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. சீனியின் இறக்குமதிகள் 51 இலட்சம் ரூபாய்களுக்கு வகைகூறின. செக்கோசிலேவாக்கியக் குடியரசிலிருந்து பெற்ற இறக்குமதிகள் 70 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 1967ன் மட்டத்தைவிட 24 இலட்சம் ரூபாய்களால் அல்லது 26 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றன. செக்கோசிலேவாக்கியாவிலிருந்து பெற்ற இறக்குமதிகளுள் 25 இலட்சம் ரூபாய்களால் உயர்வுற்று 36 இலட்சம் ரூபாய்களாக இருந்த ஆடை இறக்குமதிகளைத் தவிர்ந்த, ஏனையவை வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. ஹங்கேரிய மக்கட் குடியரசிலிருந்து பெற்ற இறக்குமதிகள் 35 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, எல்லையளவான 1 இலட்சம் ரூபாய்களால் அல்லது 3 சதவீதத்தால் அதிகரித்திருந்தன. சேர்மன் சனநாயகக் குடியரசிலிருந்து பெற்ற இறக்குமதிகள் 14 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 38 இலட்சம் ரூபாய்கள் அல்லது 73 சதவீதம் கொண்ட கூரிய வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. யூகோசிலேவியா சமத்துவ சமஷ்டிக் குடியரசிலிருந்து பெற்ற இறக்குமதிகள் 34 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, 44 இலட்சம் ரூபாய்களால் அல்லது 56 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றிருந்தன.

1968ல் இப்பிரதேசத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனி முழுவதும் 606 இலட்சம் ரூபாய்களாகவமைந்து, இந்நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட மொத்தச் சீனிப் பெறுமதியில் ஏறக்குறைய 62 சதவீதமாக விளங்

கியது. இதேபோல் இப்பிரதேசம், 1968ல் இங்கு இறக்குமதி செய்யப்பட்ட மொத்தப் பெற்ருேலிய இறக்குமதிகளில் 32 சதவீதத்தையும், மொத்தச் சீமெந்து இறக்குமதிகளில் 43 சதவீதத்தையும், மொத்தத் தேயிலைப் பெட்டி இறக்குமதிகளில் 88 சதவீதத்தையும் வழங்கிற்று.

## இருபுடைத் தீர்ப்பனவுக் கணக்குகள்

ஐ. ச. சோ. கு. உடனும், கிழக்கு ஐரோப்பாவிலும், மத்திய கிழக்கிலுமுள்ள சில நாடுகளுடனும், மக்கள் சீனக் குடியரசுடனும் இலங்கையினுல் கைச்சாத்திடப்பட்ட கொடுப்பனவு உடன்படிக்கைகளின் அடிப்படையில் உள்ள இருபுடைத் தீர்ப்பனவுக் கணக்குகளின் தேறிய மொத்தக் காலாண்டு நிலவரத்தை அட்டவணை II (ஒ) 15 எடுத்துக் காட்டுகின்றது.

1968ம் ஆண்டு முடிவிலுள்ள நிலை, இலங்கையிலிருந்து செத்தப்பட வேண்டிய தொகைகள் முந்திய ஆண்டின் முடிவிலுள்ள நிலையைவிட 788 இலட்சம் ரூபாய்களால் அதிகரித்துள்ளனவென்பதைக் காட்டுகின்றது. இவ்வதிகரிப்பு, சீனு, ஐ. ச. சோ. கு., கிழக்கைரோப்பிய நாடுகள் ஆகியவற்றிற்கே பொருந்தும்.

### அட்டவணை II (ஒ) 15

### இருபுடைத் தீர்ப்பனவுக் கணக்குகள்
### 1966—68 கணக்குகளின் தேறிய மொத்தக் காலாண்டு நிலைமை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| முடிவிலுள்ள தேறிய நிலை | சீனு, ஐ.ச.சோ.கு. ஏனைய கிழக்கைரோப்பிய நாடுகள்* | | மத்திய கிழக்கு நாடுகள்** | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | வரவு | பற்று | வரவு | பற்று | வரவு | பற்று |
| 1966 மாச்சு | — | 49.3 | — | 13.2 | — | 62.5 |
| யூன் | — | 6.3 | — | 3.3 | — | 9.6 |
| செத்தெம்பர் | — | 27.7 | — | 1.8 | — | 29.5 |
| திசெம்பர் | 8.1 | — | — | 4.1 | 4.0 | — |
| 1967 மாச்சு | 3.3 | — | — | 2.4 | 0.9 | — |
| யூன் | — | 2.1 | — | 2.4 | — | 4.5 |
| செத்தெம்பர் | 42.7 | — | — | 3.8 | 38.9 | — |
| திசெம்பர் | 104.3 | — | — | 2.4 | 101.9 | — |
| 1968 மாச்சு | 146.8 | — | 0.9 | — | 147.7 | — |
| யூன் | 132.2 | — | — | 2.2 | 130.0 | — |
| செத்தெம்பர் | 163.9 | — | — | 5.9 | 158.0 | — |
| திசெம்பர் | 183.1 | — | — | 2.4 | 180.7 | — |

* பல்கேரியா, செக்கோசிலவாக்கியா, சேர்மன் சனநாயகக் குடியரசு, ஹங்கேரி, போலாந்து, ரூமேனியா, யூகோசிலேவியா (1965 மாச்சு தொடக்கம்), கொரியா மக்கள் சனநாயகக் குடியரசு (1965 மாச்சு தொடக்கம்) ஆகிய நாடுகள்.

** ஐக்கிய அரபுக் குடியரசும் (1966 நவெம்பர் வரைக்கும்), சிரியாவும்.

குறிப்பு: வரவு = இலங்கையிலிருந்து கொடுபடவேண்டியது.
பற்று = இலங்கைக்கு வர வேண்டியது.

## வர்த்தகக் கொள்கையில் விருத்திகள்

### ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள்

(அ) 1968ம் ஆண்டு சனவரி தொடக்கம் ஐக்கிய அமெரிக்காவிற்கும் கனடாவிற்கும் ஏலங்களுக்கு வெளியாகத் தனிப்பட்ட முறையில் தேயிலை (கலவை செய்யப்படாதவை) ஏற்றுமதி செய்வதற்கு, காலயெல்லை 1968ம் ஆண்டு டிசெம்பர் 31ம் நாள்வரை நீடிக்கப் பட்டது (இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 14,783/1, 14,791/2, 14,799/2, 14,813/5, 14,828/1).

(ஆ) 1968ம் ஆண்டு சனவரி 20ம் நாள் தொடக்கம், இலங்கையிலிருந்து கூட்டுறவுத் தாபனங்களே சங்கு ஏற்றுமதிசெய்ய விடுத்த உத்தரவை நீக்கி, தனிப்பட்ட ஏற்றுமதியாளர்களும் ஏற்றுமதி செய்ய உத்தரவு வழங்கப்பட்டது (இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானி இல. 14,785/3).

(இ) I. 1968ம் ஆண்டு யூலை மாதம் 15ம் நாள் தொடக்கம் இலங்கையிலிருந்து பின்வரும் ஏற்றுமதிகளை வர்த்தக முறையில் ஏற்றுமதி செய்தல் தடைசெய்யப்பட்டது (இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானி இல். 14,810/4).

1. வன விலங்குகளும் அவற்றின் பகுதிகளும்.
2. இரும்பும், இரும்பில்லாத உலோகத் தள்ளும், உலோகக் கழிவும், நீறும், களிம்பும். சில இரும்பில்லாத உலோக ஒதுக்குத் தள்ளு ஏற்றுமதிசெய்ய அநுமதிச்சீட்டு, தொழிற்றுறை அமைச்சின் தொழிற்றுறை அபிவிருத்திப் பணிப்பாளரின் விதந்துரையின் மூலமே பெற்றுக்கொள்ளலாம்.
3. கழிவுக் காகிதம்.
4. தேன் மெழுகு.
5. தேங்காய்ப் பிண்ணாக்கு.
6. கோப்பி.
7. வெற்றுப் போத்தல்.
8. வெற்றுச் சாக்கு. எனினும், உரம் அல்லது கால்நடைத் தீனி இறக்குமதிசெய்யப்பட்ட வெற்றுச் சாக்குகளை அநுமதிச் சீட்டுப் பெற்று ஏற்றுமதி செய்யலாம்.
9. எள்ளு, பருத்தி விதை, இலவம் விதைகள்.
10. அரிசி.
11. பாவிக்கப்பட்ட ரயர்களும் ரியூப்புக்களும்.
12. கருங்காலி மரம்.
13. ஆமையோடு.

(இ) II. பின்வரும் ஏற்றுமதிப் பொருட்கள் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டில் உள்ளன. ஒவ்வொரு பண்டங்களுக்கு எதிரே அவற்றிற்கு ஏற்றுமதி உத்தரவுச் சீட்டு சம்பந்தமான தகவல் கொடுக்கப்பட்டுள்ளது.

| பண்டங்கள் | அநுமதிப் பத்திரம் அல்லது விதந்துரை, ஏனைய குறிப்பு முதலியன | அநுமதிப் பத்திரம் கொடுக்கும் அதிகாரப் பீடம் |
|---|---|---|
| 1. தேயிலை | — | தேயிலை ஏற்றுமதி ஆணையாளர் |
| 2. தேயிலை விதை, வேர், அரும்பு அல்லதுதேயிலை வெட்டு | — | தேயிலை கட்டுப்பாட்டாளர் |
| 3. கொப்பரா, தேங்காய்த் துருவல் தேங்காயெண்ணெய் | — | இலங்கைத் தெங்குப் பொருட் சபை |
| 4. இரப்பர் (தட்டை இரப்பர் மட்டும்) | — | பண்டக் கொள்வனவு ஆணையாளர் |
| 5. இரப்பர்—விதை, வேர், அரும்பு அல்லது இரப்பர் வெட்டு | — | இரப்பர் கட்டுப்பாட்டாளர் |
| 6. பப்பாப் பால் (பப்பெயின்) | அரசாங்கப் பகுப்பாய்வாளரின் திறமைச் சான்றிதழ் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 7. கயிற்றுத் தும்பு | காலத்துக்குக்காலம் அமைக்கப்படும் விசேட விதிக் கட்டுப்பாடு | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 8. மாணிக்கமும் அருங்கற்களும் | வெட்டி மினுக்கப்பட்டவை | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 9. விதைத் தேங்காய் | விவசாய அமைச்சின் விதந்துரையுடன் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 10. கற்றூளை—விசாக, அனுராதபுரி, பிறிம்றேஸ் வகை | வன விலங்குப் பாதுகாவலரின் விதந்துரையுடன் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 11. மேநாட்டு மருந்துகள் மருத்துவப் பொருட்கள் | சுகாதார சேவை அதிபரின் விதந்துரையுடன் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 12. முதிரை மரம் | வன பரிபாலகரின் விதந்துரையுடன் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 13. தொல் பொருள் | புதைபொருள் திணைக்கள ஆணையாளரின் அனுமதியுடன் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 14. கனிப்பொருள் (காரீயம் தவிர்த்து) | புவியியல் ஆய்வுப் பணிப்பாளரின் விதந்துரையுடன் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 15. கடல் வாழ் கம்பளிப் பூச்சி (பீச்-டீ-மேர்) | கடற்றொழிற் பணிப்பாளரின் விதந்துரைடயுன் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 16. சங்குகள் | கடற்றொழில் பணிப்பாளரின் விதந்துரையுடன் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 17. அம்பர் | தொழிற்றுறை அமைச்சின் தொழிற்றுறை அபிவிருத்தி பணிப்பாளரின் விதந்துரையுடன் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 18. தோல் (எருமை, மாடு, ஆடு, செம்மறி ஆடு ஆகியவை) | தொழிற்றுறை அமைச்சின் தொழிற்றுறை அபிவிருத்திப் பணிப்பாளரின் விதந்துரையுடன் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |
| 19. மருத்துவ இலை குழைகள் | ஆயுள்வேத ஆணையாளரின் விதந்துரையுடன் | இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் |

ஏனைய உள்நாட்டு உற்பத்திப் பொருட்களும் தயாரிப்புக்களும் ஏற்றுமதி செய்ய எவ்வித ஏற்றுமதி அநுமதிச் சீட்டுமின்றி அநுமதிக்கப்படும்.

இறக்குமதிக் கட்டுப்பாடு

1968ம் ஆண்டில் இறக்குமதி உத்தரவுச் சீட்டு வழங்கும் முறையில் ஒரு பெரிய மாற்றம் உண்டாயிற்று. இவை முற்பட்ட ஆண்டுகளில் எடுத்துள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதற்கான நடவடிக்கைகளாகவுள்ளன. 1968ம் ஆண்டு மே மாதம் 6ம் நாள் அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் செய்முறைக்கு வந்ததன் பிரகாரம் முன்னைய இறக்குமதி உத்தரவுச் சீட்டு வழங்கும் முறைகள் நீக்கப்பட்டு புதிய முறைகள் புகுத்தப்பட்டன. இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 2/68 என இலங்கை அரசாங்க வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட புதிய இறக்குமதி முறைகளின்படி இறக்குமதிப் பண்டங்கள் ' அ ' பிரிவு, ' ஆ ' பிரிவாகப் பிரிக்கப்பட்டன. இறக்குமதி உத்தரவுச் சீட்டுக்கெதிராக அந்நிய செலாவணி அனுமதிக்கப்படத்தக்க அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் வேண்டப்படாத இறக்குமதிப் பொருட்கள் ' அ ' பிரிவுக்கு உட்படுவன. இறக்குமதி உத்தரவுச் சீட்டுகளுக்கெதிராக (தனித்தனியும் கட்டில்லாப் பொதுப்படையாகவும்) அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படவேண்டிய இறக்குமதிப் பொருட்கள் ' ஆ ' பிரிவிற்கு உட்படுவன.

' அ ' பிரிவு இறக்குமதிப் பொருட்கள்

(1)(அ) ' அ ' பிரிவின்கீழ் இறக்குமதி செய்யப்படத்தக்க பொருட்கள் இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 2/68ன் அட்டவணை 1ல் காணப்படும் (இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானி இல. 14,800/3உம் அதன்பின் திருத்தப்பட்டவாறும்).

(2) இறக்குமதி அனுமதிப்பங்கு வளங்கப்படத்தக்க பதிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளருக்கு இறக்குமதி உத்தரவுச் சீட்டு வளங்கப்படும். (இறக்குமதியாளர் பதிவுசெய்யப்படுதல்பற்றி 1968ம் ஆண்டு மே மாதம் 5ந் தேதி வெளிவந்த இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 4/68 ற் காண்க.)

(3) கைத்தொழில் கடற்றொழில் அமைச்சின் விதந்துரையின் பிரகாரம் 'அ' பிரிவிலுள்ள இறக்குமதிப் பொருட்களை இறக்குமதிசெய்ய எந்தத் தொகுதி அல்லது வகுப்புத் தொழிற்றுரையினருக்கும், விசேட உண்மை உபயோகிதர் உத்தரவுச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

(4) சில அரசாங்க அல்லது அரசாங்கச் சார்புடைய முகாமையாளரும் கூட்டுத்தாபனங்களும் ' அ ' பிரிவிற் குறிக்கப்பட்ட இறக்குமதிப் பொருட்களை இறக்குமதிசெய்ய அநுமதி வழங்கப்படும்.

(5) இந்த இறக்குமதிப் பொருட்களுக்கு இறக்குமதி உத்தரவுச் சீட்டுக் கட்டணம் விதிக்கப்படமாட்டாது.

' ஆ ' பிரிவு இறக்குமதிப் பொருட்கள்

(1) இந்தப் பிரிவின்கீழ் உள்ள இறக்குமதிப் பொருட்கள் பின்வருமாறு அனுமதிக்கப்படும் :—

(அ) தனித்தனி இறக்குமதி உத்தரவுச் சீட்டுக்கள், அல்லது

(ஆ) கட்டில்லாப்பொது உத்தரவுச் சீட்டு.

(2) தனித்தனி இறக்குமதி உத்தரவுச் சீட்டின்கீழ் இறக்குமதிசெய்யக்கூடிய பொருட்கள் இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 2/68ல் உள்ள அட்டவணை II ல் குறிக்கப்பட்டுள்ளன. (இலங்கை

அரசாங்க அதிவிசேட வர்த்தமானி இல. 14,800/3 உம் அதன்பின் திருத்தப்பட்டவாறும்) கைத்தொழில் கடற்றொழில் அமைச்சு அல்லது உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் விதந்துரையின் பிரகாரம் இப்பிரிவின்கீழ் உள்ள பொருட்களின் இறக்குமதிக்கு உண்மை உபயோகிதர் உத்தரவுச் சீட்டுக்கள் வழங்கப்படும்.

(3) கட்டில்லாப் பொது இறக்குமதி உத்தரவுச் சீட்டின்கீழ் இறக்குமதி செய்யப்படத்தக்க பொருட்கள் இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 2/68 ன் அட்டவணை III ல் குறிக்கப்பட்டுள்ளன (இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானி இல. 14,800/3 உம் பின்னுல் திருத்தப்பட்டவையும்).

(4) (அ) அட்டவணை II ற் குறிப்பிட்ட பொருட்களுக்கு அநுமதிப் பங்கு வளங்கப்படத்தக்க பதிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளருக்கு இறக்குமதி உத்தரவுச் சீட்டு வழங்கப்படும்.

(ஆ) அட்டவணை IIIல் குறிப்பிட்ட இறக்குமதிப் பொருட்களை இறக்குமதி ஏற்றுமதித் திணைக்களத்திற் பதிவுசெய்யப்பட்ட இறக்குமதியாளர்களும், கைத்தொழில் கடற்றொழில் அமைச்சிற் பதிவுசெய்யப்பட்ட தொழிற்றுறையாளரும், கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டின்கீழ் இறக்குமதி செய்யலாம்.

(5) இந்த இறக்குமதிப் பொருட்களுக்கு இறக்குமதி உத்தரவுச் சீட்டுக் கட்டணம் விதிக்கப்படமாட்டாது.

(6) 'ஆ' பிரிவிலுள்ள இறக்குமதி வளங்களுக்கான அந்நிய செலாவணி மத்திய வங்கியின் அதிகாரத்தோடு அளிக்கப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்களுக்கு எதிராக வர்த்தக வங்கிகளால் விடுக்கப்படும் (1968ம் ஆண்டு மே மாதம் 5ந் தேதிய இலங்கை அரசாங்க அதிவிசேட வர்த்தமானி இல. 14,800/3 பிரகாரம்).

பிரிவுகள் 'அ', 'ஆ' விற் குறித்துள்ள இறக்குமதிப் பொருட்களின் மாற்றங்கள் 1968ம் ஆண்டு மே மாதம் 31 ந் தேதியிலும், ஒற்றோபர் 19ந் தேதியிலும் வெளிவந்த அரசாங்க அதிவிசேட வர்த்தமானிகள் இல. 14,803/7லும், இல. 14,824/1லும் குறிக்கப்பட்டுள்ளன.

இறக்குமதிக் கட்டுப்பாட்டு அறிவித்தல் இல. 2/68 ன் அட்டவணை III இல் குறிக்கப்பட்ட பொருட்களை, அந்நிய உதவி அல்லது கடன் உடன்படிக்கைகளின்கீழ் இறக்குமதிசெய்யவிருப்பின், அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கத் தேவையில்லாத, விசேட உதவி உத்தரவுச் சீட்டுக்கள் வழங்கப்படும். ஆயினும் 1968 ம் ஆண்டின் இறக்குமதி உத்தரவளித்தல் (கட்டணம் இறுப்பு) ஒழுங்கு விதிகளின் 2ம் ஒழுங்கு விதியின்படி, இத்தகைய உத்தரவுச் சீட்டுக்கள் 15 சதவீதமான உத்தரவுச் சீட்டுக் கட்டணத்திற்கு உட்படுவனவாகும்.

### அந்நிய செலாவணி வரவுசெலவுத் திட்டம் :

1968 மேயில் கொண்டுவரப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் வரைக்கும், சகல இறக்குமதி விடயங்களும் வளங்களை ஒதுக்கும் கருவியாக அந்நிய செலாவணி வரவுசெலவுத் திட்டம் நடைமுறையில் இருந்துவந்தது. அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டம் கொண்டு வரப்பட்டதன் விளைவாலும், அதனோடு இணைந்து செயலாற்றுவதற்காக கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டுக்களின்கீழ் அநேகமான இறக்குமதி விடயங்கள்மீது கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டபடியாலும், முன்பு

அந்நிய செலாவணி வரவுசெலவுத் திட்டத்தால் கையாளப்பட்ட கட்டுப்பாட்டின் ஒதுக்கீட்டுமுறை ஓரளவு நீக்கப்பட்டது. 1968ம் ஆண்டுக்கான அந்நிய செலாவணி வரவு செலவுத் திட்டம் வரையப்படும்பொழுது இரு முக்கிய கொள்கை ஏற்பாடுகள் கவனத்துக்கு எடுக்கப்பட்டன. அவையாவன, 1967 நவெம்பர் மாத நாணய மதிப்பிறக்கமும், 1968 மேயில் கொண்டு வரப்பட்ட அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்த் திட்டமுமாகும். இதற்கான நிதி வளங்களாவன, 1968ம் ஆண்டின் ஏற்றுமதி வருவாய்களும், 1968ல் எதிர்பார்க்கப்பட்ட பண்ட உதவிகளும் 1965, 1966, 1967 ஆகிய ஆண்டுகளில் முடிவுசெய்யப்பட்ட உதவிகளிலிருந்து உபயோகிக்கப்படாத எச்சத் தொகைகளுமாகும்.

1968ன் முதல் அரைப்பகுதிக்கான இறக்குமதி ஒதுக்கீடுகள், ச. பு. அ. வ. இனுல் இலங்கை உதவிக் குழுவுக்கு வழங்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு இணங்க, 1968ற்கான நிதிக் குறைவுடைய அந்நிய செலாவணி வரவுசெலவுத் திட்ட வரைவின் அடிப்படையிலேயே வழங்கப்பட்டது. 1968 மே 6இல் அ. செ. உ. சா. திட்டம் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டபோது, இவ் ஒதுக்கீடுகளுக்கு இயைப்பான அநேகமான உத்தரவுச் சீட்டுக்களும் வரையப்பட்டு, பொறுப்பேற்றல்களும் முற்ருகிவிட்டன.

1968 மே 6ஆந் தேதி தொடக்கம் சகல கொடுப்பனவுகளும் வருவாய்களும் இரு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. முதலாவது விடயத்தில் (‘அ’ வகுப்பில்) அந்நிய செலாவணி வருவாய்களுக்கு அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதில்லை. அதேபோலவே ‘‘ அ வகுப்பு ’’ விடயங்களுக்கான அந்நிய செலாவணிக் கொடுப்பனவுகளுக்குச் சான்றிதழ்கள் கையளிக்கப்பட வேண்டியதுமில்லை. இரண்டாவது விடயத்தில் (‘ஆ’ வகுப்பு) வருவாய்களுக்கு அந்நிய செலாவணி உரிமைச் சான்றிதழ் வழங்கப்படற்குரியதாயிருக்க, கொடுப்பனவுகளுக்கும் சான்றிதழ்கள் கையளிக்கப்பட வேண்டியிருந்தது.

‘அ’ தொகுதியில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான பண்டங்களாவன, உணவுப் பொருட்கள், மருந்துகள், வளமாக்கிகள், எரிபொருட்களும் மசகுப் பொருட்களும், அரசாங்கத் திணைக்களங்கள், உள்ளூர்ச் சபைகள், ஏனைய அரசாங்க, அரசாங்க சார்புடைய முகவர் நிலையங்கள் ஆகியனவற்றின் இறக்குமதிகளுமாகும். இப்பண்டங்கள் யாவும் அடிப்படை வாழ்க்கைச் செலவு விடயங்களாகவும் அல்லது சுகாதாரம், போக்குவரத்து போன்ற அடிப்படைச் சேவைகளை வழங்கும் தாபனங்களால் இறக்குமதிசெய்யப்படும் விடயங்களாகவும் அமைவதனுலேயே இவை ‘‘ அ தொகுதியில் ’’ உட்புகுத்தப்பட்டுள்ளன.

கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டின்கீழ் இறக்குமதிசெய்யப்படக்கூடிய விடயங்கள் 1968 மே 5ஆந் தேதிய வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்டு, பல்வேறு புது விடயங்களை அடக்குவதற்காக பின்பு திருத்தப்பட்டன.1 ‘ஆ’ தொகுதியின்கீழ் பகுக்கப்பட்டுள்ள மற்றைய சகல இறக்குமதிகளும், இறக்குமதி ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாள்ரால் அல்லது கைத்தொழில் கடற்ெறுழில் அமைச்சினுல் வழங்கப்படும் உத்தரவுச் சீட்டுக்கள் அவசியம். 1967 இலும் 1968லும் வழங்கப்பட்ட உத்தரவுச் சீட்டுக்கள் சப்பந்தமான தரவுகளை அட்டவணை II (ஒ) 16 தருகிறது

---

1. அதிவிசேட அரசாங்க வர்த்தமானி இலக்கங்கள், 1968 மே 5இன் 14,800/3, 1968 மே 31இன் 15,803/7, 1998 ஒற்ரேபர் 19இன் 14,824/1.

அட்டவணை II (ஓ) 16

## 1968 இறக்குமதி அமைப்புத்திட்டமும் 1967 ஆண்டுக்கான ஒப்பியற் தரவுகளும் *

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1967ல்வழங்கப்பட்டஉத்தரவுச் சீட்டுகள் | 1968ல் வழங்கப்பட்ட உத்தரவுச் சீட்டுகள் | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | அ தொகுதி | ஆ தொகுதி | |
| உணவு ஆணையாளரின் இறக்குமதிகள் .. | 581 | 704 | — | 704 |
| ஏனைய உணவுப் பண்டங்கள் .. .. | 253 | 281 | 10 | 291 |
| ஆடைவகைகள் .. .. .. | 65 | 43 | 26 | 69 |
| வளமாக்கிகள் .. .. .. | 101 | 132 | — | 132 |
| பெற்ரூலியத் தயாரிப்புக்கள் .. .. | 152† | 202** | 11 | 213 |
| மருந்துகள் .. .. .. | 17 | 20 | — | 20 |
| சீமெந்து .. .. .. | 15 | 13 | 14 | 27 |
| அரசாங்க திணைக்களங்கள் .. .. | 203 | 216 | — | 216 |
| கைத்தொழிலல்லா கூட்டுத்தாபனங்கள் .. | 68 | 132 | 3 | 135 |
| தனியார் துறைக் கைத்தொழிலும் கடற்றொழிலும் குடிசைக்கைத்தொழில்களும் கூட்டுறவுகளும் .. | 305 | 262 | 136 | 398 |
| கைத்தொழிற் கூட்டுத்தாபனங்கள் .. | 97 | 100 | 202 (அ) | 302 |
| ஏனைய வர்த்தக அனுமதிப்பங்கு விடயங்கள் .. | 185 | 100 | 33 (ஆ) | 133 |
| நேரடி உபயோகிதர் விடயங்கள் .. .. | 70 | 51 | 200 | 251 |
| மொத்தம் | 2,112 | 2,256 | 635 | 2,891 |

மூலம்: திட்ட அமைப்பு பொருளாதார அலுவல்கள் அமைச்சு.

* 1967, 1968 உக்கான தரவுகள் ஒப்பிடக்கூடியவையல்ல. இவ்விரு ஆண்டுகளுக்கான தரவுகளை ஒப்பிடும்போது, 1967 நவெம்பர் மாத இலங்கை ரூபா மதிப்பிறக்கத்துக்கும் 1968, உக்கான தரவில் உட்படுத்தப்பட்ட கட்டில்லாப் பொது உத்தரவுச் சீட்டு விடயங்களுக்கும் இடமளிக்கப்படல் வேண்டும்.

† ''செலாவணியற்ற அடிப்படையில்'' விமான, கடற்போக்கு வரத்துக்கான எரிபொருள் இறக்குமதியின் 480 இலட்சம் ரூபாய்களை உள்ளடக்கும்.

** '' செலவணியற்ற அடிப்படையில் '' விமான, கடற் போக்குவரத்துக்கான எரிபொருள் இறக்குமதியின் 710 இலட்சம் ரூபாய்களை உள்ளடக்கும்.

(அ) கட்டில்லாப் பொது உத்தரவுச்சீட்டின்கீழ் பிரசுரிக்கப்பட்ட மூலப்பொருள்களின் இறக்குமதிக்காகத் திறக்கப்பட்ட 1,350 இலட்சம் ரூபாய்கள் தொண்ட நாணயக் கடிதங்களை உள்ளடக்கும்.

(ஆ) கட்டில்லாப் பொது உத்தரவுச்சீட்டு விடயங்களை இறக்குமதி செய்வதற்காகத் திறக்கப்பட்ட 1,730 இலட்சம் ரூபாய்கள் கொண்ட நாணயக் கடிதங்களை உள்ளடக்கும்.

1968ம் ஆண்டில் இறக்கிகுதிகளுக்கென வழங்கப்பட்ட உத்தரவுச் சீட்டுக்களின் மொத்தப் பெறுமதி (க. பொ. உ. சீட்டு விடயங்களை இறக்குமதி செய்வதற்காகத் திறக்கப்பட்ட நாணயக் கடிதங்களும் உட்பட), 28,910 இலட்சம் ரூபாய்களாக அமைந்து 1967இல் வழங்கப்பட்ட உத்தரவுச் சீட்டுக்களின் பெறுமதியைவிட 7,790 இலட்சம் ரூபாய்கள் அதிகமாகவிருந்தது. உத்தரவுச் சீட்டுப் பெறுமதியிலேற்பட்ட அதிகரிப்பு, 1967 நவெம்பரில் இலங்கை ரூபாவை மதிப்பிறக்கம் செய்ததன் விளைவால், உத்தரவுச் சீட்டுக்களை மீள மதிப்பீடு செய்ததனுலும், 1967ம் ஆண்டில் இறக்குமதி செய்வதற்கென வழங்கப்பட்ட உத்தரவுச் சீட்டுக்களை 1968இல் பாவிப்பதற்கென 1,100 இலட்சம் ரூபாய்கள் தொண்ட தொகையை மீளச் செல்லுபடியாக்கல் செய்ததனுலுமாகும்.

1968இல் 'அ' தொகுதி இறக்குமதிக்கென வழங்கப்பட்ட உத்தரவுச் சீட்டுக்கள், வழங்கப்பட்ட சீட்டுக்களின் மொத்தப் பெறுமதியில் 22,560 இலட்சம் ரூபாய்களாக அல்லது 78 சதவீதமாக அமைந்திருக்க, 'ஆ' தொகுதி இறக்குமதிகளைப் பொறுத்தவரையில் அது, 6,350 இலட்சம் ரூபாய்களாக அல்லது 22 சதவீதமாக அமைந்தது. இரண்டாவது விடயத்தைப் பொறுத்தமட்டில் மூலப்பொருட்களை இறக்குமதி செய்வதற்காக அரசாங்கக் கைத்தொழிற் கூட்டுத்தாபனங்களால், 1,350 இலட்சம் ரூபாய்கள் பெறுமதியான நாணயக் கடிதங்கள் திறக்கப்பட்டன. கீழ்வரும் அட்டவணை, நான்கு பொருளுதவித் திட்டங்களின்கீழ் 1968ல் பெறப்பட்ட இறக்குமதிகளின் பெறுமதியைத் தருகின்றது.

### அட்டவணை II (ஒ) 17

பண்ட உதவித் திட்டம் — 1968இன் வருகைகள்

பத்து இலட்சம் ரூபாய்கள்

| | திட்டத்தின்கீழான நுகர்ச்சிப் பொருட்கள் | | | | | நடுத்தர முதலீட்டப் பொருட்கள் | | | | | கூட்டு மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | மொத்தம் | 1 | 2 | 3 | 4 | மொத்தம் | |
| அவுஸ்திரேலியா | — | — | 1.11 | 3.79 | 4.90 | — | — | 0.61 | 0.97 | 1.58 | 6.48 |
| சேர்மன் சமஷ்டிக் குடியரசு | — | — | — | 0.92 | 0.92 | — | 12.76 | 11.02 | 1.81 | 25.59 | 26.51 |
| இந்தியா | — | — | — | — | — | — | — | 6.43 | — | 6.43 | 6.43 |
| யப்பான் | — | — | 0.61 | — | 0.61 | — | 6.33 | 21.74 | — | 28.07 | 28.68 |
| பிரான்சு | — | 0.14 | — | — | 0.14 | — | 12.65 | — | — | 12.65 | 12.79 |
| ஐ.இ. | — | — | — | — | — | 3.36 | 12.68 | 37.43 | 24.0 | 55.87 | 55.87 |
| ஐ.அ.நா. | 0.03 | 57.56 | 49.87 | — | 107.46 | 1.81 | 15.13 | — | — | 16.94 | 124.40 |
| கனடா | — | — | ... | 11.00 | 11.00 | 0.09 | 1.50 | 0.41 | — | 2.00 | 13.00 |
| மொத்தம் | 0.03 | 57.70 | 51.59 | 15.71 | 125.03 | 5.26 | 61.05 | 77.64 | 5.18 | 149.13 | 274.16 |

மூலம்: திட்ட அமைப்பு பொருளாதார அலுவலக அமைச்சு.

1968ல் நான்கு திட்டங்களின்கீழும் வந்தடைந்த பொருளுதவியின் மொத்தப் பெறுமதி 2741.60 இலட்சம் ரூபாய்களாகும். இதனில் 1491.30 இலட்சம் ரூபாய்கள் அல்லது 54.5 சதவீதமானவை நடுத்தர முதலீட்டப் பொருட்களைக் கொண்டிருக்க, 1250.30 இலட்சம் ரூபாய்கள் அல்லது 45.5 சதவீதமானவை நுகர்ச்சிப் பொருட்களைக் கொண்டிருந்தன. பெரும்பகுதியான 1292.30 இலட்சம் ரூபாய்களைக் கொண்ட உதவிகளின் வருகை மூன்றாவது திட்டத்தின்கீழ் வந்தடைந்திருக்க, முதலாவது, இரண்டாவது, நான்காவது திட்டங்களின்கீழ் வந்தடைந்த தொகைகள் முறையே 52.9 இலட்சம் ரூபாய்கள், 1187.5 இலட்சம் ரூபாய்கள் 208.9 இலட்சம் ரூபாய்களாக விளங்கின. நான்கு திட்டங்களின்கீழ் எட்டு நாடுகள் உதவிகளை வழங்கின.

அட்டவணை II (ஒ) 18, 1968ல் உதவி வருகைகளின் பெறுமதியைப் பண்ட வகையில் பகுத்துக் காட்டுகின்றது. நடுத்தர முதலீட்டப் பொருட்கள் வகுப்பில் வளமாக்கிகள், கைத்தொழில் மூலப் பொருட்களும் இயந்திரமும், வர்த்தக வாகனங்கள் ஆகியன மிக முக்கிய வருகைகளாக அமைந்து, 1968இனது மொத்த உதவி வருவாய்களின் பெறுமதியில் முறையே 22.7 சதவீதம், 9.2 சதவீதம், 8.2 சதவீதங்களாக அமைந்தன. நுகர்ச்சிப் பொருட்கள் வகையில் கோதுமை மா, ரயர்களும் ரியூப்புகளும் ஆகியன மிக முக்கிய உதவி வருகைகளாக அமைந்து, 1968ல் வந்தடைந்த உதவி வருவாய்களின் மொத்தப் பெறுமதியில் முறையே 42.2 சதவீதமாகவும், 1.9 சதவீதமாகவும் அமைந்தன.

அட்டவணை II (ஒ) 18

1968ல் உதவி வருகைகள் — பண்டவகைப்படி

| பண்டங்கள் | பெறுமதி ப. இ. ரூ. | சதவீதப் பங்கு |
|---|---|---|
| நடுத்தர முதலீட்டப் பொருட்கள் | | |
| வளமாக்கிகள் | 62.32 | 22.7 |
| கைத்தொழில் மூலப்பொருட்களும் இயந்திரமும் | 25.25 | 9.2 |
| இழுபொறிகளும் துணை உறுப்புக்களும் | 6.28 | 2.3 |
| ஏனைய இயந்திரமும் துணை உறுப்புக்களும் | 1.81 | 0.7 |
| வர்த்தக வாகனங்கள் | 22.47 | 8.2 |
| கட்டடப் பொருட்கள் | 3.83 | 1.4 |
| பொறியியல் களஞ்சியங்கள் | 2.17 | 0.8 |
| காகிதமும், செய்தித் தாள்களும் | 0.41 | 0.2 |
| கடலியந்திரங்கள் | 0.61 | 0.2 |
| அடிப்படை உலோகம் | 0.02 | ... |
| அரசாங்கத் திணைக்களங்களினதும் கூட்டுத்தாபனங்களினதும் ஏனைய இறக்குமதிகள் | 13.37 | 4.9 |
| தனியார் துறைக்கான ஏனைய சாதனம் | 1.37 | 0.5 |
| மோட்டார் துணையுறுப்புக்கள் | 7.37 | 2.7 |
| நாற்று உருளைக்கிழங்குகள் | 0.53 | 0.2 |
| செய்தக்கமை ஆய்தல் | 0.43 | 0.2 |
| கரும்பு பயிர்ச்செய்கைச் சாதனம் | 0.89 | 0.3 |
| மொத்தம் | 149.13 | 54.5 |
| நுகர்ச்சிப் பொருட்கள் | | |
| கோதுமை மா | 115.78 | 42.2 |
| மஞ்சள் தானியம் | 2.99 | 1.1 |
| ரயர்களும் ரியூப்களும் | 5.34 | 1.9 |
| மருந்து வகைகள் | 0.55 | 0.2 |
| பால் உணவுகள் | 0.37 | 0.1 |
| மொத்தம் | 125.03 | 45.5 |
| கூட்டு மொத்தம் | 274.16 | 100.0 |

மூலம்: அமைப்புத்திட்ட பொருளாதார அலுவலக அமைச்சு.

### சுங்கத் தீர்வைகள்

இவ்வாண்டுப் போக்கில் ஏற்றுமதி, இறக்குமதித் தீர்வைகள்மீது பின் வரும் மாற்றங்கள் விதிக்கப்பட்டன:

ஏற்றுமதித் தீர்வைகள்: 8. 5. 1968 — பைக்கற்றுகளில் அடைக்கப் பட்ட தேயிலைமீது விதிக்கப்பட்ட ஏற்றுமதித் தீர்வை இருத்தலுக்கு 15 சதங் களால் இருத்தலுக்கு 25 சதங்களாகக் குறைக்கப்பட்டது. ஒவ்வொரு பைக் கற்றினதும் தேறிய நிறை 2.20 இருத்தல்களுக்கு அல்லது 1 கிலோகிராமுக்கு மேற்பட்டதாயும், தேயிலைப் பைக்கற்றின் சுற்றுறை, தேயிலைப் பெட்டி, அட்டைப் பெட்டி அல்லது புற அட்டை ஆகியவற்றின்மீது 'இலங்கை யில் அடைக்கப்பட்ட சுத்தமான தேயிலை' என்ற சொற்கள் தெளிவாக எழுதப்பட்டிருத்தலும் வேண்டும் (இலங்கை அரசாங்க வர்த்தமானி இல. 14,813/9).

*9. 10. 1968* — ஒவ்வொரு இருத்தல் திடீர் தேயிலைமீது விதிக்கப்படும் 40 சதங்கள் கொண்ட ஏற்றுமதித் தீர்வை நீக்கப்பட்டது (இலங்கை அரசாங்க வர்த்தமானி அதிவிசேட இல. 14,822/4).

*16. 11. 1968* — அருங்கற்கள்மீதும், ஓரளவு அருங்கற்கள்மீதும் விதிக்கப்பட்ட 5 சதவீதம் கொண்ட பெறுமான விகிதவரி நீக்கப்பட்டது (இலங்கை அரசாங்க வர்த்தமானி அதிவிசேட இல. 14,828/1).

இறக்குமதித் தீர்வைகள் : *3. 8. 1968* — ஓகத்து 3லிருந்து பிரசெல்ஸ் இடுபெயர்த் தொகுதிமுறை அடிப்படையில் ஓர் புதிய சுங்கத் தீர்வுத் திரட்டு எஸ். ஐ. ரி. சி. அடிப்படையிலமைந்த சுங்கத் தீர்வைத் திரட்டைப் பதிலீடுசெய்தது. புதிய தீர்வைத் திட்டத்தின்கீழ் சகல இறக்குமதிகளும் குறித்து வரையறுக்கப்பட்டு, இறக்குமதித் தீர்வைகள் பின்வரும் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளன.

(அ) தீர்வையற்றவை : உணவுப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், அத்தியாவசிய நுகர்ச்சிப் பொருட்கள் கைத்தொழிற் கமத்தொழில் இயந்திரங்கள்.

(ஆ) 10% விருப்புச் சலுகையும் 20% பொதுவும் : அத்தியாவசியமற்ற விடயங்கள்.

(இ) 50% — 60% மட்டங்கள் : அநேகமாக அரசாங்க வருமான நோக்கத்துக்காக புகைப்படப் பொருட்கள், மின்விளக்குச் சாதனம், சைகைச் சாதனங்கள், ஒலிபெருக்கி போன்றவைமீது விதிக்கப்படும் தீர்வைகள்.

(ஈ) 100%— பாதுகாப்பு வீதங்கள்— மேலதிக இறக்குமதியைத் தடுக்கு முகமாக அல்லது உள்நாட்டு கைத்தொழில்களைப் பாதுகாக்கும் முகமாக சில க. பொ. உ. விடயங்கள்மீது விதிக்கப்படும் தீர்வைகளாகும்.

(உ) 300% வரை— தடுப்பு வீதங்கள் : மதுபானம் புகையிலை, ஆடம்பர வாகனங்கள் போன்றவைமீது விதிக்கப்படும் தீர்வைகள்.

வர்த்தக உடன்படிக்கைகள்[1]

ரூமேனிய சமத்துவக் குடியரசு

1956 மாச்சு 16ஆந் தேதிய வர்த்தகக் கொடுப்பனவு உடன்படிக்கையின் அமைப்பின்கீழ், ரூமேனிய சமத்துவக் குடியரசுடன் பொருளாதார, தொழில்நுட்ப கூட்டுறவுபற்றிய ஓர் உடன்படிக்கை 1968 பெப்புருவரி 9ஆந் தேதி கைச்சாத்திடப்பட்டது. இவ்வுடன்படிக்கை விதிகளின்படி ரூமேனியாவினால் வழங்கப்படும் மூலதனப் பொருட்கள், சேவைகள் தொழில்நுட்ப உதவிகளுக்கு மாறாக, ரூமேனிய பொருளாதாரத்துக்கு வேண்டிய இலங்கைப் பொருட்களை வழங்குவதற்கு இலங்கை உடன்பட்டுள்ளது. இதே நாளிற் செய்யப்பட்ட கடிதப் பரிமாறல்களின்படி, 1968-75 காலப்பகுதியில், இலங்கை, ரூமேனிய சமத்துவக் குடியரசுக்கு வருடாந்தமாக 10,000 தொன் இரப்பரை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவித்துள்ளது. எந்தவொரு ஆண்டிலும் கப்பலேற்றப்பட வேண்டிய உண்மையான அளவும், கப்பலேற்றுவதற்குரிய நிபந்தனைகளும் விதிகளும் ஆண்டின் தொடக்கத்தில் இரு பக்கதார்களாலும் முடிவு செய்யப்படல் வேண்டும்.

ஐ. ச. சோ. கு.

1969—70 காலப்பகுதியில் இரு பகுதியினராலும் வழங்கப்படும் பொருட்கள்பற்றிய உடன்படிக்கையொன்று ஐ. ச. சோ. கு. உடன் 1968 ஓகத்து 4ந் தேதி கைச்சாத்திடப்பட்டு, 1969 சனவரி 1ஆந் தேதியிலிருந்து நடைமுறைக்கு வந்தது. இவ்வழங்கல்கள் யாவும், 1958 பெப்புருவரி 8ஆந் தேதி கைச்சாத்திடப்பட்ட வர்த்தகக் கொடுப்பனவு உடன்படிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க செயற்படுத்தப்படல் வேண்டும்.

---

1. இப் பகுதியில் ஆய்வுரைசெய்யப்பட்ட வர்த்தக உடன்படிக்கைகளைவிட, இலங்கை, வேறுபல நாடுகளுடன் வர்த்தக அல்லது கொடுப்பனவு உடன்படிக்கைகளைத் தொடர்ந்து நடைமுறையில் வைத்திருந்தது.